17.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயத்திற்குதடையில்லா மின்சாரம்

மேட்டூர்:மின்தேவை சரிவால், விவசாய நிலங்களுக்கு, 24 மணிநேர மின் சப்ளை கிடைத்தது; ஆனால், நிலத்தில் ஈரப்பதம் இருப்பதால், மின் மோட்டார் இயக்க வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த சில நாட்களாக, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்வதால், நேற்று முன்தினம், 9,270 மெகாவாட்டாக இருந்த தமிழக மின்தேவை நேற்று, 8,470 மெகாவாட்டாக சரிந்தது.

இதனால் மின் வாரியம், தமிழகம் முழுவதுமான விவசாய நிலங்களுக்கு, 24 மணிநேரமும் மும்முனை மின்சாரம் வழங்கியது. எனினும், விளைநிலங்களில் ஈரப்பதம் இருப்பதால், மும்முனை மின்சாரத்தை பயன்படுத்தி, 'பம்ப்செட் மோட்டார்'களை, விவசாயிகள் இயக்கவில்லை.

மழை தீவிரம் குறைந்து, மோட்டார்களை இயக்கும் சூழல் ஏற்படும்போது, மின்தேவை அதிகரிக்கும் என்பதால், வழக்கம் போல, விவசாயத்துக்கான மும்முனை மின் வினியோக நேரத்தை வாரியம் குறைத்து விட வாய்ப்புள்ளது என, விவசாயிகள் கருதுகின்றனர்.

### அடைமழையால் மூழ்கின சாலைகள் அணைகளில் நீர் சேமிப்பு குறைவு தான்

தமிழகத்தில் கொட்டி தீர்த்து வரும் பருவமழையால், சாலைகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. ஆனால், அணைகளில் நீர் சேமிப்பு பெரிய அளவில் இல்லை.

மேட்டூர், பவானிசாகர், முல்லைப்பெரியாறு உள்ளிட்ட, 15 முக்கிய அணைகளின் மூலம், மாநிலத்தின் பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தி

செய்யப்படுகிறது. இந்த அணைகளை, ஒவ்வொரு சாகுபடி பருவத்தின் போதும், எப்போது திறக்க வேண்டும் என்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுஉள்ளன. 15 அணைகளின் மொத்த கொள்ளளவு, 198 டி.எம்.சி., ஆகும்.

வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன், அணைகளில், 60 டி.எம்.சி.,க்கும் குறைவாகநீர் இருந்தது. பருவமழை துவங்கிய பின், அணைகளின் நீர்மட்டம்உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அணைகளில் நீர்இருப்பு குறைவாகவே உள்ளது. நேற்று, 15 அணைகளில், 101 டி.எம்.சி., நீர் மட்டுமே இருந்தது. அணைகளுக்கு நீர் வரும் தடங்களில் அடைப்பு உருவானதே, இதற்கு முக்கிய காரணம். பொதுப்பணித்துறையினர் முறையாக பராமரிப்பு பணிகளை செய்துஇருந்தால், அணைகளின் நீர்மட்டம் இந்நேரம் முழு கொள்ளளவைஎட்டியிருக்கும்.

### மழை நிவாரணம்: முதல்வர் ஆலோசனை

சென்னை;மழை பாதிப்பு மற்றும் நிவாரண நடவடிக்கை குறித்து, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன், முதல்வர் ஜெயலலிதா, நேற்று அவசர ஆலோசனை நடத்தினார்.சென்னை உட்பட பல மாவட்டங்களில், மழை பாதிப்பு மற்றும் நிவாரண பணிகள் குறித்து ஆராய, தலைமைச் செயலகத்தில், முதல்வர் ஜெயலலிதா தலைமையில், அவசர கூட்டம் நடந்தது.

அமைச்சர்கள் வளர்மதி, தங்கமணி, வேலுமணி, கோகுல இந்திரா, ராஜேந்திர பாலாஜி, தலைமைச் செயலர் ஞானதேசிகன் மற்றும் பல்வேறு துறை செயலர்கள் கலந்து கொண்டனர்.

மழை பாதிப்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்த விவரங்களை, முதல்வர் கேட்டறிந்தார். குடியிருப்புகள், சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை விரைவாக வெளியேற்ற, உரிய நடவடிக்கை எடுக்கும் படி, அதிகாரிகளுக்கு

உத்தரவிட்டார்.பின் அவர், வீடு திரும்பியதும், பெட்ரோல், டீசல் விலை உயர்வு தொடர்பாக, அறிக்கை வெளியிட்டார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:உலக அளவில், கச்சா எண்ணெய் விலையில், குறிப்பிடத்தக்க மாறுதல் இல்லாத நிலையில், 6ம் தேதி முதல், பெட்ரோலுக்கான கலால் வரியை, லிட்டருக்கு, 1.60 ரூபாய்; டீசல் லிட்டருக்கு, 40 பைசா என, மத்திய அரசு உயர்த்தி உள்ளது. கலால் வரியை உயர்த்தாமல் இருந்திருந்தாலே, இந்த விலை உயர்வு தேவையற்றதாக இருந்திருக்கும்.

தவறான கொள்கை:முந்தைய மத்திய அரசு கடைபிடித்த, தவறான பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணய கொள்கையை, மாற்றி அமைக்க வேண்டும். எண்ணெய் நிறுவனங்கள் தற்போது அறிவித்துள்ள, பெட்ரோல், டீசல் விலை உயர்வை, உடனடியாக திரும்ப பெற வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## கொற்றலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு:வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீண்!

ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு, கொற்றலை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது; வெளியேறும் நீர், வங்கக் கடலில் கலந்து, வீணாகி வருகிறது.ஆந்திர மாநிலம், சித்துார் மாவட்டத்தில் துவங்கும் கொற்றலை ஆறு, திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி, பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, பூண்டி, பெரியபாளையம், காரனோடை வழியாக பயணித்து, நாப்பாளையம் அருகே வங்கக் கடலில் கலக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், 120 கி.மீ., துாரத்திற்கு இந்த ஆறு பயணிக்கிறது.

கடந்த, 2006ல், கொற்றலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அப்போது, 10 டி.எம்.சி., தண்ணீர் கடலுக்கு சென்று வீணானது. அதன் பிறகு, ஒன்பது ஆண்டுகளாக ஆறு வறண்டு கிடந்தது; மணல் திருட்டுக்கு மட்டுமே, பயன்பட்டு வந்தது. திருவள்ளூர் மாவட்டத்தில் கொட்டி தீர்த்து வரும் மழையால், கொற்றலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பூண்டி ஏரியில், நேற்று மாலை திறக்கப்பட்ட உபரி நீரும், கொற்றலை ஆறு வழியாக வெளியேற துவங்கியுள்ளது. இதனால், கொற்றலை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு

ஓடுகிறது. வெளியேறும் தண்ணீர் வினாடிக்கு, 10 ஆயிரம் கன அடி வீதம் கடலுக்கு சென்று வீணாகி வருகிறது. - -நமது நிருபர்- -

# தொடர்கிறது!

- வட மாவட்டங்களுக்கு மழை அபாயம்...
- இன்றும், நாளையும் கொட்டும் என எச்சரிக்கை

தென் மேற்கு வங்கக்கடலில், இலங்கை அருகே நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆந்திரா நோக்கி சென்றாலும், தமிழகத்தின் வட மாவட்டங்களுக்கு மழை அபாயம் உள்ளது. 'இன்றும், நாளையும் கனமழை தொடரும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.



தமிழகத்தில், வட கிழக்கு பருவ மழை, ஒரு வாரமாக தீவிரம் காட்டி வருகிறது. மாநிலம் முழுவதும் முக்கிய சாலைகள், குடியிருப்பு பகுதிகள் தண்ணீரில் தத்தளிக்கின்றன. பள்ளி, கல்லுாரிகள் மூடப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி விட்டது.**இந்த சூழ்நிலையில், வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன், நேற்று கூறியதாவது:** தென் மேற்கு வங்கக்கடலில், இலங்கை அருகே நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால், தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது. இன்று காலை, 8:30 மணி

நிலவரப்படி, 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, பொன்னேரியில், 37 செ.மீ., தாம்பரம், மகாபலிபுரத்தில், 33 செ.மீ.,

பதிவாகியுள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், வட மாவட்டங்களில், அனேக இடங்களிலும்; தென் மாவட்டங்களில், ஒரு சில இடங்களிலும் மழை எதிர்பார்க்கலாம்.சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலுார் உள்ளிட்ட வட மாவட்டங்களில், இரண்டு நாட்கள் கனமழை பெய்யும். சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஓரிரு இடங்களில், கனமழை பெய்யலாம். இலங்கை அருகே நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வடக்கு நோக்கி நகர்ந்து, ஆந்திரா பக்கம் செல்வதால், தமிழகத்தில் மழை பாதிப்பு, இரண்டு நாட்களில் படிப்படியாக குறையும். கடல் கொந்தளிப்பாக இருக்கும்; மணிக்கு, 60 கி.மீ., வேகத்தில் கடல் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம்.இவ்வாறு அவர் கூறினார்.தென் மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, புயலாக மாறி, தமிழகத்தை தாக்கும் அபாயம் இருந்தது. அது ஆந்திரா நோக்கி நகர்ந்ததால் அபாயம் நீங்கினாலும், ஏற்கனவே தத்தளிக்கும் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில், இரண்டு நாட்களுக்கு மழை தொடரும் என்பதால், மக்களின் திண்டாட்டம் தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.

**ராணுவம் வருகிறது:**

சென்னையில், திருநீர்மலை உட்பட பல பகுதிகளில், வெள்ளத்தில் சிக்கிய மக்கள் வெளியேற முடியாமல் திணறி வருகின்றனர். பல இடங்களில் மக்கள், உதவி கோரி

அழைத்தாலும்,அதிக வெள்ளம் காரணமாக, அவர்களை மீட்க முடியாத நிலை உள்ளது. இது போன்ற இடங்களில் உள்ள மக்களை மீட்க, ராணுவ உதவி கோரப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**மழை கொட்டியது எங்கே?**

பொன்னேரி - 37; தாம்பரம், மகாபலிபுரம் - 33; செங்கல்பட்டு - 32; தாமரைப்பாக்கம் - 31; புழல் - 30; செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் - 28; காஞ்சிபுரம், மரக்காணம், கேளம்பாக்கம் - 27; ஆவடி - 26; சென்னை - 25

செ.மீ., மழை பதிவானது.மாதவரம் - 24; பூந்தமல்லி, டி.ஜி.பி., அலுவலகம், அண்ணா பல்கலை, ஸ்ரீபெரும்புதுார் - 23; மதுராந்தகம், கொளப்பாக்கம், உத்திரமேரூர் - 21; அரக்கோணம், காட்டுப்பாக்கம், எண்ணுாரில், 20 செ.மீ., மழை பதிவானது.

**இதுவரை 38 செ.மீ., மழை:**

தமிழகம் முழுவதும் நேற்று காலை, 8:30 மணி வரை சராசரியாக, 4.3 செ.மீ., மழை பதிவானது. அக்., 1 முதல் நேற்று வரை, தமிழகம் முழுவதும், சராசரியாக, 38.3 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. வட கிழக்கு பருவ மழையின் மொத்த இயல்பு அளவை எட்ட, இன்னும், 5.7 செ.மீ., மழை தேவை; இது, ஓரிரு நாளில் கிடைக்கும் என, வானிலை ஆய்வு மையம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

**அவசர உதவிக்கு...:**

மழைக்கால பாதிப்பில் சிக்கியோர், மீட்பு மற்றும் உதவிகளுக்கு, மாநில அளவில் பேரிடர் தடுப்பு மையத்தை, '1070' என்ற எண்ணிலும்; மாவட்ட நிர்வாக மையத்தை, '1077' என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இதுதவிர, '108' ஆம்புலன்ஸ் சேவை; தொலைபேசி வழியே மருத்துவ ஆலோசனை தரும், '104' மையத்தையும் மக்கள் தொடர்பு கொள்ளலாம்.

**நிரம்பியது பூண்டி நீர்த்தேக்கம் :1,960 கன அடி நீர் வெளியேற்றம்**

திருவள்ளூர்:பூண்டி நீர்த்தேக்கம் நிரம்பியதை அடுத்து, வினாடிக்கு, 1,960 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் ஒன்றான, பூண்டி நீர்த்தேக்கத்தின் மொத்த உயரம், 35 அடி; இங்கு, 3,231 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்கலாம்.தொடர் மழை மற்றும் ஆந்திர மாநிலம், சித்துார் மாவட்டம், கிருஷ்ணாபுரம் அணை திறப்பு ஆகியவற்றால், பூண்டி நீர்தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. தற்போது வினாடிக்கு, 5,527 கன அடி தண்ணீர் வருகிறது. நீர்மட்டம், 34.55 அடியை எட்டி உள்ளதால், 2,999 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது.

நீர்த்தேக்கம், அதிக பட்ச கொள்ளளவை எட்டியதை அடுத்து, நேற்று மாலை, இரண்டு ஷட்டர்கள் திறக்கப்பட்டு, வினாடிக்கு, 1,960 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால், கொற்றலை ஆற்றின் கரையோர பகுதிகளில் வசிப்பவர்களுக்கு, வெள்ள அபாய

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.உபரி நீர், ஒதப்பை தரை பாலத்திற்கு மேல் செல்வதால், திருவள்ளூர் - ஊத்துக்கோட்டை சாலையில், போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது.

**சென்னையில் 82 சதவீதம் கூடுதல் மழை**

சென்னை : சென்னையில் வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பெய்த மழையானது, கடந்த ஆண்டு சதவீதத்தை விட அதிகரித்துள்ளது. அதாவது கடந்த 16 நாட்களில்(அக்.,1-16) சென்னை மாவட்டத்தில் 910 மி.மீ., மழை பெய்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 82 சதவீதம் கூடுதலாகும்.

**தொடர் மழையால் கொடைக்கானல்மலையில் கொட்டும் நீர்வீழ்ச்சிகள்:சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி**



பழநி:தொடர் மழையால் பழநி--கொடைக்கானல் ரோடு மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில்ஏராளமான இடங்களில் கொட்டும் நீர்வீழ்ச்சிகள் சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளன.

கொடைக்கானல் செல்வதற்கு வத்தலக்குண்டு மற்றும் பழநியிலிருந்து வழிகள் உள்ளன. பழநி ரோடு 14 கொண்டை ஊசி வளைவுகள் கொண்டது.சுற்றுலா

பயணிகள் வனவிலங்குகள், அரியவகை மரங்கள் என இயற்கை அழகை ரசித்தப்படி பயணம் செய்கின்றனர். தொடர் மழையால் சவரிக்காடு, வடகவுஞ்சி, கோம்பைக்காடு, பெருமாள்மலை உள்ளிட்ட பல மலைப் பகுதியில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் கொட்டுகின்றன. அணைகளிலும் தண்ணீர் நிரம்பி உள்ளதால், பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. சிலர் வாகனங்களை நிறுத்தி இயற்கை அழகை புகைப்படம் எடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.

## திண்டுக்கல்லில் 0.02 மி.மீ.,தான்

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழையளவு 830 மி.மீ.,. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையால், 25 மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. ஆனால் திண்டுக்கல் மாவட்டத்தில் வெறும் துாறல் மழைதான் கடந்த 4 நாட்களாக பெய்து வருகிறது. இங்கு கடந்த 2 நாட்களில் சராசரியாக 0.02 மி.மீ.,தான் மழை பதிவாகியுள்ளது. பல கண்மாய், குளங்கள் நிறையாததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## 8 ஆண்டுக்கு பின் நிரம்பிய ஓட்டேரி நீர்ப்பறவை ஏரி நிரம்பியது

பல்லாவரம் : கனமழையால், வண்டலுார் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்படும் ஓட்டேரி நீர்ப்பறவை ஏரி நிரம்பியது. வண்டலுார் உயிரியல் பூங்காவில், ஓட்டேரி நீர்ப்பறவைகள் ஏரி பராமரிக்கப்படுகிறது. அதன் பரப்பளவு 16 ஏக்கர், நீளம் 635 மீட்டர். ஏரியின் முழு கொள்ளளவு, 3 மில்லியன் கன அடி. கடந்த, 2007ல் பெய்த வட கிழக்கு பருவமழையின் போது, ஏரி முழு கொள்ளளவை எட்டியது. அதன்பின், தற்போதைய மழைக்கு ஏரி நிரம்பியுள்ளது. இந்த ஏரியில் தேங்கும் தண்ணீர் விவசாயத்திற்கு அல்லாமல், நீர்ப்பறவைகளின் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஏரி நிரம்பியுள்ளதால், நீர்ப்பறவைகளின் வருகையும் துவங்கிஉள்ளது. தற்போது, பெரிய புள்ளி வாத்து, முக்குளிப்பான், சிறிய நீர்க்காகம், பெரிய நீர்க்காகம், நாராயணக்கொக்கு, வக்கா, சிறு வெண்கொக்கு ஆகிய பறவைகள் வர துவங்கி

உள்ளன. மேலும், வெள்ளை அரிவாள் மூக்கன், நத்தை கொத்தி நாரை, வண்ண நாரை, கரண்டிவாயன், நீலச்சிறகி, ஊசிவால் வாத்து, ஆண்டி வாத்து, சிறவி, கூழைக்கடா ஆகிய பறவைகள் வரலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது. ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பால், அருகாமையில் வசிப்போருக்கு, பூங்கா நிர்வாகம் சார்பில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு பகுதிவாசிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**வைகையின் துணை ஆறுகள், அணையில் நீர் மட்டத்தை கணக்கிடும் போலீசார்**



பட்டிவீரன்பட்டி;வைகை ஆற்றில் இணையும் ஆறுகளில் வெள்ள அளவைக் கணக்கிட, சம்பந்தப்பட்ட அணைகளின் நீர் மட்ட அளவை உடனுக்குடன் மதுரை போலீஸ் நிர்வாகத்திற்கு தெரிவிக்க ஒரு போலீசாரை 5 நாட்களுக்கு நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையால் கடலூார் மாவட்டம் பாதிப்படைந்தது. மற்ற பகுதிகள் பாதிக்காமல் இருக்க, ஒவ்வொரு அணைக்கும் ஒரு போலீசாரை கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்த டி.ஜி.பி., அசோக்குமார் உத்தரவிட்டுள்ளார்.இதைத் தொடர்ந்து வைகை ஆற்றில் இணையும் உப நதிகள், இவை சம்பந்தப்பட்ட அணைகளின் நீர் மட்டத்தை ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை தெரிவித்து கண்காணிப்பை தீவிரப்படுத்த மதுரை எஸ்.பி., விஜயேந்திர பிதரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

திண்டுக்கல், அய்யம்பாளையம் மருதாநதி அணையின் நீர் மட்ட அளவை தெரிவிக்க மதுரை, நாகமலைபுதுக்கோட்டை எஸ்.ஐ., சுந்தரபாண்டியன் நியமிக்கப்பட்டு உள்ளார். இதே போல் தேனி, வைகை அணை, மஞ்சளாறு, சோத்துப்பாறை அணைகளுக்கு போலீசார் நியமிக்கப்பட்டுள்ளனர்.தமிழகம் முழுவதும் உள்ள அணைகளுக்கு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ள

நவ.,15 முதல் 20ம் தேதி வரை ஒரு போலீஸ்காரர் அங்கேயே தங்கியிருந்து அணையின் நீர் மட்டம், அணையிலிருந்து ஆற்றில் வெளியேற்றப்படும் நீர் அளவை 1மணி நேரத்திற்கு ஒரு முறை தெரிவித்து வருகின்றனர்.

**நீரில் மூழ்கிய பயிர்களை கணக்கெடுக்கும் பணி துவங்கப்படுமா! தொடர்கிறது சாலை மறியல், பஸ் சிறை பிடிப்பு**



கடலூார்: கடலூார் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக 70 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதுவரை கணக்கெடுக்கும் பணி துவங்காததால் நிவாரணம் கேட்டு கிராம மக்கள் பல்வேறு இடங்களில் சாலை மறியல் செய்து வருகின்றனர்.

இடைவிடாமல் பெய்து வரும் தொடர் மழை காரணமாக கடலூார் மாவட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டது. கடலூார் நகரில் தண்டபாணி நகர், குப்பன்குளம், அண்ணா நகர், பீமாராவ் நகர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட இடங்களில் வீடுகளுக்குள் புகுந்த தண்ணீர் இன்னும் வடியவில்லை.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் இன்னும் தத்தம் வீடுகளுக்கு திரும்ப முடியவில்லை. மின்கம்பங்கள் சாய்ந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கின. வெளி மாவட்டங்களில் இருந்து 2500பேர் இடைவிடாமல் பணியாற்றியும் மொத்தமுள்ள 683 ஊராட்சிகளில் 667 ஊராட்களில் மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

காற்று வீசி 10 நாட்களாகியும் பல ஊராட்சிகளில் இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

இடைவிடாமல் கொட்டிய மழையால் ஏரி, குளங்கள் வேகமாக நிரம்பின. நேற்று முன்தினம் காலை 8:00 மணி முதல் நேற்று காலை 8:00 மணி வரை பெய்த மழையளவு மி.மீ., விவரம்:

வானமாதேவி 107, பரங்கிப்பேட்டை 95, கடலூார் 72, வேப்பூர் 72, கொத்தவாச்சேரி 69, மேமாத்தூர் 67, புவனகிரி 63, ஸ்ரீமுஷ்ணம் 62, சேத்தியாத்தோப்பு 61.20, சிதம்பரம் 60.25, லால்பேட்டை 58.50, காட்டுமயிலூர் 56, கீழ்ச்செருவாய் 56, விருத்தாசலம் 53.40, குப்பநத்தம் 50.20, பெலாந்துறை 48, லக்கூர் 44.20, அண்ணாமலை நகர் 39.80, தொழுதூர் 39, காட்டுன்னார்கோவில் 35, பண்ருட்டி 9.70 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்திலேயே அதிகபட்சமாக வானமாதேவியில் 107 மி.மீ., மழை பெய்துள்ளது.

**முழு கொள்ளவை எட்டின**

தொடர்மழை காரணமாக மாவட்டத்திலுள்ள பொதுப்பணித்துறை ஏரிகள் 228ல் 188 ஏரிகள் முழுகொள்ளவை எட்டியுள்ளன. மீதியுள்ள 16 ஏரிகள் 75 சதவீதமும், 12 ஏரிகள் 50 சதவீதமும், 50 சதவீத்திற்கு கீழ் 12 ஏரிகளும் நிரம்பியுள்ளன. வீராணம் ஏரியில் இருந்து பாதுகாப்பு கருதி 1,468 கனஅடி வெளியேற்றப்பட்டு வருகிறது.

வெலிங்டன் ஏரியில் 29.78 அடியில் 12.7 மட்டுமே நீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு நீர் வரத்து இல்லை. மணிமுக்தா அணையில் 36 அடிக்கு 33 அடி நீர் இருப்பு உள்ளது. கனமழையினால் பாதிக்கப்பட்ட பயிர்கள் கணக்கெடுப்பு பணி இதுவரை துவங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகள் மனுக்களுடன் எதிர்பார்த்து காத்துக் கிடக்கின்றனர். இந்நிலையில் நேற்று தாசில்தார் தலைமையில் கூட்டம் நடந்தது. வேளாண் மற்றும் வருவாய் அதிகாரிகள் இணைந்து கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கிள்ளை**

கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட குச்சிப்பாளையம் கிராமத்தில் நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் இருப்பதாக கூறி 150க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் நேற்று காலை 10:45 மணிக்கு சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களிடம் டி.எஸ்.பி., சுந்தரவடிவேல், மாவட்ட பிற்பட்ட நலத்துறை அலுவலர் ஜவகர் மற்றும் வருவாய்த் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி, நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தைத் தொடர்ந்து மதியம் 1:35 மணிக்கு மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.**பஸ் சிறை பிடிப்பு**

கடலுார் அடுத்த ஆண்டார்முள்ளிப்ப

ள்ளத்தில் ஒரு சிலருக்கு மட்டும் நிவாரணம் வழங்கியதை கண்டித்து அப்பகுதி மக்கள் நேற்று காலை 10:40 மணிக்கு பேட்டோடை - கடலுார் செல்லும் அரசு பேருந்தை சிறைபிடித்தனர். புதுச்சத்திரம் போலீசார் நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து 10:50 பஸ்சை விடுவித்தனர்.

சேத்தியாத்தோப்பு

கிளாங்காடு கிராம மக்கள் நிவாரணத் தொகை கேட்டு சாலை மறியலில் 20 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் சாலையில் அமர்ந்தனர். தவகல் அறிந்த டி.எஸ்.பி., குத்தாலிங்கம், இன்ஸ்பெக்டர் அம்பேத்கர் ஆகியோர் கிராம மக்களிடம் சமாதப்படுத்தியன் பின் கிராம மக்கள் கலைந்து சென்றனர். இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்படைந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

**அடைமழையால் மூழ்கின சாலைகள் அணைகளில் நீர் சேமிப்பு குறைவு தான்**

மரக்காணம்:மரக்காணம் பகுதியில் அமைந்துள்ள, பக்கிங்ஹாம் ஏரி நிரம்பியது. விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் பகுதியில், 14ம் தேதி நள்ளிரவு துவங்கி, பலத்த மழை பெய்து வருகிறது.

மழை காரணமாக, இப்பகுதியில் அமைந்துள்ள பக்கிங்ஹாம் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து, நிரம்பி உள்ளது. 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள பக்கிங்ஹாம் ஏரி, ஐந்து ஆண்டுகளுக்கு பின், தற்போது நிரம்பி உள்ளது. ஏரி

நிரம்பி, கடல் போல் காட்சியளிப்பதால், சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கண்மாய் சீமைக்கருவேல மரங்களால்சிக்கல் :தண்ணீர் தேக்குவதற்கு இடையூறு**

நத்தம்:நத்தம் பகுதி காண்மாய்களில் சீமைக்கருவேல மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளதால் தண்ணீர் தேக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நத்தம் ஊராளிபட்டி பகுதியில் உள்ள பூலாங்குளம் உள்ளிட்ட பெரும்பாலான கண்மாய்கள் பொதுப்பணித்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதியில் போதிய மழை இல்லாததால் கண்மாய்களில் தண்ணீர் தேங்காமல் வறண்டன. இதனால் பூலாங்குளம் கண்மாயில் வறட்சியிலும் வளரக்கூடிய சீமை கருவேல மரங்கள் அதிக அளவில் வளர துவங்கின . இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்ணீர் தேங்காததால் கண்மாய் முழுவதையும் ஆக்கிரமித்து அடர்ந்த மரங்களாக வளர்ந்துள்ளன.

தற்போது பெய்து வரும் பருவ மழையினால் வரக்கூடிய தண்ணீரை இங்கு தேக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தேங்கினாலும் கால்நடைகள் உள்ளே சென்று தண்ணீர் குடிக்க முடியாத நிலை உள்ளது.

நிலத்தடி நீர்மட்டம் உயர்வதும்

பாதிக்கப்படும். அதிக தண்ணீர் தேங்கும் வகையில் கண்மாயில் உள்ள முள்

மரங்களை அகற்ற வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது,"குறிப்பிட்ட அளவு வரை வளர்ந்துள்ள மரங்களை ஏலம் விட அதிகாரம் உண்டு. அதன்படி வருவாய் துறையினரிடம் விபரம் அளித்துள்ளோம். அவர்களிடம் இருந்து மதிப்பீடு அறிக்கை கிடைத்த உடனே மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

**சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம் 18ம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம்**

புதுச்சேரி: தேசிய சுற்றுச்சூழல் மாதத்தை முன்னிட்டு, சுற்றுச்சூழல் திட்டங்களை சமர்ப்பிக்க, அறிவியல் தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அறிவியல் தொழில்நுட்ப மற் றும் சுற்றுச்சூழல் துறை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

அறிவியல் தொழில்நுட்ப மற் றும் சுற்றுச்சூழல் துறை ஒவ்வொரு ஆண்டும் நவ., 19ம் தேதி முதல் டிச., 18 வரையில் தேசிய சுற்றுச்சூழல் மாதமாக கொண்டாடி வருகிறது. இந்த விழாவை முன்னிட்டு, கல்வித்துறை மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்தாண்டு அரசு சாரா நிறுவனங்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் அமைப்புகளில் இருந்து சுற்றுச்சூழல் சம்மந்தமான திட்டங்கள் பெற முடிவு செய்யப் பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட திட்டங்களுக்கு பண உதவி அளிக்கப்படும். பதிவு சான்றிதழ், சுற்றுச்சூழல் சம்மந்தமான மூன்று ஆண்டு செயல்பாடுகள், மூன்று ஆண்டு கணக்கு தணிக்கை அறிக்கை ஆவணங்களுடன் திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும். கல்வி நிறுவனங்களும் இதில் பங்கு பெறலாம். திட்டங்கள் சுற்றுச்சூழல் பிரச்னைகள் சார்ந்ததாக இருக்க வேண்டும். திட்டங்களை, வரும் 18ம் தேதி அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நில அபகரிப்பு குறித்த குறை தீர்ப்பு கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது

புதுச்சேரி: சாரம் கலெக்டர் அலுவலத்தில், வரும் 30ம் தேதி நில அபகரிப்பு குறித்த குறை தீர்ப்பு கூட்டம் நடக்கிறது.

இதுகுறித்து கலெக்டர் மணிகண்டன் கூறியதாவது: புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில், நில அபகரிப்பு குறித்த குறைதீர்ப்பு கூட்டம் வரும் 30ம் தேதி மாலை 4:00 மணிக்கு, சாரம் கலெக்டர் அலுவலத்தில் நடத்தப்படுகிறது.

இதில், எட்டு வழக்குகள் முதற்கட்டமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. தாசில்தார்கள் தந்துள்ள பரிந்துரைகள் மீது மட்டுமே மேல் விசாரணை செய்து ஆலோசனை வழங்கப்படும். சொத்து சம்பந்தமான உரிமையை நீதிமன்றம் மட்டுமே முடிவு செய்ய இயலும்.

எனவே, நில அபகரிப்பு புகார் விசாரணைக்கு சில அளவுகோல் வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒருவருக்கு சொந்தமான மனையை, வீட்டை, சொத்தை எந்த வித உரிமையும் இல்லாமல், அத்துமீறி ஆட்கள் மூலம் மிரட்டி முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அபகரித்திருந்தால் அதுவே நில அபகரிப்பு என, கருதப்படும்.

சொத்து சம்பந்தமாக கோர்ட் வழக்கு நிலுவையில் இருந்ததாலும், குடும்ப உறுப்பினர்கள் இடையே ஏற்படும் சொத்து சம்பந்தமான பிரச்னைளும், எல்.ஜி.ஆர்., இலவச மனைப்பட்டா, எல்லை தகராறு போன்ற பிரச்னைகளும் நில அபகரிப்பு புகார்களாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அப்பிரச்னைகளை சம்பந்தப்பட்ட துறையிடம் புகார் தெரிவித்து தீர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகின்றனர். வாடகைதாரர், உரிமையாளர் இடையே ஏற்படும் பிரச்னைகளை நீதிமன்ற கட்டுப்பாட்டாளர் மூலமாக தீர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

### கன மழையால் நெற்பயிர்கள் பாதிப்பு ஏக்கருக்கு ரூ.25,000 வழங்க கோரிக்கை

காரைக்கால்: காரைக்கால் மாவட்டத்தில் தொடர் மழையால் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என மா.கம்யூ., வலியுறுத்தி உள்ளது.

காரைக்கால் மா.கம்யூ. மாவட்டக்குழுக் கூட்டம் கட்சி அலுவலகத்தில், ராமர் தலைமையில் நேற்று நடந்தது. புதுச்சேரி மாநில செயற்குழு உறுப்பினர் வின்சென்ட், மாவட்ட செயலாளர் கலியபெருமாள், மாவட்டக்குழு உறுப்பினர் ரவி, திவ்வியநாதன், பாக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், காரைக்கால் மாவட்டத்தில் கனமழையால் நெடுங்காடு, திருநள்ளார், திருப்பட்டினம், உள்ளிட்ட பகுதியில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர் மழையால் கட்டுமான தொழில், மீன்பிடி, விவசாய பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. தேங்கியுள்ள மழைநீரால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. இதை கட்டுப்படுத்த அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.கனமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை கணக்கிட்டு உடனடி நிவாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம், மழையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.3 ஆயிரம் அரசு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## மழைநீரில் தத்தளிக்கும் பழவேற்காடு மீனவ பகுதி

பழவேற்காடு : பழவேற்காடு மீனவ கிராமங்களை மழைநீர் சூழ்ந்துள்ளதால், மீனவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. பலத்த மழையின் காரணமாக, பொன்னேரி, அதை சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து, ஆரணி ஆற்றின் வழியாக வெளியேறி, பழவேற்காடு ஏரிக்கு சென்று கொண்டிருக்கிறது.இதனால், பழவேற்காடு உப்பு நீர் ஏரியில் மழைநீர் அதிகரித்து, பசியாவரம், சாட்டன்குப்பம், இடமணி உள்ளிட்ட கிராமங்களில் மழைநீர் சூழ்ந்து கிடக்கிறது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.மேற்கண்ட கிராமங்களுக்கு செல்லும் சாலை முழுவதும் மழைநீரில் மூழ்கி, வழிகாட்டி கொடிகள் வைக்கப்பட்டு உள்ளன. கடலில் கொந்தளிப்பு அதிகமாக இருப்பதால், மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்கு செல்லாமல், தாயக்கட்டு, சீட்டு ஆகிய விளையாட்டுகளில் ஈடுபட்டு பொழுதை கழித்து வருகின்றனர். மீன்பிடி படகுகள் கரைகளில் கயிறுகள் மூலம் கட்டி வைக்கப்பட்டு உள்ளன.பழவேற்காடு ஏரியில் மழைநீர் அதிகரித்து வருவதால், அதை ஒட்டி உள்ள கோட்டைகுப்பம் மீனவ கிராமத்தினர் அச்சத்தில் உள்ளன. தொழில் இன்றி மீனவ மக்கள், ஒரு வாரமாக வருவாய் இழப்பில் தவிக்கின்றனர்.

## நெற்பயிர் பாதிப்பு குறித்து கணக்கெடுக்க ஆய்வுக்குழு

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், மழைநீரால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து கணக்கெடுக்க, ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஒரு வாரமாக பெய்து வரும் கனமழை காரணமாக, ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள், தண்ணீர் மூழ்கி, நாசமாகி வருகின்றன. எனவே, பாதிப்பிற்குள்ளான நெற்பயிர் கள் குறித்து ஆய்வு நடத்த சிறப்பு குழு ஒன்றை, வேளாண் இணை இயக்குனர் சீத்தாராமன் அமைத்துள்ளார்.அதன்படி, சிட்லப்பாக்கம், காட்டாங்கொளத்துார், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம், சித்தாமூர் மற்றும் பவுஞ்சூர் ஆகிய வட்டாரங்களில், நெற்பயிர் பாதிப்பு குறித்து கணக்கிட, காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) நியமிக்கப்பட்டுள்ளார்.இதேபோல், படப்பை, ஸ்ரீபெரும்புதுார், சிறுகாவேரிப்பாக்கம், வாலாஜாபாத் மற்றும் உத்திரமேரூர் ஆகிய வட்டாரங்களில், நெற்பயிர் பாதிப்பு குறித்து கணக்கிட, மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (மத்திய திட்டம்) நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள், தங்களின் பயிர் சேதம் பற்றிய தகவல்களை, மண்டல அலுவலர்களிடமோ அல்லது உதவி இயக்குனர்களிடமோ அளிக்கலாம், என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிச்சாட்டூர் ஏரியில் 10,000 கன அடி நீர் திறப்பு

ஊத்துக்கோட்டை : பிச்சாட்டூர் ஏரி வினாடிக்கு, 10 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டதால், ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தமிழக - ஆந்திர எல்லையில் பெய்து வரும் கனமழையால், ஏரி, குளம், குட்டைகள் நிரம்பி வருகின்றன.ஆரணி ஆற்றின் குறுக்கே ஆந்திர மாநிலம், பிச்சாட்டூர் ஏரியின் மொத்த கொள்ளளவு 31 அடி. இதன் நீர்வரத்து பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் நீர்மட்டம், 'கிடுகிடு'வென உயர்ந்து வந்தது.நீர்வரத்துப் பகுதியில் இருந்து வினாடிக்கு, 12 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக ஏரியின் நீர்மட்டம், 30.5 அடியை தொட்டது.நீர்வரத்து அதிகரித்து வருவதால், நேற்று, காலை, 10:30 மணிக்கு, ஏரியின் நான்கு மதகு கள் திறக்கப்பட்டன. துவக்கத்தில்

வினாடிக்கு, 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு, இரவு, 7:00 மணிக்கு, 10 ஆயிரம் கன அடியாக உயர்த்தப்பட்டது. இதனால் ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.ஊத்துக்கோட்டை அடுத்த, நந்தனம் மலைப் பகுதியில் இருந்து வினாடிக்கு, 4,600 கன அடி வீதம் என, மொத்தம், 14,600 கன அடி வீதம் சுருட்டப்பள்ளி அணைக்கட்டு வழியாக, ஊத்துக்கோட்டையை அடைகிறது. பின், இங்கிருந்து பனப்பாக்கம், செங்காத்தாகுளம், பாலேஸ்வரம், லட்சுமிபுரம் அணைக்கட்டு வழியாக சென்று கடலில் கலக்கிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

**வெள்ளப் பெருக்கால் போக்குவரத்து துண்டிப்பு! 2,471 ஏக்கர் நெல் வயல் மூழ்கின**

திருவள்ளூர் மாவட்டத்தில், ஆரணி, கொற்றலை ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மழையால், 2,471 ஏக்கர் நெல் பயிர்கள், தண்ணீரில் மூழ்கி உள்ளன.

- கொற்றலை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், பட்டரைபெரும்புதுார் தரைப்பாலத்தில் 2 அடிக்கு மேல் தண்ணீர் செல்வதால், திருவள்ளூர் - திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது
- மப்பேடு ஏரி கரையில் விரிசல் ஏற்பட்டு, நீர் வெளியேற்றப்பட்டதால், தண்டலம் - அரக்கோணம் நெடுஞ்சாலையில் தண்ணீர் தேங்கி, அணைக்கட்டு போல் காட்சி அளித்தது
- திருவள்ளூர் - ஸ்ரீபெரும்புதுார் நெடுஞ்சாலையில், போளிவாக்கம், தண்டலம் - அரக்கோணம் நெடுஞ்சாலையில் கொண்டஞ்சேரி, கடம்பத்துார் - கொண்டஞ்சேரி நெடுஞ்சாலையில், சத்தரை ஆகிய வழிகளில் மழையால் போக்குவரத்து நிறுத்தப்பட்டது
- திருத்தணி - காஞ்சிபுரம் இடையே போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டது.

● திருவள்ளூர், காக்களூர் ஏரிக்கரை குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் புகுந்ததால், 200க்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டன

● பேரம்பாக்கம் காலனியில், மழைநீர் சூழ்ந்ததால், அங்கிருந்த, 90 குடும்பத்தினர் தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்

● மப்பேடு சமத்துவபுரம் அருகே உள்ள தெலுங்கு காலனியில், 15 வீடுகள் இடிந்து சேதமடைந்தன

● பொன்னேரி அடுத்த பொன்நகர், வேண்பாக்கம் பள்ளம் குடியிருப்புக்களை மழைநீர் சூழந்து கிடக்கிறது. எலவம்பேடு ஏரிக்கரையின் அருகில் வசித்த இருளர் குடும்பங்கள், அங்குள்ள அரசு பள்ளி வளாகத்தில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

தீவானது திருத்தணி

● திருத்தணி முருகன் கோவில் ஊழியர்கள் குடியிருப்பு பகுதியில் மழைநீர் புகுந்தது

● திருத்தணி - அரக்கோணம் மாநில நெடுஞ்சாலையில், 1.5 அடி உயரத்திற்கும் மேல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிகிறது

● திருத்தணி நகரின் பல பகுதிகளிலும், அரசு மருத்துவமனையின் பொது வார்டிலும் மழைநீர் தேங்கி உள்ளது

● கொத்துார், ஒரத்துார் ஆகிய ஏரிகள் உடைந்து தண்ணீர் வயல்வெளிகளில் வெளியேறி வருகிறது

மறியல்...

● சின்னகாவனம் பகுதியில் சூழ்ந்த மழைநீரை அகற்ற கோரி, பகுதிவாசிகள் பழவேற்காடு சாலையில் பேருந்துகளை சிறைபிடித்து மறியலில் ஈடுபட்டனர்

● ஆரணி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. சுருட்டப்பள்ளி அணைக்கட்டில், மழைநீர், 7 அடிக்கு மேல் வந்ததால் ஷட்டர்கள்

திறக்கப்பட்டன. இதனால் ஊத்துக்கோட்டை திருவள்ளூர் சாலையில் உள்ள தரைப்பாலம் மூழ்கி, போக்குவரத்து நிறுத்தப்பட்டது

- சிட்ரபாக்கம் அணைக்கட்டு நிறைந்து உபரி நீர் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது; பாலேஸ்வரம் அணைக்கட்டும் நிரம்பியது

- நெய்வேலி, பெருமுடிவாக்கம், பூரிவாக்கம், அழிஞ்சிவாக்கம் ஆகிய பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது

- பெரியபாளையம் கச்சேந்தி நகரில் வெள்ளம் சூழ்ந்ததால் அங்கிருந்த, 20 குடும்பத்தினர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டனர்

- கரடிபுத்துார் ஏரி உடைந்து, வயல் வெளியில் மழை வெள்ளம் சூழ்ந்தது

- கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாம், ஏனாதிமேல்பாக்கம், பஞ்செட்டி காலனி உள்ளிட்ட பகுதிகளில், வீடுகளுக்குள் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. கும்மிடிப்பூண்டி - மாதர்பாக்கம், நாகராஜகண்டிகை ஓடை, சுண்ணாம்புக்குளம் அருகே பூங்குளம் - சின்னமாங்கோடு, கண்ணன்கோட்டை - கரடிபுத்துார் ஆகிய இடங்களில், தரைப்பாலத்திற்கு மேல் தண்ணீர் ஓடியதால், போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது

- அத்திமாஞ்சேரிபேட்டை ஏரி வரவு கால்வாய் ஆக்கிரமிப்பால், வெள்ளம் ஊருக்குள் ஆறாக பாய்ந்ததில், வாணியர் தெரு உள்ளிட்ட நான்கு தெருக்களில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது

- ஆந்திர மாநிலம், கிருஷ்ணா நீர்த்தேக்கத்தில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு, 12:00 மணிக்கு, தண்ணீர் திறந்து விடப்பட்டதால், பள்ளிப்பட்டு கொற்றலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது

- செங்கட்டானுார் அருகே, ஆறு மாதங்களுக்கு முன் கட்டப்பட்ட தரைப்பாலம், நேற்று தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதனால், பீரரெட்டியூர் வழியாக சோளிங்கருக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உள்ளது.

மூழ்கிய வயல்கள்

திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து பெய்து வரும் மழையால், 2,471 ஏக்கர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட அனைவரும், 57 முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். இங்கு 18,051 பேருக்கு உணவு அளிக்கப்படுகிறது.

- மாதவரம் அடுத்த, கதிர்வேடு கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தராஜன், 65, வீடு இடிந்து விழுந்து பலியானார். கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில், ஒரு மாடு மழையால் இறந்தது

- மாவட்டத்தில் உள்ள 1,236 ஏரிகளில், 499 ஏரிகள் முழுகொள்ளளவை எட்டியுள்ளன. 595 ஏரிகள், 50 சதவீதமும், 142 ஏரிகள் 50 சதவீதத்திற்கு குறைவாகவும் நிரம்பின உள்ளன.மழையளவு விவரம் (செ.மீட்டரில்)

மாவட்டத்தில், ஒரே நாளில், 337.9 செ.மீட்டர்

மழை பதிவாகியுள்ளது

பொன்னேரி 36.9

தாமரைப்பாக்கம் 30.7

செம்பரம்பாக்கம் 28.2

செங்குன்றம் 28.2

சோழவரம் 27.7

அம்பத்துார் 24.6

பூந்தமல்லி 22.3

கும்மிடிப்பூண்டி 22.0

திருவாலங்காடு 19.3

பூண்டி 19.0

திருவள்ளூர் 18.9

திருத்தணி 18.3

பள்ளிப்பட்டு 16.5

ஊத்துக்கோட்டை 13.1

ஆர்.கே.பேட்டை 1.1

## மழை வெள்ள பாதிப்பு பகுதிகளை முன்னாள் அமைச்சர் நேரில் பார்வை

விழுப்புரம்: கோலியனூர் மற்றும் வளவனூர் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பு பகுதிகளை, முன்னாள் அமைச்சர் சண்முகம் நேரில் பார்வையிட்டார்.

கோலியனூர் ஒன்றியம், மழவராயனூர் மற்றும் ஆழங்கால் பகுதி ஆகியவற்றை முன்னாள் அமைச்சர் நேரில் பார்வையிட்டார். பின் சுந்தரிப்பாளையம் ஏரியிலிருந்து வீணாக வெளியேறும் மழைநீரை, ஆழங்கால் வாய்க்கால் வழியாக, வளவனூர் ஏரிக்கு திருப்பி அனுப்புவது குறித்து ஆலோசனை செய்தார்.

தொடர்ந்து, மழவந்தாங்கலில் மழைவெள் ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். ஆய்வின்போது சேர்மன்கள் விஜயா சுரேஷ்பாபு, முருகவேல், அ.தி. மு.க., முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் சுரேஷ்பாபு, கண்ணன், துணை சேர்மன் வளர்மதி மணிமாறன், கவுன்சிலர் ராஜீ, சிவக்குமார், பொறியாளர் ரமேஷ், நகராட்சி துணை சேர்மன் முத்துலட்சுமி தட்சிணாமூர்த்தி, நகராட்சி கவுன்சிலர்கள் ராமதாஸ், வரதன், ஊராட்சி தலைவர் நடராஜன், கிளை செயலாளர்கள் நாகமுத்து, ரவி, நகர செயற் குழு உறுப்பினர் சக்திவேல் உடனிருந்தனர்.

## வானூர் பகுதியில் மழை பாதிப்பு அரசு நிவாரண உதவிகள் வழங்கல்

வானூர்: வானூர் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகளை எம்.எல்.ஏ., ஜானகிராமன் வழங்கினார்.

வானூர் ஒன்றியத்தை சேர்ந்த ஆதனப்பட்டு, திருவக்கரை, புளிச்சப்பள்ளம், பாப்பான்சாவடி, வி.கேனிப் பட்டு ஆகிய கிராமங்களில் மழையால் பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டது. இப்பகுதியில் சுவர் இடிந்து கூரை மற்றும் தொகுப்பு வீடுகள் சேதமடைந்தன.

இலவம்பட்டு கிராமத்தில் மழையால் பசுமாடு இறந்தது. மழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு, அரசு சார்பில் நிவாரண உதவிகளை எம்.எல்.ஏ., ஜானகிராமன் வழங்கினார். தாசில்தார் காமசிங், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் பக்தவச்சலம், மாவட்ட கவுன்சிலர் சக்கரபாணி, மண்டல துணை தாசில்தார் சங்கரலிங்கம், வருவாய் ஆய்வாளர் ஸ்ரீதேவி, வி.ஏ.ஓ., ஆகியோர் உடனிருந்தனர்.

**கர்ணாவூர் கிராமத்தில் இயந்திரம் மூலம் நடவு**

முருக்கேரி: திண்டிவனம் அடுத்த கர்ணாவூர் கிராமத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணி நடந்தது.

கர்ணாவூர் கிராத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் திட்ட முகாமிற்கு, விவசாயிகள் சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் சித்ராராஜு வரவேற்றார். கூட்டுறவு சங்கத்தலைவர் பிரேம்குமார் முன்னிலை வகித்தார். இயந்திரம் மூலம் நெல் நடவு முகாமை, வேளாண்மை துறை இணை இயக்குநர் ரத்தின சபாபதி துவக்கி வைத்து, அரசு நலத்திட்டங்களை விவசாயிகளுக்கு விளக்கினார்.

வேளாண்மை துறை துணை இயக்குநர் ரவி, உதவி இயக்குநர்கள் கென்னடி ஜெபக்குமார், இள வரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வேளாண்மை துறை அலுவலர்கள் எத்திராஜ், சுப்ரமணியன், சரவணன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் விஜயலட்சுமி, குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மரக்காணம் பகுதியில் பயிர்கள் பலத்த சேதம்**

முருக்கேரி: மரக்காணம் பகுதியில் பெய்து வரும் மழையால், வாழை, மரவள்ளிக்கிழங்குகள் நாசமடைந்துள்ளன. மரக்காணம் பகுதியில் உள்ள ஓமிப்பேர், அடசல், நடுக்குப்பம், குரும்புரம் ஆகிய பகுதிகளில், கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகின்றது. இந்த பகுதிகளில் 25 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் காற்றில், முறிந்து விழுந்துள்ளன.

இதேபோல், 75 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்திருந்த மரவள்ளிக் கிழங்கு செடிகள் மழையால் சாய்ந்துள்ளது. இது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சொட்டு நீர் பாசன கருவிகளுக்கு வேளாண்துறை மானிய உதவி

விழுப்புரம்: சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, நுண்ணீர் பாசன திட்டத்தின்படி, அரசு மானிய உதவி வழங்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில், இந்தாண்டு பிரதம மந்திரி கிரிஷி சிஞ்சாயி யோஜனா திட்டத்தின் கீழ் நுண்ணீர் பாசன திட்டம் 3 ஆயிரத்து 500 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்படுகிறது.

நுண்ணீர் பாசன கருவிகள் பொருத்தும் பணியை செய்வதற்கு தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையால் 34 நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டு, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை ஆகிய துறைக ளால் திட்டம் செயல்படுத்தபடுகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 5 எக்டர் வரை நிலம் உள்ள விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு 5 எக்டர் வரை மானியம் வழங்கப்படுகிறது.

பெண்கள், ஆதிதிராவிட விவசாயிகள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களின் நில சிட்டா, அடங்கல், வரைபடம், ரேஷன்

கார்டு நகல், சிறு விவசாயி சான்று, ஆதார் அல்லது வாக்காளர் அடையாள அட்டை, மண் மற்றும் பாசன நீர் ஆய்வு அறிக்கைகள், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 ஆகியவற்றை வட்டார அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும்.

குத்தகைதாரர்களாக இருந்தால் 10 ஆண்டுகளுக்கான ஒப்பந்த ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும். பாசன ஆதாரம் இல்லாத பாசன நீர் பங்கீடு ஒப்பந்த ஆவணம் சமர்ப்பிக்க வேண்டும்.

இத்தகவலை தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் மணிமொழி தெரிவித்துள்ளார்.

**சங்கராபுரத்தில் தொடர் மழை ஆற்றில் வெள்ளப் பெருக்கு**

சங்கராபுரம் சங்கராபுரம் பகுதியில் பெய்த தொடர் மழையால் மண்டி நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்த நிலையில், நேற்று முன் தினம் இரவு சங்கராபுரம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்தது. சங்கராபுரம் வட்டம், கல்வராயன்மலையில் பெய்த மழை காரணமாக, மணி நதியில் நேற்று காலை வெள்ளம் பெருக்கெடுத்தது.

நிரம்பும் ஏரிகள்

தொடர் மழை காரணமாக சங்கராபுரம் மணி நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், ஆற்று வாய்க்கால் வழியாக தண்ணீர் கரை புரண்டு செல்கின்றது. வரத்து வாய்க்கால்களில் மழைநீர் அதிகரித்ததால் பூட்டை, செம்பராம்பட்டு, அரசம்பட்டு, பொய் குணம், சங்கராபுரம், நெடுமானூர், சோழம்பட்டு, பாண்டலம், குளத்தூர், வடசிறுவளுர், லக்கினாய்கன்பட்டி, ரங்கப்பனூர் போன்ற கிராம ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன.சங்கராபுரம் பகுதியில் ஏரிகள் வேகமாக நிரம்பி வருவதால், விவசாயிகள் சாகுபடி பணிகளை துவக்கி உள்ளனர்.

**மழை வெள்ள மீட்பு பணி உபகரணங்கள் தயார் நிலை**

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் மழை,வெள்ளத்தில் சிக்கி தவிக்கும் மக்களை காப்பாற்ற போலீசார் தயார் நிலையில் உள்ளனர்.

வடகிழக்கு பருவமழை துவங்கியதை தொடர்ந்து, மாவட்டம் முழுவதும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கிய நபர்களை மீட்பதற்காக, சங்கராபுரம் போலீசார் தயார் நிலையில் உள்ளனர். வெள்ளத்தில் சிக்கிய நபர்களை மீட்க கயறு, காற்று நிரப்பிய லாரி டியூப், டார்ச் லைட் ஆகிய உபகரணங்களை, போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை சங்கராபுரம், இன்ஸ்பெக்டர் செல்வராஜ், சப்-இன்ஸ்பெக்டர் சிவச்சந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

## உளுந்தூர்பேட்டை பகுதியில் வெள்ள நிவாரணம் வழங்கல்

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.
உளுந்தூர்பேட்டையில் நடந்த நிகழ்ச்சியில், உளுந்தூர்பேட்டை பகுதியைச் சேர்ந்த 500 நபர்களுக்கும், திருக்கோவிலூர் பகுதியைச் சேர்ந்த 88 நபர்களுக்கு நிவாரண நிதியை, அமைச்சர் மோகன், குமரகுரு எம்.எல்.ஏ., ஆகியோர் வழங்கினர். சிறப்பு கலெக்டர் உதயசந்திரன், கலெக்டர் லட்சுமி, டி.ஆர்.ஓ.,பிருந்தாதேவி, ஆர்.டி.ஓ., பாரதிதேவி, தாசில்தார் ராஜராஜன், மாவட்ட செயலாளர் கதிர்தண்டபாணி, ராஜேந்திரன் எம்.பி., ஜெ.,பேரவை மாவட்ட செயலாளர் ஞானமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மணிராஜ், செண்பகவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

## விழுப்புரம் நகரில் மழையால் பாதிப்பு அமைச்சர், அதிகாரிகள் நேரில் ஆய்வு

விழுப்புரம்: விழுப்புரம் நகரில் மழையால் பாதித்த பகுதிகளை அமைச்சர் மோகன் தலைமையிலான அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்க ளாக பெய்து வரும் பலத்த மழையால் ஆங்காங்கே மழைநீர் வெள்ளம் போல் சூழ்ந்துள்ளது. குடிசை

வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் மக்கள் வசிக்க கூட முடியாமல் மாற்று இடங்களுக்கு சென்றனர்.

மாவட்டத்தில் சுவர் இடிந்தும், குளிர் தாங்க முடியாமலும், ஆற்று நீரில் அடித்து செல்லப்பட்டு நேற்று முன்தினம் வரை 18 பேர் இறந்துள்ளனர். இந்த நீரை அப்புறப்படுத்தும் பணியில் பேரிடர் மேலாண்மை மீட்பு குழுவினர், தீயணைப்பு வீரர்கள், நகராட்சி அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

விழுப்புரம் நகரில் மழைநீர் சூழ்ந்துள்ள பகுதிகளை அமைச்சர் மோகன் தலைமையிலான அதிகாரிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். புதிய பஸ் நிலையத்தில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வெள்ளநீர் அப்புறப்படுத்தும் பணிக்கான இடத்தை, அமைச்சர் மோகன் ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, சுதாகர் நகர், கே.கே., ரோடு, வழுதரெட்டி உட்பட பல நகர பகுதிகளில் அமைச்சர் மோகன் ஆய்வு மேற்கொண்டு, மழைநீரை அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மாவட்ட வெள்ளசேதம் நிவாரண பணி ஒருங்கிணைப்பாளர் உதயசந்திரன், கலெக்டர் லட்சுமி, எம்.பி.,க்கள் டாக்டர் லட்சுமணன், ராஜேந்திரன், நகர்மன்ற தலைவர் பாஸ்கரன், மாவட்ட கவுன்சிலர்கள் ராமலிங்கம், செங்குட்டுவன், மாவட்ட அ.தி. மு.க., துணை செயலாளர் அற்புதவேல், இளைஞரணி செயலாளர் பசுபதி, ஒன்றிய செயலாளர் முருகன், கவுன்சிலர் வக்கீல் செந்தில் உடனிருந்தனர்.

### மாவட்டத்தில் ஏரிகள் நிரம்பியது

விழுப்புரம்: மாவட்டத்தில் தொடரும் பருவமழையால் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 175 ஏரிகளில் தண்ணீர் நிரம்பி உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் 832 ஏரிகள் மற்றும் 3 அணைகள் உள்ளது. இதில், விழுப்புரம் மண்டலத்தில் 620 ஏரி மற்றும் வீடூர் அணையும், விருத்தாச்சலம் மண்டலத்தில் உள்ள கள்ளக்குறிச்சி பகுதியில் 212 ஏரிகள் மற்றும் கோமுகி, மணிமுக்தா அணையும் உள்ளன.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் வடக்கிழக்கு பருவமழையால், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 832 ஏரிகளில், 159 ஏரிகள் முழுமையாக நிரம்பின. மேலும் 165 ஏரிகள் 75 சதவீதமும், 193 ஏரிகள் 50 சதவீதமும், 315 ஏரிகள் 50 சதவீதத்திற்கு கீழ் கடந்த 14ம் தேதி வரை தண்ணீர் நிரம்பியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் 175 ஏரிகள் நூறு சதவீதமும், 202 ஏரிகள் 75 சதவீதமும், 171 ஏரிகள் 50 சதவீதமும், 283 ஏரிகள் 50 சதவீதத்திற்கு குறைவாக நீர் நிரம்பியது.

## நெல் பயிர்கள் மூழ்கியதால் மாவட்ட விவசாயிகள் கவலை

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால், பல இடங்களில் நெல் பயிர்கள் நீரில் மூழ்கியது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தீவிர பருவமழையால், அனைத்து நீர் நிலைப் பகுதிகளும் வேகமாக நிரம்பி வருகிறது. இதுவரை மாவட்டத்திலுள்ள 50 சதவீதத்திற்கு மேற்பட்ட ஏரிகள் நிரம்பியுள்ளது.

இந்த பகுதிகளில் உபரியாக வெளியேறும் நீர், அருகிலுள்ள தாழ்வான நிலப் பகுதியில் தேங்கி நிற்கின்றன. தற்போது ஏரிக்கு கீழே உள்ள தாழ்வான பகுதிகளில், நெல் பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. இதனால் நெல் வயல்கள் நீரில் மூழ்கி உள்ளது. கோலியனூர் கூட்ரோட்டிலிருந்து பண்ருட்டி செல்லும் சாலையின் இரு புறங்களிலும் நெல் பயிர்கள் மூழ்கியுள்ளது. இவ்வாறு மாவட்டத்தின் பல இடங்களிலும், நூற்றுக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர்கள் நீரில் மூழ்கி இருப்பதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## மழைக்கு பசு மாடு பலி

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டு அண்ணா நகரில் பெய்த கன மழையால், பசு மாடு இறந்தது. மூங்கில்துறைப்பட்டு பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் அண்ணாநகர் சிங்காரம் மனைவி ராணி என்பவரது பசு மாடு இறந்தது. தகவலறிந்த வி.ஏ.ஓ., குழந்தைவேல் கொடுத்த புகாரின் பேரில் வருவாய் ஆய்வாளர் கலைமணி நேரில் சென்று, விசாரணை செய்தார். அதன்பின், கால்நடை மருத்துவர் சிவக்குமார் இறந்த பசு மாடு உடலை பரிசோதனை செய்தார்.

**மரக்காணம் பகுதியில் மரவள்ளி பயிர்கள் சேதம்**

மரக்காணம்: மரக்காணம் பகுதியில் பெய்த கனமழையால் 100 ஏக்கர் பரப்பிலான மரவள்ளி பயிர்கள் சேதமடைந்தன.

மரக்காணம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நடுக்குப்பம், எம்.புதுப்பாக்கம், கே.என்.பாளையம், திருக்கனூர், வண்டிப்பாளையம், கந்தாடு உள்ளிட்ட கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மரவள்ளி பயிர் செய்துள்ளனர்.

இதில் பல்வேறு கிராமங்களில் 100 ஏக்கர் நிலத்தில்,முன் பருவ மரவள்ளி கிழங்கு பயிர்கள் செழிப்பாக வளர்ந்து, அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது. மரக்காணம் பகுதியில் பெய்த தொடர் மழையால், மரவள்ளி கிழங்கு செடிகள் சாய்ந்து, சேதமடைந்துள்ளன.

**மாவட்டத்தில் 85 கால்நடைகள் பலி**

விழுப்புரம்: மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த வடக்கிழக்கு பருவமழையால் 85 கால்நடைகள் இறந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வடக்கிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதில், விழுப்புரம் தாலுகாவில் 5 ஆடுகள், 3 மாடுகளும், கள்ளக்குறிச்சி தாலுகாவில் ஒரு ஆடும், செஞ்சி தாலுகாவில் 3 மாடுகளும், திண்டிவனம் தாலுகாவில் 2 மாடுகளும், சங்கராபுரத்தில் 3 ஆடுகள் மற்றும் 3 மாடுகளும் இறந்தள்ளது.

இதேபோல், மரக்காணம் தாலுகாவில் 2 மாடுகளும், திருக்கோவிலூர் தாலுகாவில் 9 மாடுகளும், உளுந்தூர்பேட்டை தாலுகாவில் 32 மாடுகளும், வானூர் தாலுகாவில் 3 மாடுகளும், விக்கிரவாண்டி தாலுகாவில் 8 ஆடுகளும், 14 மாடுகளும் இறந்துள்ளன. மாவட்டத்தில் மொத்தம் 85 கால்நடைகள் மழை பாதிப்பால் இறந்துள்ளது.

**வடகிழக்கு பருவ மழையின் கடந்த ஆண்டு சாதனை முறியடிக்குமா? பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள் எதிர்பார்ப்பு**

சேலம்: தமிழகத்தில், கடந்த ஆண்டு, வடகிழக்கு பருவ மழையின் சாதனைகள், நடப்பாண்டு முறியடிக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை அதிகாரிகள் மத்தியில் எழுந்துள்ளது.

தமிழகத்தில், கடந்த, 2012ல், 921 மி.மீ., மழையை எதிர்பார்த்த நிலையில், தென்மேற்கு, வடகிழக்கு இரண்டையும் சேர்த்து, 712 மி.மீ., மழையே கிடைத்தது. 2013ல், 920.20 மி.மீ., மழை எதிர்பார்த்த நிலையில், 746.30 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. இரண்டு ஆண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால், கடும் வறட்சி நிலவியதை அடுத்து, சென்னையை தவிர்த்து பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்தது. கடந்த, 2014ல் தென் மேற்கு பருவ மழை, 82.20 மி.மீ., பெய்த நிலையில், வடகிழக்கு பருவ மழை நவம்பர் கடைசி வாரத்தில், 730.10 மி.மீ., தாண்டியதால், தமிழகத்தில் உள்ள, 89 அணைகளில், முழு கொள்ளவான, 238.58 டி.எம்.சி.,யில், 202 டி.எம்.ஸி., வரை நீர்மட்டம் எட்டியது. தமிழகம் முழுவதும் உள்ள, 39 ஆயிரத்து, 202 பெரிய ஏரிகளில், 13 ஆயிரத்து, 779 சிறிய ஏரிகள், நவம்பர் மாதத்தில் முழு அளவை எட்டியதால், விவசாய பணிகள் துவங்கின. நடப்பாண்டில், தமிழகம் முழுவதும் உள்ள, 89 அணைகளில், 60 சதவீத அணைகள் மட்டும், முழு கொள்ளவை நெருங்கி வரும் நிலையில், மீதமுள்ள அணைகள், ஆமை வேகத்திலேயே நிரம்பி வருகின்றன. இதே போல், 32 ஆயிரத்து, 120 ஏரிகளில், 60 சதவீத ஏரிகள் மட்டுமே நிரம்பி வருகின்றன. நடப்பாண்டில், குறைந்த காற்றழுந்த தாழ்வு மண்டலம் உருவாகி, மழை கொட்டித் தீர்த்த போதிலும், நீர்

நிலைகள் இன்னும் சொல்லிக் கொள்ளும் படி நிரம்பாததால், தமிழக விவசாயிகள், முழு வீச்சில் பணிகளை துவங்காமல் உள்ளனர். நவ.,10 வரை, தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை, 400 மி.மீ.,யை தாண்டி உள்ளதால், கடந்த ஆண்டு சாதனையான, 710.10 மி.மீ.,தாண்டி, நடப்பாண்டில் புதிய சாதனை படைக்கும் என்ற எதிர்பார்ப்பு, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை அதிகாரிகள் மத்தியில் மட்டுமின்றி, விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

வானிலை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தி உள்ள, 45 வானிலை நிலையங்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் அளித்த தகவலின் படி, கடந்த 14 நாளில், வடகிழக்கு பருவ மழை, 400 மி.மீ., தாண்டி உள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள, 3,280 திறந்த வெளி கிணறுகள், 1,559 ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் கனிசமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், அனைத்து மாவட்டங்களிலும், மழை பரவலாக பெய்யாமல், குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் கொட்டித் தீர்ப்பதால், 60 சதவீத நீர்நிலைகளே நிரம்பி வருகின்றன. மீதமுள்ள நீர்நிலைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு குறைவாக உள்ளதால், நடப்பு மாதத்தின் கடைசி வாரத்துக்குள், நிரம்ப வாய்ப்புள்ளது. விவசாய பணிகளை துவக்குவதில், தாமதம் ஏற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு, தென் மேற்கு, வடகிழக்கு இரண்டும் சேர்த்து, 882.மி.மீ., மழை கிடைத்தது. அந்த சாதனை நடப்பாண்டு முறியடிக்கப்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

### மேட்டூர் அணை நீர் இருப்பு 21 நாளில் 21 டி.எம்.சி., உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர் இருப்பு கடந்த, 21 நாளில், 21 டி.எம்.சி., அதிகரித்துள்ளது, விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த மாதம், 25ம் தேதி, மேட்டூர் அணை நீர்மட்டம், 60 அடியாகவும், நீர் இருப்பு, 25 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது, டெல்டாவில் சம்பா சாகுபடி மேற்கொண்ட விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த பருவமழையால் கடந்த, 26ம்

தேதி முதல் மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்தால் கடந்த, 21 நாளில் மேட்டூர் அணை நீர் இருப்பு, 21 டி.எம்.சி., அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், 84.700 அடியாகவும், நீர் இருப்பு, 46.801 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 8,994 கனஅடி நீர்வந்து கொண்டிருந்தது. கடந்த நான்கு நாட்களாக அணை நீர்வரத்து சரிந்து கொண்டே வருவது குறிப்பிடத்தக்கது.

**சாரல் மழையால் மக்கள் நிம்மதி**

சேலம்: சேலத்தில், நேற்று காலை முதல், சாரல் மழை பெய்து வந்ததால், மக்கள் நிம்மதியடைந்தனர்.

தமிழகத்தில், வட கிழக்கு பருவமழை, கடந்த, இரு வாரமாக வெளுத்து வாங்குகிறது. அதிகளவு பாதிக்கப்பட்ட சென்னையில், சீரமைப்பு நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ந்து, ஐந்து நாட்களுக்கு மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்ததால், சேலம் உள்பட, 21 மாவட்டங்களில், பள்ளி, கல்லூரிகளுக்கு, அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் விடுமுறை அறிவித்தனர். ஆனால், நேற்று காலை முதல், வானம் வெறித்த நிலையிலேயே இருந்தது. பெரிய மழை வரும் என, எதிர்பார்த்து, அரசு விடுமுறை அளித்த நிலையில், மழை வராததால், மாணவ, மாணவியர் வீட்டில் வீணாக பொழுதை கழித்தனர். காலை முதல், இரவு வரை, வானம் அவ்வப்போது சாரல் மட்டும் போட்டுக் கொண்டே இருந்தது. அதிக மழை இல்லாததால், பொதுமக்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டனர். இன்னும், ஓரிரு நாட்களுக்கு, அதிக வெயிலின்றி, வானம் மேகமூட்டத்துடன் தான் இருக்கும் என, சேலம் வானிலை மைய அதிகாரிகள் கூறினர். சேலத்தில், நேற்று முன்தினம் பெய்த மழை விவரம்(மி.மீ.,): சேலம் - 8.2. ஏற்காடு - 18.2, வாழப்பாடி - 5.1, ஆத்தூர் - 9.8, தம்மம்பட்டி - 25.4, கெங்கவல்லி - 24.5, வீரகனூர் - 36.5, சங்ககிரி - 6.0, இடைப்பாடி - 6.0, ஓமலூர் - 7.3, மேட்டூர் - 4.1, மொத்தம், 151.2, சராசரி - 13.8.

## கரும்பு விலை டன்னுக்கு ரூ. 1,500 வீழ்ச்சி: வெல்லம் ஆலைகளில் ஆர்டர் இல்லாததால் கவலை

ப.வேலூர்: ப.வேலூர் பகுதியில், வெல்லம் ஆலைகளில் ஆர்டர் குறைவாக இருப்பதால், கரும்பு அறுவடை நேரத்தில், அதன் விலை டன்னுக்கு, 1,500 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் மற்றும் சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்யப்படும் கரும்பு, அதிகளவு வெல்ல உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. விவசாயிகள் வெல்ல ஆலை அமைத்தும், வெளிச்சந்தையிலும் கரும்பை விற்று வருகின்றனர். கரும்பு நடவு செய்து ஓராண்டுக்கு பிறகே, அறுவடைக்குத் தயாராகிறது. இதனால், அறுவடை காலத்தில் கிடைக்கும் விலையே விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. இந்நிலையில், தற்போது, கரும்பு விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டு, அறுவடையின் போது டன்னுக்கு, 3,000 ரூபாய் வரை, கரும்புக்கு விலை கிடைத்தது. இதனால், மாற்றுப் பயிருக்கு மாறாமல், விவசாயிகள் மீண்டும், கரும்பு நடவு செய்தனர். ஏக்கருக்கு, 30 டன்னுக்கும் மேல் விளைச்சல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். அதற்கேற்றால் போல், விளைச்சலும் இருந்தது. ஆனால், விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது, ஒரு டன் கரும்பு வெல்ல உற்பத்திக்காக, 1,500 ரூபாய்க்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. டன்னுக்கு, 1,500 ரூபாய் வரை குறைந்துள்ளதால், நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. கரும்பு விலை வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, விவசாயிகள் கூறியதாவது: வெளி மாநிலங்களில் வெல்லம் விலை மந்தமாக இருப்பதால், வெளிமாநிலங்களுக்கு வெல்லம் அனுப்புவது நிறுத்தப்பட்டுள்ளது. அதனால், உள்ளூர் மார்க்கெட்டிலும் வெல்லம் விலை

வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பில்லூர் படுகையணை நிரம்பியது: 5 ஆண்டுக்கு பின் விவசாயிகள் மகிழ்ச்சி

ப.வேலூர்: பரமத்தி அடுத்த, பில்லூர் படுகையணை, திருமணிமுத்தாற்றில் இருந்து வந்த மழை நீரால் நிரம்பியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் அடுத்த, பில்லூரில், திருமணி முத்தாற்றின் குறுக்கே படுகையணை உள்ளது. திருமணிமுத்தாற்றில் நீர் வரத்து அதிகமாக வரும் போது, இந்த படுகையணையில் தண்ணீர் தேக்கப்பட்டு, பின்னர் வழிந்தோடி பரமத்தி அருகே உள்ள இடும்பன் குளத்தை வந்தடையும். மேலும், இடும்பன் குளம் நிரம்பியதும், உபரிநீர் நன்செய் இடையாறு வழியாக காவிரியாற்றில் கலப்பது வழக்கம்.

மழைப்பொழிவு இல்லை: இந்நிலையில், திருமணிமுத்தாறு, சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவார பகுதியில் தொடங்கி, ப.வேலூர் அருகே உள்ள காவிரியாற்றில் முடிவடைகிறது. ஏற்காடு, சேலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகப்படியாக மழை பெய்யும் காலங்களில், திருமணிமுத்தாற்றில் தண்ணீர் வருவது வழக்கம். ஆனால், கடந்த ஐந்தாண்டாக சரிவர மழைப்பொழிவு இல்லாததால், திருமணிமுத்தாறு சீமை கருவேல மரங்களின் ஆக்கிரமிப்பில் தண்ணீர் வற்றி வெறும் காடாக காட்சியளித்து வந்தது.

இணைக்க வேண்டும்: இதனால், திருமணிமுத்தாறி பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருந்தனர். இதற்கிடையே, திருமணிமுத்தாறு பாசன விவசாயிகள் சார்பில், காவிரியையும், திருமணிமுத்தாறையும் இணைக்க வேண்டும் எனவும், காவிரியில் வெள்ளப்பெருக்கு காலங்களிலும், உபரிநீரையையும் திருமணி முத்தாற்றிற்கு திறந்துவிட்டு விவசாயிகளை காக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக, பெய்த மழையால், சேலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் இருந்து, திருமணிமுத்தாறு வழியாக

மழைநீரின் வரத்து அதிகரித்துள்ளது. இந்த மழைநீர், பரமத்தி அருகே உள்ள பில்லூர் படுகையணையை வந்தடைந்தது. திடீரென படுகையணை நிரம்பியதால், அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## முட்டை விலை 360 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 360 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 357 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, மூன்று காசு உயர்த்தி, 360 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 382, ஹைதராபாத், 353, விஜயவாடா, 353, பர்வாலா, 363, மும்பை, 393, மைசூர், 375, பெங்களூரு, 373, கொல்கத்தா, 395, டில்லி, 380. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 59 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக் கோழி விலையை, இரண்டு ரூபாய் உயர்த்தி, கிலோ, 61 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில், நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 61 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

## கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து குறைவு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் மழையால், கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் வரத்து, வினாடிக்கு, 1,784 கனஅடியாக குறைந்துள்ளது.

பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரலாறு காணாத அளவிற்கு மழை பெய்து வருகிறது. கடந்த, 9ம் தேதி பெய்யத்

துவங்கிய மழை, கடந்த, 8 நாட்களாக தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் மாவட்டம் முழுவதும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக ஊத்தங்கரை மற்றும் ஓசூரில், 42 மி. மீ., மழை பதிவானது. பெனுகொண்டாபுரம், 28மி.மீ., கிருஷ்ணகிரி, 23.20, நெடுங்கல், 22, போச்சம்பள்ளி, 18.20, பாரூர், 18, தளி, 15, சூளகிரி, 13, தேன்கனிக்கோட்டை, 8, ராயக்கோட்டை, 7, அஞ்செட்டி, 4.20 மி.மீ.,என, மொத்தம், 206.60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் தொடர்மழையால், கே.ஆர்.பி., அணைக்கு கடந்த, மூன்று நாட்களுக்கு முன், வினாடிக்கு, 2,100 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில், நேற்று காலை நிலவரப்படி, அணைக்கு வினாடிக்கு, 1,784 கனஅடி நீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 2,107 கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதனால் ஆற்றில் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணையின் மொத்த நீர்மட்டமான, 52 அடியில், தற்போது, 51.05 அடி நீர் இருப்பு உள்ளது.

### காற்றழுத்த தாழ்வு பகுதியால் எதிர்பார்ப்பு: திருச்சி மாவட்டத்தில் ஏமாற்றியது மழை

திருச்சி: வங்கக் கடலில் மையங்கொண்ட, காற்றழுத்த தாழ்வு பகுதியால் , நேற்று பலத்த மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திருச்சி மாவட்டத்தில் மழை பெய்யவில்லை.

தென் மேற்கு வங்கக் கடலில் மையங்கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வுப் பகுதி, வட மேற்கு திசை நோக்கி நகர்ந்து, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக நீடித்தது. இதனால், வட கடலோர மாவட்டங்களில், பலத்த மழை பெய்யும் என்று, வானிலை ஆய்வு மையம் எச்சரித்தது. இதையடுத்து, சென்னை, திருச்சி, தஞ்சை, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை உட்பட, 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில், பள்ளி, கல்லூரிகளுக்கு, நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது. நேற்று நடைபெறுவதாக இருந்த, திருச்சி பாரதிதாசன் பல்கலை தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், நேற்று முன்தினம் மாலை வரை, நீடித்த மழை, நேற்று அதிகாலையில் இடைவெளி விட்டது.

நேற்று பகல் முழுவதும், வானம் மேக மூட்டத்துடன் மட்டுமே காணப்பட்டது. மழை பெய்யவில்லை.

நீர் மட்டம் உயர்வு: திருச்சி மாவட்டத்தில், கடந்த மாதம் கடைசி வாரத்தில் பரவலாக பெய்யத் துவங்கிய மழை, கடந்த, 4, 5ம் தேதிகளில் பலத்த மழையாகவும், 8, 9ம் தேதிகளில் அடை மழையாகவும் பெய்தது. இதனால், திருச்சி நகரை ஒட்டிய கே.கே. நகர் பகுதியிலும், முசிறி ஒன்றியப்பகுதியிலும், மழை நீர் தேங்கி வீடுகள் சேதமடைந்தது. அடுத்து, நான்கு நாட்கள் இடைவெளி விட்டிருந்த மழை, வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை மையங்கொண்டதால், மீண்டும், 14ம் தேதி தீவிரமடைந்தது. பகல் மற்றும் இரவு நேரத்தில் பெய்த மழை காரணமாக, நீர் ஆதாரங்களில், நீர்மட்டம் உயர்ந்துள்ளது. துறையூர் பகுதியில், அதிக மழை பொழிவு பதிவாகி உள்ளது. நேற்று காலை வரை துறையூரில், 28 மி.மீ., மழை, புலிவலத்தில், 25 மி.மீ., தூவாக்குடியில், 22 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்த இரண்டு நாட்களில் பரவலாக பெய்த மழையால், மாவட்ட முழுவதும் மொத்தம், 573 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

நிரம்பும் நீர் ஆதாரங்கள்: திருச்சி மாவட்டத்தில், கடந்த, 9ம் தேதி வரை பெய்த மழை காரணமாக, துறையூர் பகுதியில் ஆலத்துடையான் பட்டி பெரிய ஏரி, சின்ன ஏரி, நாயக்கன் பாளையம், சிறுநாவலூர், புலிவலம் உட்பட, ஒன்பது இடங்களில் உள்ள ஏரிகள் முழுமையாக நிரம்பின. அடுத்து, 14, 15ம் தேதிகளில் மாவட்டம் முழுவதும் பெய்த மழையால், இதுவரை மொத்தம், அரியாறு வடிநில கோட்டத்தில், ஒன்பது குளங்களும், ஆற்றுப் பாதுகாப்பு கோட்டத்தில் உள்ள, 39 குளங்களும் முழுமையாக நிரம்பி உள்ளதாக, பொதுப்பணித்துறை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 1.82 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி இலக்கு: தொடர் மழையால் நடப்பாண்டில் நம்பிக்கை

கரூர்: கரூர் மாவட்டத்தில், கடந்தாண்டை காட்டிலும், நடப்பாண்டில், தொடர் மழை காரணமாக, 1.82 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி இலக்கை எட்ட வாய்ப்பு இருப்பதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

தமிழகத்தில், இரண்டாம் பசுமைப்புரட்சியை உருவாக்கும் விதத்தில், வேளாண் துறையின் மூலம் பல்வேறு திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, கரூர் மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பெருக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகசூல் பெருக்கம்: தமிழகத்தில் குறைவான மழை பெய்யும் மாவட்டத்தில், கரூர் ஒன்று என்பதால், காவிரி, அமாரவதி மற்றும் ஏரி, குளங்களில் ஆகியவற்றி கிடைக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்தில் மகசூல் பெருக்க வேளாண் துறை முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இங்கு, முக்கிய பயிராக சோளம், 18 ஆயிரம் ஹெக்டேரும், நெல், 14 ஆயிரம் ஹேக்டேரும் மற்றும் கரும்பு, வாழை, துவரை உளுந்து போன்ற சிறுதானியங்கள் ஆண்டு தோறும் சராசரியாக பயிரிடப்பட்டு வருகிறது. இதனால், ஆண்டு தோறும் படிபடியாக உணவு உற்பத்தி கரூர் மாவட்டத்தில் சீராக உயர்த்தி வருகிறது.

வறட்சியால் குறைவு: இதுகுறித்து, வேளாண் இணை இயக்குநர் மதனகோபல் கூறியதாவது: திருத்திய நெல் சாகுபடி, பயறு மற்றும் தனியங்கள் உற்பத்தி பெருக்க பல்வேறு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதையடைய திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டது. கடந்த, 2012-13ல், 50 ஆயிரத்து, 667 ?ஹக்டேரில் சாகுபடி நடந்தது. அந்த ஆண்டு வறட்சி காரணமாக, 58 ஆயிரத்து, 714 மெட்ரிக் டன் மட்டுமே உணவு உற்பத்தி நடந்தது.

மிஞ்ச வாய்ப்பு: இருப்பினும், 2013-14ல், 57 ஆயிரத்து, 666 ஹெக்டேரில், ஒரு லட்சத்து, 24 ஆயிரத்து, 451 மெட்ரிக் டன் உற்பத்தி அடைய முடிந்தது. இந்த இரண்டு ஆண்டுகளை விட, 2014-15ல், 74 ஆயிரத்து, 378 ஹெக்டேரில், ஒரு லட்சத்து, 35 ஆயிரத்து, 407 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டது. நடப்பாண்டில், இதுவரை, 49 ஆயிரத்து, 892 ஹெக்டேர் சாகுபடி நடந்து வருகிறது. இதில், சோளம், 18 ஆயிரத்து, 488 ஹெக்டேரும், சம்பா நெல், 9,236 ஹேக்டரும் நடந்து உள்ளது. தற்போது, பருவமழை கை

கொடுத்து வருவதால், கடந்த ஆண்டை காட்டிலும், நடப்பாண்டில், 1.82 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி இலக்கை மிஞ்சும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## டெல்டாவில் 70 சதவீத சம்பா சாகுபடி பணி நிறைவு: மழையால் 2,000 ஏக்கர் பயிர் நீரில் முழ்கியது

தஞ்சாவூர்: தஞ்சை,திருவாரூர் மற்றும் நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், 70 சதவீத சம்பா மற்றும் தளாடி நடவு பணிகள் நிறைவுடைந்துள்ளன. தொடர்மழையால், 2,000 ஏக்கர் பயிர்கள் நீரில் முழ்கியுள்ளன.

காவிரி டெல்டா பகுதியான, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என, மூன்று போகம் நெல் சாகுபடி நடைபெறும். மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்து, இதன் சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும். ஆனால், இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாததால் வழக்கமாக திறக்கப்படும், ஜூன், 12ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. இந்த நிலையில் சம்பா, தாளடி சாகுபடிக்காக மேட்டூர் அணை கடந்த ஆகஸ்ட், 9ம் தேதி திறக்கப்பட்டு, தண்ணீர் கல்லணையை வந்தடைந்தது. இதையடுத்து கல்லணையில் இருந்து பாசனத்துக்கு, ஆகஸ்ட், 13ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதையெடுத்து, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மொத்தம், 10 லட்சத்து, 65 ஆயிரத்து, 625 ஏக்கர்
சம்பா, தாளடி சாகுபடி செய்ய வேளாண்மை துறையால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சாகுபடிகள் தொடங்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில், 3 லட்சத்து, 43 ஆயிரத்து, 125 ஏக்கரில், சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் சம்பா சாகுபடி, 2 லட்சத்து, 66 ஆயிரத்து, 875 ஏக்கரிலும், தாளடி, 76 ஆயிரத்து, 250 ஏக்கருமும் அடங்கும் .இதைபோல்,திருவாரூர் மாவட்டத்தில், 3 லட்சத்து, 75 ஆயிரத்து, 250 ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில், 3 லட்சத்து, 47 ஆயிரத்து, 250 ஏக்கரிலும் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகளை விவசாயிகள் தொடங்கினர். அதன்படி தற்போது, 'சம்பா மற்றும் தளாடி நடவு பணிகள், 70 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது' என, வேளாண்மை துறை அதிகாரிகள்

தெரிவிக்கின்றனர். அந்த வகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 18 ஆயிரத்து, 680 ஏக்கரிலும், திருவாரூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 38 ஆயிரம் ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 12 ஆயிரம் ஏக்கரிலும் தற்போது நடவு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

2,000 ஏக்கர் பயிர் முழ்கியது: தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில், தஞ்சாவூர் மாவட்டங்களில் கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய பகுதிகளில், 253 ஏக்கரிலும், நாகை மாவட்டங்களில், கொள்ளிடம்,சீர்காழி,தலைஞாயிறு போன்ற பகுதிகளில், 1,200 ஏக்கரும், திருவாரூர் மாவட்டங்களில்நீடாமங்கலம், கொரடாச்சேரி, மன்னார்குடி உள்பட பகுதிகளில், 836 ஏக்கர் பயிர்கள் நீரில் முழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் ஏற்படும் என கவலையடைந்துள்ளனர்.

### அழகாபுரி அணை அடி வாரத்தில்ஏராளமான தென்னைகள் அழிப்பு

வேடசந்துார்:அழகாபுரி அணை பகுதியில் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியால் ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்து போயின. நிவாரணத்திற்காக காத்திருந்த விவசாயி, கிடைக்காமல் போனதால் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினார்.வேடசந்துார் ஒன்றியம் அழகாபுரி அணை பகுதியில் கடந்த ஆண்டு கடும் வறட்சி நிலவியது. விவசாயம் பொய்த்துப் போனது. அப் பகுதியில் ஏராளமான ஏக்கரில் இருந்த தென்னை விவசாயம் கை விட்டதால், விவசாயிகள் கவலை அடைந்தனர்.

இப்பகுதியில் ஏராளமான தென்னை மரங்கள் காயத் துவங்கின. அவற்றுக்கு அரசு நஷ்ட ஈட்டு தொகை வழங்கும் என எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகள், அதை அப்படியே வைத்து இருந்தனர். இதுவரை நஷ்ட ஈடு எதுவும் கிடைக்காமல் ஏமாந்தனர்.

இந்நிலையில் தற்போது பெய்யும் மழையை பயன்படுத்தியாவது
விவசாயம் செய்யலாம் என்ற எண்ணத்தில், காய்ந்த தென்னை மரங்களை வெட்டி விற்கும் நிலைக்கு போய்விட்டனர்.

தோட்ட உரிமையாளர் கருப்பசாமியிடம் கேட்டபோது, ""அழகாபுரி அணையின் அடிவார பகுதியில் எனக்கு தோட்டம் இருந்தும், தண்ணீர் இன்றி

550 தென்னை மரங்கள் காய்ந்து போயின. இதற்கு அரசு நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் அதில் விவசாயம் செய்வதற்காக காய்ந்த மரங்களை வெட்டி அழித்துவிட்டோம், என்றார்.

## தொடர்மழையால் காய்கறி விலை ஏறுமுகம்

ஒட்டன்சத்திரம்:தொடர்மழை காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டதால் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி, முருங்கை, கொத்தவரை உட்பட பல காய்கறிகளின் விலை கிடு கிடு வென உயர்ந்துள்ளது.ஒட்டன்சத்திரம் மற்றும் பக்கத்து மாவட்டங்களில் விளைந்த காய்கறிகள் இங்குள்ள காய்கறி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த சில நாட்களாக அவ்வப்போது பெய்து வந்த மழை காரணமாக விளைந்த தக்காளி செடிகளில் அழுகியும், முருங்கை பூக்கள் உதிர்ந்தும் போயின. இதே போல் மற்ற காய்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் வரத்து குறைந்து போனது. தேவைக்கேற்ப காய்கறிகள் கிடைக்காததால் விலை உயரத் தொடங்கியது.கடந்த வெள்ளியன்று 14 கிலோ தக்காளி பெட்டி ரூ.380 க்கு விற்றது. நேற்று முன்தினம் அதே அளவு கொண்ட தக்காளி ரூ.570க்கு விற்றது. வெள்ளியன்று 30 கிலோ கொண்ட வெள்ளை கத்தரிக்காயின் விலை ரூ.750 ஆக இருந்தது. நேற்று முன்தினம் இதன்விலை ரூ.1400 ஆக அதிகரித்தது. கடந்த சில நாட்களாக கிலோ ஒரு ரூபாய்க்கும் கீழ் விற்ற புடலங்காய் ரூ.7க்கு விற்றது. கிலோ ரூ.80க்கு விற்ற கரும்பு முருங்கை ரூ.20 வரை <<உயர்ந்து ரூ.100க்கும், ரூ.22 க்கு விற்ற வெண்டைக்காய் ரூ.8 அதிகரித்து ரூ.30க்கு விற்றன. இதே போல் பல காய்கறிகளின் விலை ஏறுமுகமாக காணப்பட்டது. இருந்த போதிலும் கிலோ ரூ.20க்கு விற்ற பச்சை மிளகாய் ரூ.10 க்கு விற்றது.

மழை தொடரும் நிலையில், வரத்து குறைந்து விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கால்நடைகள் வளர்ப்புகுறித்து இலவச பயிற்சி**

திண்டுக்கல்:திண்டுக்கல் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் 2 நாள் பயிற்சி நடக்க உள்ளது.வரும் நவ.26 ல் வெள்ளாடு, நவ.27 ல் நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்தும் பயிற்சி நடக்கிறது. முன்பதிவிற்கு 0451-2460141ல் தொடர்பு கொள்ளலாம்.

மையத்தின் தலைவர் பேராசிரியர் சிவசீலன் கூறுகையில், "" கால்நடை கொட்டகை அமைப்பது, நோய் பராமரிப்பு, பண்ணை அமைத்தல், வியாபார உத்திகள் குறித்து ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும். அனைவருக்கும் அரசு சான்றிதழ்களும் வழங்கப் படும்,என்றார்.

**மழைக்காலத்தில் நிலக்கடலை பயிரை தாக்கும் பூச்சிகள்:பாதுகாக்க எளிய வழிமுறை**

திண்டுக்கல்:நிலக்கடலை பயிரை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க எளிய வழிமுறையை வேளாண்மை துறை அதிகாரி ஆலோசனை வழங்கினார்.தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்து பயிரில் நிலக்கடலை முக்கியமானது. நிலக்கடலை பயிரிட முறையான பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை நேர்த்தி, களை கட்டுபாடு, பாசனம் செய்தல் அவசியம். பூச்சி மேலாண்மையிலும் விவசாயிகள் அக்கறை காட்ட வேண்டும். மழைக்காலத்தில் நிலக்கடலை பயிரில் ரோமப்புழு, சுருள் பூச்சியின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதைக் கட்டுபடுத்த, கோடை காலத்தில் நிலத்தை உழவு செய்து ரோமப்புழுக்களின் கூட்டுப்புழுக்களை அழிக்க வேண்டும்.

விளக்குப் பொறி, தீப்பந்தம் வைத்து கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். வயலை சுற்றிலும் 30 முதல் 25 செ.மீ அகலத்தில் குழிகள் அமைப்பதனால் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தவிர்க்கலாம்.

விவசாயிகள் பாசலான், டைமீத்தேயேட், மாலத்தையான், மீத்தைல்மத்தான், டைகுளோரோவாஸ் போன்றவற்றை வயலுக்கு தெளிக்கலாம். இதன் மூலம் பயிரை தாக்கும் பூச்சியினங்களின் தாக்குதல் குறையும்.

வேளாண்மை துறை இணை இயக்குனர் சம்பத்குமார் கூறுகையில்," மழைக்காலங்களில் நிலக்கடலை பயிரை பூச்சிகளின் தாக்குதலிருந்து பாதுகாக்க விவசாயிகள் முறையான ஊட்டச்சத்து உரங்களை இடுதல் வேண்டும். வேளாண் துறையினரின் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தல் வேண்டும். மேலும், நிலக்கடலை பயிருக்கு இடையே ஊடுபயிராக துவரை மற்றும் தட்டைபயிரை பயிரிடலாம்', என்றார்.

## இன்னும் மழையை எதிர்பார்க்கும்கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள்

கூடலூர்:பெரியாறு அணையில் 136 அடியை எட்டுவதற்கு இன்னும் அதிக மழை பெய்ய வேண்டும் என, கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்த மழையால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து 130 அடியைக் கடந்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 130.90 அடியாக இருந்தது. தற்போது மழை சற்று குறைந்து தேக்கடியில் 2.4 மி.மீ., மட்டுமே பதிவானது. இதனால், அணைக்கு நீர்வரத்தும் குறைந்து 788 கன அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 511 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 4908 மில்லியன் கன அடியாகும். அணையில் நீர்மட்டம் 130 அடியைக் கடந்தவுடன், எப்படியும் 136 அடியை எட்டிவிடும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். ஆனால், தற்போது மழை சற்று குறைந்து உள்ளதால், நீர்மட்டம் உயருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நீர்மட்டம் 136 அடியைக் கடந்து விட்டால், கம்பம் பள்ளத்தாக்கில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பிரச்னை இருக்காது.

மேலும், பேரணை, கள்ளந்திரி வரையிலும் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதனால் விவசாயிகள், பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## ராமேஸ்வரம் மீனவர்கள் ஏமாற்றம்

ராமேஸ்வரம்: ராமேஸ்வரத்தில் கடல் கொந்தளிப்பு இன்றி இயல்பாக இருந்ததால் மீனவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். வங்க கடலில் உருவான

காற்றழுத்த தாழ்வு நிலையால், ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதி களில் கடந்த 3 நாள்களாக பலத்த காற் றுடன் சாரல் மழை பெய்தது. இதனால் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டது. நேற்றும் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்ததால் மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்ல மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. தொழில் முடங்கியதால் மீனவர்கள் வீடுகளுக்குள் முடங்கினர். ஆனால் ராமேஸ்வரம் தீவு பகுதி களில் நேற்று காலை முதல் மாலை வரை மழைக்கான அறிகுறியே தென்பட வில்லை. மாறாக வெயில் வெளுத்து வாங்கியது. கடல் கொந்தளிப்பு எதுவும் இன்றி இயல்பாக காணப்பட்டது. இதனால் மழையை எதிர்பார்த்து வீடுகளுக்குள் முடங்கிய மீனவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இதுகுறித்து ராமேஸ்வரம் மீனவர் ஒருவர் கூறியதாவது: கடலில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தால் இறால், நண்டு, கணவாய், காரல் மீன்கள் அதிகம் உற்பத்தியாகி, மீனவர் வலையில் சிக்கும். நவ., முதல் ஜன., வரை பருவ மழை சீசன் என்பதால் அதிகளவு மீன்கள் கிடைக்கும். நேற்று கடல் கொந்தளிப்பு இன்றி இயல்பாக இருந்தும் மீன்பிடி தொழில் முடங்கியது ஏமாற்றம் அளிக்கிறது, என்றார்.

### மாவட்டத்தில் மழையளவு

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யவில்லை. கடலோரத்தில் ஒருசில பகுதிகளில் மட்டும் சாரல் மழை பெய்தது. நேற்று காலை 8 மணி வரை மழையளவு (மி.மீ.,): கமுதி- 4, முதுகுளத்துார் 1, பாம்பன்-22.08, பரமக்குடி-4, ராமநாதபுரம் 6.02, திருவாடனை-15, தொண்டி-16.03, பள்ளமோர்குளம்-8, மண்டபம்-20.06, ராமேஸ்வரம்-40.02, தங்கச்சிமடம்-27.02, வட்டாணம்-15, தீர்த்தாண்டதானம்-17, ஆர்.எஸ்.மங்கலம்-10, கடலாடி-2, வாலிநோக்கம்-1.04, மொத்தம்-208.27.

### இயற்கை விவசாயத்தால் அதிக மகசூல் சக விவசாயிகளை துாண்டும் சாதனை விவசாயி

கீழக்கரை: திருப்புல்லாணி அருகே இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி விவசாயத்தில் சாதனை படைத்துவரும் விவசாயி, மற்றவர்களையும் இயற்கை விவசாயத்தை பின்பற்றுமாறு தூண்டிவருகிறார்.

கைக்கொள்வார்மடத்தை சேர்ந்தவர் விவசாயி நாகநாதன், 56. இவர் தனக்கு சொந்தமான 3 ஏக்கர் நிலத்தில் இயற்கை உரத்தை மட்டுமே பயன்படுத்தி நெல், கடலை, தென்னை சாகுபடி செய்து மகசூலில் சாதனை படைத்து வருகிறார். இயற்கை விவசாயத்தின் மகத்துவம் குறித்து சக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திவருகிறார். விவசாயி நாகநாதன் கூறியதாவது: ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால் மண் வளம் பாதிக்கிறது. இவற்றை பயன்படுத்தி விளைவிக்கப்படும் விளை பொருட்களை உண்பதால் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கிறது. இதை தவிர்க்கவே இயற்றை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்துவருகிறேன். மரங்களின் தழைகள், சாம்பல், மாட்டுச்சாணம், ஆட்டுச்சாணம், வேப்பம் புண்ணாக்கு, மண்புழு உரம் ஆகியவற்றுடன் நுண்ணுயிர் உரத்தையும் சீராக கலந்து பயிர்களுக்கு இடுகிறேன். இதன்மூலம் மண் வளம் மேம்படுகிறது. பூச்சி தாக்குதல் இன்றி பயிர்கள் நன்றாக வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கிறது. இயற்கை விவசாயத்தை பின்பற்றுமாறு சக விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன்," என்றார்.

## இஷ்டம் போல் உரம் இட்டால் நெற்பயிரை நோய் தாக்குமாம் விவசாயிகளே எச்சரிக்கை

பரமக்குடி: நிர்ணயித்த அளவை விட கூடுதல் உரம் இட்டால் நெற்பயிர்களை நோய் தாக்கும் என, வேளாண்மைத்துறை எச்சரித்துள்ளது. பரமக்குடி வேளாண் உதவி இயக்குநர் கண்ணையா கூறிதாவது: பரமக்குடி வட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும் பாலும் குறைந்த நாட்களில் முளைக்கும் ஆடுதுறை 36, 45, ஐ.ஆர்.36, அண்ணா-4, ரகங்கள் பயிரிடப் பட்டுள்ளன. நெல் பயிர்கள் தற்போது வளர்ச்சி பருவத்தில் உள்ளது. அதன்

தூர்கள் அதிகரித்தால் தான் மகசூல் அதிகம் கிடைக்கும். மண் பரிசோதனைபடி உரங்களை இடுவது அவசியம். ஒரு ஏக்கர் மானாவாரி நெற்பயிருக்கு முளைத்த 20 முதல் 25 நாட்களில் மேலுரமாக 22 கிலோ யூரியா, 8 கிலோ பொட்டாஷ் கலந்து இட வேண்டும். அதே அளவில் 40 முதல் 45 நாட்களில் 2 வது மேலுரம் இடவேண்டும். பகுதி மானாவாரி பயிருக்கு 33 கிலோ யூரியா, 12 கிலோ பொட்டாஷ் கலந்து இட வேண்டும். இதன்மூலம் பயிரில் நெல் மணிகள் அதிகம் கிடைக்கும். நிர்ணயித்த அளவைவிட கூடுதலாக உரம் இடுவதால், பூச்சி, நோய் தாக்குதல் அதிகரிப்பதுடன் மண் வளம் பாதிக்கப்படும், என்றார்.

**மண்ணின் ஈரத்தை உறிஞ்சும் கருவேல மரங்கள் : தானியம் பயிரிட்டு தரிசு நிலத்தை தங்கமாக்கலாம் : வேளாண்துறையினர் வேண்டுகோள்**

காரைக்குடி: தற்போது பெய்துள்ள மழையால் தேங்கியுள்ள நீர் பரப்புகளில்,பெரும்பாலும் கருவேல மரங்களே சூழ்ந்துள்ளது. இவற்றை அழித்து சிறு தானியங்களை பயிரிட முன் வர வேண்டும் என வேளாண்மை துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நெல், கரும்பு, தினை, சோளம், சாமை, உளுந்து, அவரை, துவரை என பல்வேறு தானிய மற்றும் பயிர்களை விவசாயம் செய்த நிலங்கள் கருவேல மரங்களின் வாழ்விடமாகி தரிசாக காட்சியளிக்கிறது. கடந்த சில ஆண்டுக்கு பிறகு தற்போது தமிழகத்தில் நல்ல மழை பெய்து வருகிறது. பூமியின் மேற்பரப்பு ஈரமாகி உள்ளது. நெல் விவசாயிகள் வழக்கமான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தரிசாக கிடக்கும் நிலங்களிலோ காட்டு கருவேல மரங்கள் வளர்ந்து, நீர்வளத்தை உறிஞ்சி கொண்டிருக்கிறது. தரிசாக கிடக்கும் நிலங்களில் சிறுதானியங்களை பயிரிட்டு, வருமானத்தை பெருக்கலாம்.

தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களை தவிர்த்து குறுகிய காலத்தில் மகசூல் தரும் சிறுதானிய பயிர்களான குதிரைவாலி, வரகு, பனிவரகு, தினை, சாமை போன்றவற்றை பயிரிடலாம். இவற்றில் தாது பொருட்கள், நார்ச்சத்து, வைட்டமின்கள் அதிக அளவில் உள்ளது. வேளாண்மை துறை அதிகாரி ஒருவர் கூறும்போது: குதிரைவாலி 95 நாட்களில் பலன் தரும். ஒரு ஏக்கில் 800 கிலோ மகசூல் கிடைக்கும். வரகு 100 நாட்களில் ஆயிரம் கிலோவும், பனிவரகு 70

நாளில் 700 கிலோவும், தினை 90 நாளில் 700 கிலோவும், சாமை 80 நாளில் 1,100 கிலோவும் மகசூல் தரக்கூடியது. இந்த வகை தானியங்கள் அனைத்து மண் வகையிலும் வளரக்கூடியது. மண்ணில் கரிமசத்து, மணிசத்து குறைவாக இருப்பதால், தொழுவுரம், தென்னை நார்கழிவு இட்டு உழுதல் வேண்டும். தேவையான நுண்ணூட்ட சத்துக்களை அடியுரமாக இடுதல் வேண்டும். விதைத்த 20 மற்றும் 40-வது நாளில் களை எடுக்க வேண்டும். சிறுதானிய பயிர்களில் குறைந்த நாள்களுக்குள் அறுவடை மேற்கொள்ளப்படுகிறது. இதனால், நோயின் தாக்கத்திலிருந்து தப்பித்து கொள்கிறது. நெல்லுக்கு ஆகும் செலவை விட இதில் செலவு மிக குறைவு. சிறுதானியங்களில் மதிப்பூட்ட பொருட்களை தயாரித்து சாப்பிடுவது நம் உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. எனவே, தரிசாக கிடக்கும் நிலங்களில், விவசாயிகள் இவற்றை பயிரிட்டு லாபம் பெறலாம், என்றார்.

## காற்றுடன் மழை

ராஜபாளையம்: ராஜபாளையத்தில் நேற்று மாலை 3 மணி முதல் 4 வரை லேசான மழை பெய்தது. மேக மூட்டத்துடன் காற்று வீசியதால் வெப்பம் குறைந்தது. கடந்த வனப்பகுதியில் மழை பெய்ததால் கோடைகால குடிநீர் தேக்கத்தில் 18 அடி நீர்மட்டம் உள்ளது. நகர் பகுதியில் போதுமான மழை இல்லாததால் கண்மாய்களில் தண்ணீர் வரத்து இல்லை. தொடர்மழை எதிர்பார்த்து விவசாயிகள் உள்ளனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## வெள்ள நிவாரணத்துக்கு ரூ.500 கோடி: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு




தமிழகத்தில் மழை-வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிவாரணம்-சீரமைப்புப் பணிகளை விரைந்து செயல்படுத்த அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட 6-க்கும் மேற்பட்ட சட்டப் பேரவைத் தொகுதிகள் அடங்கிய பகுதிகளை முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை பார்வையிட்டார். பிற்பகல் 1.10 மணிக்குத் தொடங்கி மாலை 4 மணி வரை அவர் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதன்பின், முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை:

பருவகாலம் முழுவதும் பெய்ய வேண்டிய மழை ஒரு சில நாள்களிலேயே கொட்டித் தீர்க்கும்போது எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டாலும் மழைநீர் தேங்குவது-சேதங்கள் ஏற்படுவது தவிர்க்க இயலாதது. இந்த இடங்களில் துரிதமாக மீட்பு-நிவாரணம் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிகள் தீவிரம்: கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி, பரங்கிப்பேட்டை, சிதம்பரம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டு, தாம்பரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, தாமரைப்பாக்கம், செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம், விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம், சென்னை ஆகிய இடங்களில் ஒரே நாளில் 23 செ.மீ. முதல் 37 செ.மீ. வரை மழை பெய்துள்ளது.

இவ்வாறு மிக அதிக மழை பெய்த காரணத்தால் ஏற்பட்ட சேதங்களைத்

தொடர்ந்து நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மூத்த அமைச்சர்கள்-உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் துரித நடவடிக்கைகள் காரணமாக, கடலூர் மாவட்டத்திலுள்ள 683 ஊராட்சிகளில் 671-இல் மின் விநியோகம் சரிசெய்யப்பட்டது. மின் விநியோகம் இல்லாத கிராமங்களில் ஜெனரேட்டர்கள் மூலம் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு குடிநீர் அளிக்கப்படுகிறது.

அனைத்து தேசிய-மாநில நெடுஞ்சாலைகள் சீரமைக்கப்பட்டு, போக்குவரத்து சீரான முறையில் நடைபெற்று வருகிறது. உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத் தொகையும், குடிசைகள் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

40 மருத்துவ முகாம்கள் மூலம் தொற்றுநோய்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 121 சிறப்பு கால்நடை முகாம்களில், கால்நடைகளுக்கு தடுப்பூசியும், குடற்புழு நீக்க மருந்துகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டோருக்கு அனைத்து உதவிகளும் உண்டு:

சென்னை மாநகரில் பாதிக்கப்பட்ட இடங்களை திங்கள்கிழமை நேரில் பார்வையிட்டேன். மக்களுக்கு ஆறுதல் தெரிவித்ததோடு, அரசு செய்து வரும் நிவாரணப் பணிகளை எடுத்துக் கூறியும் அனைத்து உதவிகளையும் எனது தலைமையிலான அரசு செய்து கொடுக்கும் என உறுதி அளித்துள்ளேன்.

வட கிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கெனவே அறிவித்தபடி நிவாரண உதவித் தொகை வழங்கவும், உடனடி சீரமைப்புப் பணிகளுக்கு என ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிவாரணம்-சீரமைப்புப் பணிகளை மேலும் விரைந்து செயல்படுத்த அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

**பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்தார்: எதிர்க்கட்சிகள் மீது குற்றச்சாட்டு**

சென்னை, நவ. 16: மழை-வெள்ள பாதிப்புகளை சில எதிர்க்கட்சிகள் அரசியலாக்க முயற்சி செய்வதாக முதல்வர் ஜெயலலிதா குற்றம்சாட்டினார்.

சென்னையில் பருவமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 6 பேரவைத் தொகுதிகளுக்கு உள்பட்ட பகுதிகளில், பிரசார வாகனத்தில் முன் இருக்கையில் முதல்வர் ஜெயலலிதா அமர்ந்தபடியே திங்கள்கிழமை பிற்பகல் நேரில் ஆய்வு செய்தார்.

ஆர்.கே. நகர் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை இளையமுதலித் தெருவில் தனது ஆய்வினை பிற்பகல் 2 மணிக்கு அவர் தொடங்கினார்.

நாகாத்தம்மன் கோயில் அருகே சாலையில் தேங்கியிருந்த நீரை வெளியேற்றும் பணிகளை அவர் பார்வையிட்டார். அப்போது, மாநகராட்சி ஆணையர் விக்ரம்கபூர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அங்கு முதல்வர் ஜெயலலிதா பேசியதாவது:

வட கிழக்குப் பருவமழை தொடங்கப் போகிறது என்பதை உணர்ந்து, முன்கூட்டியே அரசு நிர்வாகத்துக்கும், காவல் துறைக்கும் தேவையான உத்தரவுகளை பிறப்பித்திருந்தேன். அரசு அதிகாரிகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சிரத்தையுடன் மேற்கொண்டனர்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் வரக் கூடிய வடகிழக்குப் பருவமழை ஒரு சில நாள்களிலேயே கொட்டித் தீர்த்துவிட்டது. எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தாலும், சில இடங்களில் மழைநீர் தேங்குவதையும், அதனால் சேதங்கள் ஏற்படுவதையும் தவிர்க்க இயலாது.

எனினும், அரசு அதிகாரிகள் இரவு பகல் என்று பாராமல் போர்க்கால அடிப்படையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கே மழைநீரை வெளியேற்ற 48 உயர் ரக மோட்டார் பம்பு இயந்திரங்களும், 6 மிகப் பெரிய சூப்பர் சக்கர் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. காவல் துறையினரோடு, தீயணைப்புத் துறையினரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவைப்படுவோருக்கு சமைத்த உணவு வழங்கப்படுகிறது. எனவே, மக்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு ஆதரவாக, துணையாகவும் நான் இருக்கிறேன். விரைவில் இங்கே இயல்பு நிலை திரும்புவதற்குத் தேவையான

உதவிகளைச் செய்ய தமிழக அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்றார். இதைத் தொடர்ந்து, தண்டையார்பேட்டை சேனியம்மன்கோயில் தெரு, எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள வைத்தியநாதன் பாலம், கொருக்குப்பேட்டை இ.எச். சாலை, டிரைவர்ஸ் காலனி, கொடுங்கையூர் எழில்நகர், முத்தமிழ்நகர் (பெரம்பூர் தொகுதி) ஆகிய இடங்களில் பெருமளவில் கூடியிருந்த மக்களிடையே முதல்வர் ஜெயலலிதா பேசினார். அதன்பிறகு, கொளத்தூர் தொகுதிக்கு உள்பட்ட ரெட்டேரி சந்திப்பில் அவர் பேசியதாவது:

மழையால் ஏற்பட்ட சேதத்தை சிலர் அரசியல் ஆக்கப் பார்க்கிறார்கள். தேர்தல் நேரத்தில் எப்படியாவது வாக்குகளைக் கவர்ந்துவிட வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறான தகவல்களை சில எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பரப்பி வருகிறார்கள். ஆனால், இதெல்லாம் மக்கள் மத்தியில் எடுபடாது. மழையால் பாதிக்கப்பட்டோர் எந்தக் கவலையும் அடைய வேண்டாம். உங்களுக்கு ஆதரவாகவும், துணையாகவும் நானும், தமிழக அரசும் இருக்கிறோம் என்றார் ஜெயலலிதா.

ஆய்வின்போது, அமைச்சர்கள் பா.வளர்மதி, பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, எஸ்.கோகுல இந்திரா, கே.டி.ராஜேந்திர பாலாஜி, எம்.எஸ்.எம்.ஆனந்தன், தலைமைச் செயலாளர் கே.ஞானதேசிகன், அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், செய்தித் துறை செயலாளர் ராஜாராம், செய்தி} மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் குமரகுருபரன் உள்பட பலரும் உடனிருந்தனர்.

**மழை-வெள்ளம்: பலியான மேலும் 12 பேரின் குடும்பங்களுக்கு ரூ.4 லட்சம் நிவாரண நிதி**

மழை, வெள்ளத்தில் சிக்கி பலியான மேலும் 12 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரண நிதியை வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: கடலூர் மாவட்டத்தில் உள்ள கடவச்சேரியைச் சேர்ந்த ராமு, குமராட்சி கிராமத்தைச் சேர்ந்த பிச்சைமுத்து, கன்னடை கிராமத்தைச் சேர்ந்த காளையன், மதனகோபாலபுரம் கிராமத்தைச் சேர்ந்த சாமிக்கண்ணு, சி. எண் பாளையத்தைச்

சேர்ந்த காளையன், மளிகைமேடைச் சேர்ந்த ராமசாமி, குறிஞ்சிப்பாடி அம்பேத்கர் நகரைச் சேர்ந்த மணிமாறன், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள களமருதூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன், வேலூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கோனேரிகுப்பத்தைச் சேர்ந்த சதீஷ்குமார், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிள்ளியூரைச் சேர்ந்த தெரசம்மாள், சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த அருண் உள்ளிட்ட 12 பேர் மழை-வெள்ளம், சுவர் இடிந்தது, மின்சாரம் தாக்கியது போன்ற சம்பவங்களில் சிக்கி உயிரிழந்தனர். இவர்களது குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

**புவி வெப்பமயமாதல் - ஒரு தவறான கணிப்பு**

இந்த நூற்றாண்டில் மனித குலம் எதிர்கொள்ள வேண்டிய முக்கியப் பிரச்னைகளில் (பயங்கரவாதத்தை விட) ஒன்று புவி வெப்பமயமாதல். மனித நடவடிக்கைகளினால் பசுமை இல்ல (குறிப்பாக கார்பன்) வாயுக்களின் அளவு அதிகரித்து வருகிறது.

இந்த வாயுக்களின் பெருக்கத்தினால் புவி வெப்பமடைகிறதாகவும், கடல் மட்டம் உயர்ந்து வருவதாகவும் நிலத்தடி நீர்மட்டம் குறைதல், பருவமழை பொய்த்து போகுதல் போன்ற காலநிலை தொடர்பான இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுவதாகவும் கருதி வந்த அறிஞர்களுக்கு நாசா, தற்போது வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி வருகிறது.

புவியின் வெப்பநிலை உயர்வுக்கும், கடல்மட்ட உயர்விற்கும் கார்பன் ஒரு முக்கிய காரணி இல்லை எனவும், இவை அனைத்தும் இயற்கை நிகழ்வுகளே என பல ஆய்வுகள் கூறத் தொடங்கியுள்ளன. புவி வெப்பமயமாதலுக்கும் கார்பனுக்கும் தொடர்பு இல்லை என கூறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. புவி வெப்பமயமாதலுக்கு என்னென்ன மனித நடவடிக்கைகள் முக்கியக் காரணிகளாக உள்ளன என்பதைப் பார்ப்போம்:

= பசுமை இல்ல வாயுக்களின் பெருக்கம் (கார்பன் - டை - ஆக்ப்ஸைடு, மீத்தேன், ஓசோன், நைட்ரஸ்-ஆக்ஸைடு, குளோரோ-புளோரோ கார்பன்) - இது வெப்பத்தை அதிகரிக்கும் மனித விளைவு.

= வாகனங்கள், மற்றும் தொழிற்சாலை பெருக்கத்தினால் வெளியேறும் தூசுக்கள் (Dust) - இது வெப்பத்தைக் குறைக்கும் மனித விளைவு.

= நகர வெப்பத்தீவு (Urban Heat Island) விளைவு என்ற புதிய நடவடிக்கையால் அதாவது உயரமான கட்டடங்கள் கட்டுதல், காடுகள் அழிக்கப்படுதல், தார்ச் சாலைகள் போன்றவை உள்ளூர் வெப்பத்தை அதிகரிக்கின்றன.

= தேவையற்ற மரங்கள் வளருதல், அதாவது கருவேல மரங்கள், யூகலிப்டஸ், ஆகாயத் தாமரை போன்ற மரம், செடி, கொடிகளினால் நிலத்தடி நீர் பற்றாக்குறை- பருவமழை பொய்த்தல் போன்றவை ஏற்படுதல் - இதுவும் ஒரு புவி வெப்பமயமாதலுக்கு ஒரு காரணி ஆகும்.

= குளிர்சாதன கருவிகள் மூலம் வெளியேறும் வேதிப்பொருள்கள் வளிமண்டல மேல்மட்ட ஓசோனை குறைப்பதால், தரைமட்டத்தில் பல காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதுவும் ஒரு மனிதனின் தொழில் புரட்சியினால் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றமே.

= வாகனங்கள் மற்றும் தொழில்சாலை கழிவுகளினால் தரைமட்டத்தில் குறைவாக இருக்க வேண்டிய ஓசோன் வாயு அதிகரித்து வருகிறது. இதனால் கூட புவியின் வெப்பம் உயரும்.

= பெரிய அளவிலான விளைச்சல் நிலங்கள் வேறு பயன்பாட்டுக்கு (கார் தொழில்சாலை, வேறு பல தொழில்சாலை) பயன்படுத்துதல். - இதுகூட நிலத்தடி நீரையும், நீர்மட்டத்தையும் பருவமழையை பாதிக்கும் காரணியாக உள்ளது.

= காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்தல், செல் கோபுரங்கள் இவை கூட சிறிய மற்றும் உள்ளூர் அளவில் காலநிலை மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இதுபோன்ற பல மனித நடவடிக்கைகள் புவியின் வெப்பத்தை உயர்த்தும் நிலையில் கார்பன் அளவைக் கொண்டு புவியின் வெப்பத்தை கணிப்பது ஒரு தவறான அறிவியல் கருத்தாகும்.

= புவி வெப்பத்திற்கும் கார்பனுக்கும் உள்ள தொடர்பை அறிஞர்கள் மறுப்பதற்கு இரண்டாவது காரணம் : காலநிலை வரலாற்றில், 30 ஆண்டுகளுக்கு உயரும் வெப்பநிலை, அடுத்த 30 ஆண்டுகளில் குறைகிறது.

அதாவது, 1910-1940 வரையிலான காலக்கட்டத்தில் ஏறும் முகத்தில் இருந்த வெப்பநிலை 1940-70 வரையிலான காலக்கட்டத்தில் குறைந்து காணப்பட்டது. அதன்படி 1970-2000 மீண்டும் வெப்பம் உயர்ந்தது. மறுபடியும் 2000-2030 காலக்கட்டத்தில் வெப்பம் குறைந்து வருகிறது.

காலநிலை அறிஞர்கள் கூறும் கருத்து காலநிலை வரலாற்றின் புள்ளி விவரத்திற்கு எதிராக உள்ளது. அதாவது, வெப்பநிலை மாறிமாறி உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

= வாகனங்கள் மற்றும் தொழில்சாலைகள் வெளியிடும் பசுமை இல்ல வாயுக்களுக்கு சமமாக மிகவும் நுண்ணிய தூசுக்களும் (Aerosol) காற்றில் கலக்கின்றன. வாயுக்கள் வெப்பத்தை உயர்த்துகிறது என்றால், தூசுக்கள் வெப்பத்தைக் குறைக்கும். இந்த எதிரெதிர் விளைவுகள் அறிஞர்களுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது.

= நகரங்களில் மேற்கொள்ளப்படும் நகர வளர்ச்சி, அதாவது கட்டடங்கள், தார்ச்சாலைகள் போன்றவை ஓர் இடத்தின் வெப்பத்தை உயர்த்துகின்றன. இந்நிலையில் ஓர் இடத்தின் வெப்பநிலையைத் தீர்மானிப்பது அங்கு நிலவும் பசுமை இல்ல வாயுக்களின் அளவா? அல்லது நகர வெப்பத் தீவு விளைவா?

= பசுமை இல்ல வாயுக்களின் பெருக்கத்தினால் வெப்பநிலை உயர்ந்தால் கடல்நீர் ஆவியாதலும் அதிகமாகும். இந்த ஆவியாதலினால் மேகங்கள் அதிகளவில் தோன்றும். இதனால், சூரிய ஒளி புவிக்கு வருவது தடுக்கப்படும். இந்நிலையில் புவி வெப்பமயமாதலை குறித்தான அறிவியல் ஆய்வுகள் இன்னும் குழப்பத்தையே ஏற்படுத்தி வருகின்றன.

= முடிவாக, அறிஞர்கள் மறுக்கும் முக்கியக் கருத்து என்னவென்றால், கார்பன் வாயுக்களின் பெருக்கத்திற்கு ஏற்ப, புவி அகச்சிவப்பு கதிர்களின் அளவு பெருகுவது இல்லை. இந்நிலையில், புவி வெப்ப உயர்வை கார்பன் வாயுக்களின் அளவோடு தொடர்புபடுத்தும் அறிவியல் கருத்துகள் இன்னும் பொதுமக்கள் இடையே ஒரு குழப்பத்தையும், அச்சத்தையுமே ஏற்படுத்தி வருகின்றன.

அதாவது, குருடர்கள் யானையைத் தடவியது போன்றுதான் புவி வெப்பமயமாதலுக்கும் கார்பனுக்கும் இடையே உள்ள தொடர்பு

அமைந்துள்ளது.

**நீர் வரத்துக் கால்வாய்களை தூர்வார விவசாயிகள் கோரிக்கை**

புதுச்சேரியை ஒட்டி விழுப்புரம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடூர் அணையில் தற்போது 24.5 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணைக்கான நீர்வரத்துக் கால்வாய்களை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டு தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

வீடூர் அணை சங்கராபரணி ஆற்றின் குறுக்கே கடந்த

28.10.1959-ல் கட்டப்பட்டது. ரூ.89 லட்சம் செலவில் கட்டப்பட்ட இந்த அணை மூலம் 3200 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அணையின் மொத்த உயரம் 37 அடியாகும்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு அணை நிரம்பிய நிலையில் தற்போது பெய்து வரும் தொடர் மழையால் 24.5 அடி அளவுக்கு நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனிடையே அணை நிரம்பிவிட்டதாக தகவல் வெளியானதால் சங்கராபரணி ஆற்றின் கரையோர மக்கள் அச்சம் அடைந்தனர்.

கால்வாய்கள் ஆக்கிரமிப்பு: வீடூர் அணையின் நீர்வரத்துக் கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீட்டு முறையாக பராமரித்து தூர் வாரினாலே அணை நிரம்பி விடும். விவசாயமும் செழிப்பாக இருக்கும். தற்போது 700 ஏரிகளில் 300 ஏரிகள் மட்டுமே நிரம்பி உள்ளது என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் தகவல்: வீடூர் அணை தற்போது நிரம்ப சாத்தியமில்லை. மொத்த கொள்ளளவான 603.9 கன அடியில் தற்போது 183.9 கன அடி மட்டுமே நிரம்பியுள்ளது. வீடூர் அணையால் புதுச்சேரிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. அணையை திறப்பதற்கு முன்பாக முன்கூட்டியே நம்மிடம் தெரிவிப்பார்கள். போலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இவ்விஷயத்தில் கூடுதலாக

தகவல்களை தெரிவித்திருக்கலாம். அதேபோல் தவறான தகவல்களை யாரும் பரப்பவேண்டாம் என ஆட்சியர் மணிகண்டன் தெரிவித்தார்.

**மழையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம்**

விழுப்புரம் மாவட்டத்தில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் விரைவில் நிவாரணம் வழங்கப்படும் என்று வெள்ள நிவாரண சிறப்பு கண்காணிப்பு அதிகாரி உதயசந்திரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில், மழை வெள்ளப் பாதிப்புகள் குறித்து அதிகாரிகளுக்கான ஆய்வுக் கூட்டம் திங்கள்கிழமை இரவு நடைபெற்றது.

விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, ஆட்சியர் எம்.லட்சுமி தலைமை வகித்தார். ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன், எம்.பி-கள் ஆர்.லட்சுமணன், எஸ்.ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு வெள்ள நிவாரண கண்காணிப்பு அதிகாரி உதயசந்திரன் பங்கேற்று, மழை வெள்ளப் பாதிப்பு மீட்பு, நிவாரணப் பணிகள் விரைந்து மேற்கொள்வது குறித்து ஆலோசனை வழங்கினார்.

கூட்டத்தில், முன்னதாக மழையின்போது சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்த ராமலிங்கம் என்பவரது குடும்பத்தினருக்கு, அரசின் நிவாரண உதவியாக அவரது மனைவி கோகிலாவிடம் ரூ.4 லட்சம் வழங்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பிருந்தாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட இயக்குநர் கோ.ராதா மற்றும் அனைத்துத் துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் உதயசந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: விழுப்புரம் மாவட்டத்தில், மழையால் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் 4 பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 2,365 வீடுகள் சேதமடைந்துள்ளன. 72 கால்நடைகள் இறந்துள்ளன.

இதுவரை மழை பாதிப்பிற்கு ரூ.94 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவற்றிற்கும் 2 நாளில் நிவாரணம் வழங்கப்படும்.

விவசாய பயிர் சேதங்கள் குறித்து கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. பணிகள் முடிந்தவுடன் நிவாரண உதவிகள் வழங்கப்படும்.

மாவட்டத்தில் 60 சதவீதம் ஏரிகள் நிரம்பியுள்ளன. சேதமடைந்த பாலங்கள், சாலைகள் சரி செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மின்சாரம் பாதித்த கிராமங்களில் மின்இணைப்பு வழங்கவும், பேருந்து வசதி, பள்ளிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் சீரமைத்து நடவடிக்கை எடுக்க, அந்தந்த துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மரக்காணத்தில் உப்பளம் பாதிப்பு, மீனவ கிராமங்கள் பாதிப்பு குறித்து, கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. கணக்கெடுப்புகள் முடிந்தவுடன் அனைத்துத் தரப்பினருக்கும் 2 நாளில் நிவாரணம் வழங்கப்படும் என்றார் அவர்.

### தொடர் மழை: பல்லடம் பகுதியில் கொப்பரை உற்பத்தி பாதிப்பு

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை பகுதியில் தொடர் மழையால் 5 ஆயிரம் டன் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் தென்னை விவசாயம் பிரதானமாக உள்ளது. இப்பகுதியில் 20 லட்சத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இங்கு விளைவிக்கப்படும் தேங்காய், இளநீர் உள்ளிட்டவை சென்னை, திண்டுக்கல், மதுரை, கோவை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. மீதமுள்ளவை இங்குள்ள 200-க்கும் மேற்பட்ட விவசாய களங்களுக்கு அனுப்பப்பட்டு கொப்பரையாக உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில், கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக பெய்து வரும் தொடர் மழையால் கொப்பரை களங்கள் ஈரமாகவும் மழைநீர் தேங்கியும் உள்ளன. வானம் மேகமூட்டமாக சூரிய வெளிச்சம் இல்லாமல் இருப்பதால் கொப்பரைகளை காய வைப்பதற்கான சீதோஷ்ண நிலையின்றி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கொப்பரை தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை செய்து வந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டுள்ளது. மழை குறைந்து இயல்பு நிலை திரும்பிய பிறகே கொப்பரை உற்பத்தி மீண்டும் துவங்கும் என்று தென்னை விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஒரு ஏக்கரில் 90 டன் கரும்பு மகசூல்: மொடக்குறிச்சி விவசாயி சாதனை**

செம்மை சாகுபடி முறையில் ஒரு ஏக்கரில் 90 டன் கரும்பு மகசூல் செய்து மொடக்குறிச்சி விவசாயி சாதனை படைத்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அருகே ஈஞ்சம்பள்ளி வாத்தியார் காட்டுவலசு பகுதியைச் சேர்ந்த விவசாயி ரங்கசாமி. தனது நிலத்தில் விளையும் கரும்பை ஒப்பந்த அடிப்படையில் எழுமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலைக்கு அரவைக்காக விவசாயி ரங்கசாமி அனுப்பி வருகிறார்.

சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் 40 முதல் 45 டன் கரும்பு மட்டுமே விளையும். இந்த ஆண்டு ரங்கசாமி ஒரு ஏக்கரில் 90.20 டன் மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து, விவசாயி ரங்கசாமி கூறியதாவது:

15 ஆண்டுக்கும் மேலாக கரும்பு சாகுபடியில் ஈடுபட்டு வருகிறேன். 2005-ஆம் ஆண்டு சொட்டுநீர் பாசனம் அமைக்க சக்தி சர்க்கரை ஆலை சார்பில் ரூ. 5 ஆயிரம் மானியம் அளிக்கப்பட்டது. அதை கொண்டு எனக்குச் சொந்தமான 1.20 ஏக்கர் நிலத்தில் செம்மை கரும்பு சாகுபடி செய்தேன். கடந்த ஆண்டு வறட்சி காரணமாக ஒரு ஏக்கருக்கு 70 டன் மட்டுமே மகசூல் கிடைத்தது.

இந்நிலையில், இந்த ஆண்டு எனது 1.20 ஏக்கர் நிலத்தில் 353 ரகம் செம்மை கரும்பு சாகுபடி செய்தேன். சொட்டுநீர் பாசனம் மூலமாக உரம் போன்றவற்றை செலுத்தினேன். கரும்பு தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்களை மொடக்குறிச்சி சர்க்கரை ஆலை அலுவலர்கள் அவ்வப்போது நேரில் வந்து தெரிவித்தனர். இதன் காரணமாக, இந்த ஆண்டு ஓரு ஏக்கரில் 90.20 டன் கரும்பு விளைந்தது.

பொதுவாக கரும்பு சோகையை உரித்தால் மட்டும் 10 டன் ஏக்கருக்கு கூடுதலாக கிடைக்க வாய்ப்புள்ளது என்பதை எனது அனுபவத்தின் மூலமாகக் கற்று கொண்டேன்.

மேலும், இதுதொடர்பான தகவல்களைப் பெற விரும்பும் விவசாயிகள் 97152-16281 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் பெற்று சாதனை புரிந்த விவசாயி ரங்கசாமிக்கு, கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு, ஈரோடு மாவட்ட உழவர் விவாதக்குழு, கரும்பு வளர்ப்போர் சங்கம் சார்பில் பாராட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, கூட்டமைப்பின் தலைவர் காசியண்ண கவுண்டர் தலைமை வகித்தார். சக்தி சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் சங்கச் செயலாளர் சென்னியப்பன்,

கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு துணைத் தலைவர் ராமசாமி, செயலாளர் வடிவேல், பொருளாளர் ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட உழவர் விவாதக் குழு செயலாளர் வெங்கடாசலபதி உள்பட பலர் கலந்துகொண்டு விவசாயி ரங்கசாமிக்கு பாராட்டு தெரிவித்தனர்.

## பவானிசாகர் அணையில் தொடர்ந்து 16-ஆவது நாளாக நீர்திறப்பு நிறுத்தம்

பவானிசாகர் அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறக்கப்படுவது 16-ஆவது நாளாக நிறுத்தப்பட்டுள்ளதால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்ததால் பவானிசாகர் அணையில் இருந்து ஆற்றின் வழியாகவும், கீழ்பவானி வாய்க்காலிலும் தண்ணீர் திறப்பதை பொதுப் பணித் துறையினர் நிறுத்தி வைத்தனர். இதன் காரணமாக, அணைக்கு வரும் நீர்வரத்து முழுவதுமாக பவானிசாகர் அணையில் சேமிக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது.

திங்கள்கிழமை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 69.72 அடியாக இருந்ததது. நவம்பர் 1-ஆம் தேதி முதல் அணையில் இருந்து ஆற்றின் வழியாகவும், கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்கும் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து, 16 நாளாக பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது

நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்து வரும் மழையால் பாசனத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

அதேபோல, பரவலான மழை காரணமாக ஏரி, குளம் போன்றவை நிரம்பி வழிவதுடன் மாவட்டம் முழுவதும் கணிசமான அளவில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மீனவ சமுதாய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கல்**

பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மீனவ சமுதாய மாணவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் உதவித்தொகையை திங்கள்கிழமை வழங்கினார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைகேட்பு நாள் கூட்டம் ஆட்சியர் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 201 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன.

இந்த மனுக்களை பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். இக்கூட்டத்தில், ஆட்சியரின் விருப்ப கொடை நிதியில் இருந்து மருத்துவ செலவிற்காக ஒரு பயனாளிக்கு ரூ. 10 ஆயிரத்துக்கான காசோலை வழங்கினார்.

மேலும், 2014-2015 ஆம் கல்வி ஆண்டில் மாநில, மாவட்ட அளவில் 10, 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மீனவ சமுதாய மாணவ, மாணவிகளுக்கு, தமிழ்நாடு அரசு மீன் துறை மூலமாக 12-ஆம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவனுக்கு ரூ. 10 ஆயிரத்துக்கான காசோலையும், மாவட்ட அளவில் முதலிடம் பிடித்த 2 மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ. 6 ஆயிரம் வீதம் ரூ. 12 ஆயிரத்துக்கான காசோலைகளும் வழங்கினார்.

அதேபோல, 10-ஆம் வகுப்பு தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த 7 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 7 ஆயிரத்து 800-க்கான காசோலைகளை ஆட்சியர் பிரபாகர் வழங்கினார்.

### சென்னையில் 82% மழை அதிகம்

வட கிழக்குப் பருவ மழைக் காலத்தின் போது, சென்னையில் தற்போது வழக்கத்தை விடக் கூடுதலாக 82 சதவீத அளவுக்கு மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வட கிழக்குப் பருவ மழை அக்டோபர் 28-இல் தொடங்கியது. பருவ மழை தொடங்கியது முதல் தமிழகம், புதுச்சேரியில் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் பலத்த மழை கொட்டியது.

இதனால், அதிகபட்சமாக கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் 480 மி.மீ., மழையும், காஞ்சிபுரத்தில் 340 மி.மீ. மழையும் பதிவானது.

அதைத் தொடர்ந்து, தென் மேற்கு வங்கக் கடல், அதை ஒட்டிய இலங்கையில் நிலை கொண்டிருந்தத் தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால், வட மாவட்டங்களில் பலத்த, மிகப் பலத்த மழை பெய்தது.

தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால், கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் பலத்த மழை பதிவானது.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில், அதிகபட்சமாக 370 மி.மீட்டர் மழை பெய்தது.

சென்னையில் 82 சதவீதம் கூடுதல்: தமிழகத்தில் அக்டோபர் 1 முதல் 16-ஆம் தேதி வரையில் சராசரியாக 382.7 மி.மீட்டர் அளவுக்கு மழை பெய்தது. இது, வழக்கமான சராசரியைவிட 57.3 மி.மீ. குறைவாகும்.

வட கிழக்குப் பருவமழை காலத்தில், சென்னை மாவட்டத்தில் வழக்கத்தை விட 82 சதவீதம் கூடுதலாக மழை பதிவாகியுள்ளது. அதாவது, 16 நாள்களில் (அக் 1-16) சென்னை மாவட்டத்தில் 910 மி.மீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது.

அதேபோல் புதுச்சேரியில் வழக்கத்தை விட கூடுதலாக 1 சதவீதம் பெற்று, 520 மி.மீட்டர் அளவுக்கு மழை பதிவானதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

### தாம்பரம், மாமல்லபுரத்தில் அதிக மழைப் பதிவு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக தாம்பரம், மாமல்லபுரத்தில் 329 மி.மீ. மழையளவு பதிவாகியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பதிவான மழையளவு விவரம் (மி.மீட்டரில்):

உத்திரமேரூர்- 210, செங்கல்பட்டு- 318.10, காஞ்சிபுரம்- 271.20, ஸ்ரீபெரும்புதூர்- 229.20, தாம்பரம்- 329, மதுராந்தகம்- 211, செய்யூர்- 111.50, திருக்கழுக்குன்றம்- 269, மாமல்லபுரம்- 329.

### தொடர் மழை: 25 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் மூழ்கின



காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடர் மழை, ஏரி உடைப்புகள் காரணமாக, 25,000 ஏக்கர் பரப்பில் உள்ள நெல் பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்தன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நெட்டேரி, செவிலிமேடு சிறிய ஏரி, வெள்ளகுளம் ஏரி, நத்தப்பேட்டை ஏரி, குண்டுகுளம் ஏரி, புத்தேரி, கோலிவாக்கம் ஏரி, வேடல் ஏரி, ஊத்துக்காடு ஏரி, அவளூர் ஏரி ஆகிய ஏரிகள் உடைந்துள்ளன.

பெரும்பாலான ஏரிகள் நிரம்பி வழிவதாலும், தொடர்ந்து நீர் வரத்து அதிகரிப்பதாலும், பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல் பயிரிட்ட விவசாயிகள்

கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 25,000 ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. விரைவில் மழை ஓய்ந்தால் மட்டுமே மற்ற இடங்களில் உள்ள நெல்பயிர்கள் தப்பும். தொடர் மழை பெய்தால் சேதம் அதிகரிக்கும் என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் சீதாராமனிடம் கேட்டபோது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 18,000 ஏக்கர் அளவுக்கு நெல்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. இப்போது வெள்ளச் சேதத்தை உடனடியாக துல்லியமாகக் கணக்கிட முடியாது என்றார். பாலாற்றில் வெள்ளப்பெருக்கு

காஞ்சிபுரம் அருகே பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, வேலூர் புறவழிச்சாலையில் உள்ள தடுப்புகள் உடைந்தன.

காஞ்சிபுரம், பாலாற்றில் வேலூர் செல்வதற்கான புறவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

ஆற்றில் நீர் செல்லும்போது பாதுகாப்புக் கருதி இந்த சாலையின் ஓரங்களில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 23 ஆண்டுகளுக்குப் பிறகு பாலாற்றில் தற்போது வெள்ளம் வந்துள்ளது. நீரின் வேகத்தால் இந்தத் தடுப்புகள் பல இடங்களில் உடைந்துள்ளன. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆற்றில் நீர் பாய்ந்து செல்வதை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்க்கின்றனர்.

பாலாற்றின் குறுக்கே செல்லும் புறவழிச்சாலை வழியாக வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. வாகனங்கள் இந்தச் சாலையில் செல்லாதவாறு போலீஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

உடையும் நிலையில் செவிலிமேடு ஏரி

காஞ்சிபுரம் அருகிலுள்ள செவிலிமேடு ஏரி உடையும் நிலையில் உள்ளது.

காஞ்சிபுரம் அருகே உள்ளது செவிலிமேடு ஏரி. இந்த ஏரியின் மதகு திருப்பருத்திக்குன்றம் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஏரியில் செவிலிமேடு அருகே உள்ள கரைப் பகுதி பலவீன நிலையில் உள்ளது. எனவே இப் பகுதியில் மண் கொட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கரையின் மீது வாகனங்கள் செல்வதும், மக்கள் கரைக்கு அருகே செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளன. ஏரியைச் சுற்றிலும் காவல் துறையினர்

பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

தொடர் மழை பெய்தால் இந்த ஏரி உடையும் அபாயம் இருப்பதால், கரை பலவீனமாக உள்ள பகுதிகளில் மணல் மூட்டைகள் அடுக்கி, பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துமாறு சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்தக் கரையில் உடைப்பு ஏற்பட்டால், செவிலிமேடு, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, ஆட்சியர் அலுவலகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் புகுந்துவிடும் என்று அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவளூர் ஏரியில் உடைப்பு: காஞ்சிபுரம் அருகே அவளூர் கிராமத்தில் உள்ள ஏரி பலத்த மழை காரணமாக செவ்வாய்க்கிழமை காலை உடைந்தது. இந்த ஏரி 250 ஏக்கர் பரப்பளவும், 20 ஆடி ஆழமும் கொண்டது. இந்த ஏரிமூலம் அவளூர், கன்னடியன் குடிசை, கணபதிபுரம், நெய்குப்பம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இந்த ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகம் இருந்ததால், நடு மதகில் விரிசல் ஏற்பட்டு உடைந்தது. இந்த ஏரியைச் சுற்றியுள்ள ஆயிரம் ஏக்கர் விவசாயப் பயிர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

கணபதிபுரம், கன்னடியன் குடிசை, கிருஷ்ணாபுரம், நெய்குப்பம், அங்கம்பாக்கம், அவளூர் ஆகிய கிராமங்களில் ஏரி நீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்தது. தவிர, காஞ்சிபுரம்- இளையனார் வேலூர் பகுதியில் உள்ள சாலை துண்டிக்கப்பட்டது.

**பிச்சாட்டூர் அணை திறப்பு: வெள்ள அபாய எச்சரிக்கை**

தொடர் மழை காரணமாக ஆந்திர மாநிலத்தில் உள்ள பிச்சாட்டூர் அணை திங்கள்கிழமை திறக்கப்பட்டது.

இதையடுத்து ஊத்துக்கோட்டை, பெரியபாளையம், ஆரணி, புதுவாயல், ஏலியம்பேடு, குன்னமஞ்சேரி, பொன்னேரி உள்ளிட்ட பகுதிகளில் ஆரணி ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆரணி ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதியான பொன்னேரி, ஆரணி, புதுவாயல், ஏலியம்பேடு, வைரங்குப்பம், ஊத்துக்கோட்டை உள்ளிட்ட

பகுதிகளில் கடந்த 10 நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் ஆரணி ஆற்றில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பிச்சாட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் உள்ள கர்னேத் நகர் பகுதியில் தொடங்கி பழவேற்காட்டில் உள்ள உவர்ப்பு நீர் ஏரியில் ஆரணி ஆறு கலக்கிறது. ஆரணி ஆறு 65 கி.மீட்டர் தொலைவுக்கு ஆந்திரத்திலும், 65 கி.மீ. தொலைவுக்கு தமிழகத்திலும் செல்கிறது.

பிச்சாட்டூர் அணை திறக்கப்பட்டதன் காரணமாக ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் பொன்னேரி-பழவேற்காடு சாலையில் சின்னக்காவனம் பகுதியில், ஆரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேம்பாலம், லட்சுமிபுரம் அணைக்கட்டு ஆகிய பகுதிகளில் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தினகரன்

**பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகரிப்பு செவ்வாழை ரூ.1000வரை விலை போனது**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நேற்று வாழைத்தார் வரத்து அதிகமாக இருந்தது. இருப்பினும், செவ்வாழைத்தார் ரூ.1000வரை விலை போனதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் மற்றும் தேர்நிலை மார்க்கெட்டுகளில் வாரத்தில் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெறுகிறது. இங்கு சுற்றுவட்டார

கிராமங்களில் இருந்து செவ்வாழை, கர்பூரவள்ளி, ரஸ்தாளி, பூவந்தார், நேந்திரன் உள்ளிட்ட வாழைத்தார்கள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டு, தரத்திற்கேற்றார் போல் ஏலம் விடப்படுகிறது. இதில் கடந்த சில வாரங்களாக மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து சற்று குறைவாக காணப்பட்டது. சுற்று வட்டார கிராமங்களில் சமீபத்தில் பெய்த மழையால் வாழைத்தார் அறுவடை குறைந்த போதும் சந்தைக்கு 400 முதல் 600வாழைத்தார்கள் வந்தன. இந்நிலையில் நேற்று சந்தைக்கு வாழைத்தார் வரத்து வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் வந்தன. வரத்து அதிகரித்த ோபோதும் கார்த்திகை மாதம் துவங்குவதால் அவை கூடுதல் விலைக்கு போனது. கடந்த மாதம் ஒரு செவ்வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.750வரை விலைபோனது. ஆனால் நேற்று காந்தி மார்க்கெட்டில் நடந்த ஏலத்தின்போது, அதிகபட்சமாக செவ்வாழை தார் ஒன்று ரூ.600 முதல் ரூ.1000ம் வரை ஏலம் போனது. கர்ப்பூரவள்ளி ரூ.300 முதல் ரூ.450க்கும், பூவந்தார் ரூ.250 முதல் ரூ.475க்கும், கேரள ரஸ்தாளி ரூ.300 முதல் ரூ.450க்கும், மோரீஸ் ரூ.325க்கும், நேந்திரன் ஒருகிலோ ரூ.20க்கும் ஏலம் போனது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**திருந்திய நெல்சாகுபடி விவசாயிகளுக்கு அறிவுரை**

உடுமலை,: திருப்பூர் மாவட்டம் மடத்துகுளம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இங்கு நெல்,கரும்பு,மக்காச்சோளம் தென்னை,காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக நெல் அறுவடை முடிந்துள்ள நிலையில் இரண்டாம் போக சாகுபடிக்கான வாய்ப்பினை விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர். தற்போது பரவலாக பெய்து வரும் மழையினை பயன்படுத்தி நெல் நாற்று விடும் பணி மற்றும் நடவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரும் திருந்திய நெல் சாகுபடி மற்று இயந்தி நெல் நடவு குறித்த தொழில்நுட்பங்கள் வேளாண்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இயந்திர நெல் நடவின் மூலம் ஒரு மணிநேரத்தில் ஒரு ஏக்கர் நடவு மேற்கொள்ள இயலும். ஒரு ஏக்கருக்கு 15 கிலோ விதைகள் தேவைப்படும. பாய் நாற்றங்கால் அமைப்பதால் ஒரு

ஏக்கருக்கு ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானது. மேலும் 15 நாள் நாற்றினை சீரான இடைவெளியில் நடுவதால் அதிக தூர் கிளைத்து வளர்கின்றன. சீரான இடைவெளியில் காற்றோட்ட வசதியுடன் இருப்பதால் பூச்சி தாக்குதல் குறிப்பாக நெற்பயிரை அதிகளவில் தாக்கும் குலைநோய்,புகையான் உள்ளிட்ட நோய்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகிறது. தற்போது மடத்துகுளம் வட்டாரத்தில் சாமராயப்பட்டி கிராமத்தில் இயந்திர நெல் நடவு நடைபெற்று வருகிறது. இது இயந்திர நடவு மேற்கொள்ள ஒரு எக்டருக்கு ரூ.3 ஆயிரம் வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. எனவே இயந்திர நெல் நடவு மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அல்லது சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களையோ தொடர்பு கொள்ளும்மாறு வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள் மடத்துகுளம் 97904-57111, குமரலிங்கம் 98422-86109, துங்காவி 94882-53054,கணியூர் 75027-28566.

**சின்ன வெங்காயம், தக்காளி விலை உயர்ந்தது**

கோவை, : சின்னவெங்காயம், நாட்டு தக்காளி உள்பட அனைத்து காய்கறிகளின் வரத்தும் மழையால் குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சின்ன வெங்காயம் கிலோ ரூ.65 முதல் ரூ.75 வரையும், நாட்டு தக்காளி கிலோ ரூ.55க்கும், இதர காய்கறிகளின் விலை ஒரு மடங்கும் அதிகரித்தும் விற்கப்படுகிறது. கோவை மேட்டுப்பாளையம் ரோட்டிலுள்ள எம்ஜிஆர் மொத்த மார்க்கெட்டில் இருந்து அனைத்து வகை காய்கறிகளும் மாவட்டம் முழுவதும் மற்றும் கேரளாவிற்கும் விற்பனையாகிறது. இங்கு வரக்கூடிய சின்ன வெங்காயம் உடுமலை, ஆலாந்துறை, துடியலூர் ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி 150 டன் விற்பனைக்கு வருவது வழக்கம். 10 நாட்களுக்கு மேலாக பெய்து வரும் மழையால் இப்பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை நடக்கவில்லை. இருப்பிலுள்ள சின்ன வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. இதனால், வரத்து குறைந்து கடந்த சில நாட்களாக தினசரி 25 டன் மட்டுமே வருகிறது. வரத்து குறைவால் வியாபாரிகள் போட்டி போட்டி வாங்குவதால் விலை உயர்ந்துள்ளது. நேற்று ஒரு கிலோ சின்ன வெங்காயம் கிலோ ரூ.50 முதல் ரூ.60க்கு விற்பனையானது.

சில்லரை விற்பனை நிலையங்களில் கிலோ ரூ.65 முதல் ரூ.75 வரை விற்பனையாகிறது.

அதே போல் இங்கு வரக்கூடிய நாட்டு தக்காளி கர்நாடகாவிலுள்ள நாகமங்கலம், ஓசூர், மதுக்கரை நாச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி 300 டன் நாட்டு வருவது வழக்கம். மழையின் காரணமாக தக்காளி பூக்கள் உதிர்ந்து மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கு வரத்து தினசரி 60 டன் மட்டுமே நிலவுகிறது. மொத்த விற்பனை விலை கிலோ ரூ.40ஆக உள்ளது. சில்லரை விற்பனை நிலையங்களில் ரூ.55க்கு விற்கப்படுகிறது. இதே போல் இங்கு அனைத்து காய்கறிகளின் வரத்தும் 3 மடங்கு குறைந்துள்ளதால், விலை ஒரு மடங்கு உயர்ந்துள்ளது. சில்லரை விற்பனை நிலையங்களில் கிலோ ரூ.20க்கு விற்ற காய்கறிகள் ரூ.40க்கு விற்கப்படுகிறது. விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**ஏற்றுமதி, மழையால் சேதம்: அரிசி விலையும் அதிகரிக்கும் அபாயம்**




சேலம்: நடப்பு ஆண்டில் பருவமழையின் தாக்கம், ஏற்றுமதிக்கு வாய்ப்புகளால் அரிசி விலையும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. நாடு முழுவதும் நடப்பு ஆண்டில் 103 மில்லியன் டன் அரிசி உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டது. அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா தொடர்ந்து முக்கிய பங்கு

வகிக்கிறது. நடப்பு ஆண்டில் இந்தியாவில் இருந்து 12 மில்லியன் டன் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. வடகிழக்கு பருவமழையால் பயன்பெறும் தமிழகத்திலும் பாசன பகுதிகள் தண்ணீரில் மூழ்கி சேதம் ஏற்படும் நிலை உள்ளது. நெல் சாகுபடி செய்யப்பட்ட விளைநிலங்களில் மழைநீர் புகுந்து பல்லாயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகும் அபாயத்தில் உள்ளன. தமிழகத்திற்கு அடுத்தபடியாக நெல் அதிகமாக சாகுபடி செய்யப்படும் ஆந்திராவில் இன்னும் பருவமழை தீவிரமடையவில்லை. அங்கும் மழை பாதிப்பு ஏற்பட்டால் அரிசி உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. இதனால் அடுத்தாண்டு அரிசி உற்பத்தி குறைந்து, விலை ஏறும் வாய்ப்பு உருவாகியுள்ளது. பருப்பு, வெங்காயம் விலை உயர்வை போல் அடுத்த சில மாதங்களில் அரிசி விலையும் உயரும் அபாயம் உள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் தஞ்சாவூர், விக்கிரவாண்டி, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளைபொன்னி, டீலக்ஸ் பொன்னி, பிபிடி பொன்னி, இட்லி அரிசி கிராந்தி, குண்டு கார், கிட்டாகார் உள்ளிட்ட நெல் ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இதே போல் ஆந்திரா மாநிலம் நெல்லூர், குண்டூர், விஜயவாடாவில் பொங்கல் பச்சரிசியும், கர்நாடகா மாநிலத்தில் கர்நாடகா பிபிடி, டீலக்ஸ் உள்ளிட்ட பொன்னி ரக அரிசி அதிகளவு விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். ஆனால் வடகிழக்கு பருவமழை ஆரம்பத்திலேயே கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதால் அரிசி விலை உயர்வு தவிர்க்க முடியாததாகி விடும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். சேலம் செவ்வாய்பேட்டை மொத்த அரிசி வியாபாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள நெல் அரவை ஆலைகளில் மழை ஈரத்தால் பெரிய பாதிப்பு இல்லை. டிரையர்வசதியுடன் நவீனமயமாக்கப்பட்ட சுமார் 4 ஆயிரம் மில்களில் அரவைப் பணிகள் வழக்கம் போல் நடந்து வருகிறது.

தமிழகத்தில் பெய்து வரும் மழையால் டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி சேதம் அடைய வாய்ப்புள்ளது. சம்பா பயிர் அறுவடை அடுத்த 40 நாட்களில் தொடங்கவேண்டும். மழை காரணமாக நெற்பயிர் ◌ேசதம் அடையும் பட்சத்தில் நெல் உற்பத்தி பாதிக்கும். இதனால் வரும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நெல் விலை உயரும் அபாயம் உள்ளது. அதேபோல் இந்தியாவில் இருந்து வளைகுடா நாடுகள் மற்றும் சீனாவுக்கும் அரிசி ஏற்றுமதி சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இதனால் விலை உயரும் வாய்ப்புகள் அதிகம். இவ்வாறு அரிசி வியாபாரிகள் கூறினர். சேலம் மார்க்கெட்டில் 100 கிலோ எடைக்கொண்ட பொன்னி அரிசி 4,600 முதல் 5 ஆயிரம் எனவும், ராஜபோகம் 4,400 முதல் 4,800 எனவும், பிபிடி பொன்னி அரிசி 4 ஆயிரம் முதல் 4200 எனவும், டீலக்ஸ் பொன்னி 3 ஆயிரம் முதல் 3,200 எனவும், கர்நாடகா ஸ்டீம் 3 ஆயிரம் முதல் 3,200 எனவும், கிராந்தி கார் இட்லி அரிசி 3200 முதல் 3600 எனவும், குண்டு கார் 3 ஆயிரம் என விற்கப்படுகிறது.

**சென்னையில் கன மழை எதிரொலி: காய்கறிகள் விலை கிடுகிடு உயர்வு**



சென்னை: சென்னையில் கன மழை எதிரொலியாக காய்கறிகள் விலை கிடுகிடு என உயர்ந்துள்ளது. சென்னையில் தக்காளி கிலோ ரூ. 100-க்கும், வெங்காயம் கிலோ ரூ. 70-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வரத்து குறைவால் மற்ற காய்கறிகளின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளன.

பால் விநியோகம் பாதிப்பு

சென்னையில் பெய்த பலத்த மழையால் சோழிங்கநல்லூர், மாதவரம், கொரட்டூர் பால் பண்ணைகளில் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆவின் பால் குறைந்த அளவிலேயே விநியோகம் செய்யப்படுவதாக தகவல் தெரிவித்துள்ளார். தனியார் பாலும் குறைந்த அளவிலேயே விநியோகம் செய்யப்படுவதாக மக்கள் தவித்து வருகின்றனர்.

**சென்னையை பயமுறுத்திய புயல் சின்னம் ஆந்திராவுக்கு நகர்ந்தது; மழை ஆபத்து நீங்கியது**



சென்னை : தென் மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியதுடன் ஆந்திரா நோக்கி நகர்ந்து செல்கிறது. இதனால் வட தமிழகத்தில் 4 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும். தென் மாவட்டங்களில் சில இடங்களில் மட்டும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு வங்கக் கடலில் தமிழகத்தை ஒட்டிய கடலோரத்தில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வட மேற்கு திசை நோக்கி அந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நகர்வதால் நேற்றும் தமிழகத்தில் மழை பெய்தது.

அதிகபட்சமாக பொன்னேரியில் 370 மிமீ மழை பெய்துள்ளது. மாமல்லபுரம் 330 மிமீ, செங்கல்பட்டு 320 மிமீ, தாமரைப்பாக்கம் 310 மிமீ, புழல் சோழவரம்

300 மிமீ, செங்குன்றம், சேம்பரம் பாக்கம், 280 மிமீ, காஞ்சிபுரம், மரக்காணம், கோவில்பாக்கம், சென்னை விமான நிலையம் 270 மிமீ, ஆவடி, தரமணி 260 மிமீ, நுங்கம்பாக்கம், மாதவரம் 240 மிமீ, சென்னை டிஜிபி அலுவலகம், அண்ணா பல்கலைக் கழகம் 230 மிமீ மழை பெய்துள்ளது. தென் மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நேற்று தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது. இதனால் வட மாவட்டங்களில் கனமழை பெய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆந்திரா நோக்கி நகர்கிறது. ஆந்திராவை ஒட்டியுள்ள சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். கனமழை ஆபத்து படிப்படியாக நீங்கிவிடும். தென் மாவட்டங்களை பொறுத்தவரை ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.

**அபாயத்தில் தென்சென்னை செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு**



சென்னை : செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுவதால், தாம்பரம், சைதாப்பேட்டை, முடிச்சூர் உள்பட பல்வேறு

பகுதிகளில் வெள்ள ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கு முறையான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளாததே காரணம் என்று ஓய்வுபெற்ற பொதுப்பணித் துறை அதிகாரிகள் குற்றம்சாட்டுகின்றனர். ஏற்கனவே 2 லட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், மேலும் லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை காலி செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் மிக பெரிய ஏரியான செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3645 மில்லியன் கன அடி. கடந்த 10 நாட்களுக்கு முன்பு இந்த ஏரியின் நீர் இருப்பு 280 மில்லியன் கன அடியாக இருந்தது. சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் ஏரியின் நீர் இருப்பு தற்போது, 2,885 மில்லியன் கன அடியாக உயர்ந்துள்ளது. வழக்கமாக 24 அடிக்கு தண்ணீர் வந்தால் ஏரி, முழு கொள்ளளவை எட்டிவிடும்.இந்நிலையில், தொடர் மழையால் இந்த ஏரிக்கு, நேமம் ஏரி கால்வாய், ஸ்ரீபெரும்புதூர் ஏரி கால்வாய், கொரட்டூர் ஏரி கால்வாய் மற்றும் அதை சுற்றியுள்ள நீர்வழி கால்வாய் வழியாக 9,317 கன அடிநீர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இதனால் நேற்று அதிகாலை 21 அடியாக இருந்த நீர்மட்டம் மாலை 23 அடியை தொட்டது. உடனடியாக பொதுப்பணித்துறை அதிகாரிகள், ஏரியில் இருந்து 8000 கன அடி நீரை மாலை முததல் வெளியேற்றினர். இது, குன்றத்தூர், வழுதலம்பேடு, திருமுடிவாக்கம், அனகாபுத்தூர், மணப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், அடையாறு வழியாக கடலில் கலக்கிறது. இதனால் குன்றத்தூர்-ஸ்ரீபெரும்புதூர் சாலை சிறுகளத்தூர் என்ற இடத்தில் தரைப்பாலம் முழுவதும் தண்ணீரில் மூழ்கி சாலை துண்டிக்கப்பட்டது. செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு காரணமாக நேற்று இரவே மணப்பாக்கம், ராமாபுரம், அனாகாபுத்தூர், ஜாபர்கான்பேட்டை ஆகிய பகுதிகளில் ஆற்றின் கரையோரத்தில் குடியிருந்த 1300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெளியேற்றப்பட்டனர்.

மேலும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கரையோர பொதுமக்கள் சுமார் 2 லட்சம் பேர் வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், ''மழையின் அளவு அதிகரித்தால் வெளியேற்றப்படும் 500 கனஅடி நீர், 1000 கன அடியாக உயர்த்த வாய்ப்பு உள்ளது. எனவே கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளோம் '' என்றார். ஆனால் நேற்று இரவு செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்ததை தொடர்ந்து ேநற்று இரவு 8 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. இதனால், போலீசார், பொதுப்பணித் துறையினர், வருவாய் துறையினர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கரையோரம் வசித்த மக்களை வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றி அருகில் உள்ள பள்ளி, சமூக நலக் கூடம் உள்ளிட்ட இடங்களில் தங்க வைத்தனர்.

இது குறித்து ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது, செம்பரம்பாக்கம் ஏரி பராமரிப்பில் அரசு அக்கறை காட்டவில்லை. மேலும் கால்வாய் கரைகள் ஆக்கரமிப்பு, நீர்வரத்து கால்வாய் ஆக்ரமிப்புகளை தடுக்கவில்லை. இதனால்தான் செம்பரம்பாக்கம் திறக்கப்பட்டதும் இவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் செம்பரம்பாக்கத்தை ஆழப்படுத்தும் பணி ஆகிய எந்த பணியும் 30 சதவீதம்கூட பூர்த்தியடையாத நிலையில், நீரின் கொள்ளளவை உயர்த்துவதற்கான சாத்திய கூறுகள் இல்லாமல் போய்விட்டது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை: 9 லட்சம் வாழைகள் தண்ணீரில் மூழ்கின



தூத்துக்குடி, நவ. 17–

வங்கக்கடலில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் கடந்த இரண்டு நாள்களாக மழை தொடர்ந்து பெய்தது.

இதன் காரணமாக காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டு தூத்துக்குடி அருகேயுள்ள கோரம்பள்ளம் குளத்திற்கு அதிகமாக தண்ணீர் வந்த வண்ணம் உள்ளது. இதையடுத்து உபரி நீர் கடலுக்கு செல்லும் வகையில் அத்திமரப்பட்டியில் உள்ள 24 கண்மாயின் மதகுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் உப்பாற்று ஓடையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேலும் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிக்குள் வெள்ளம் புகுந்தது.

முத்தையாபுரம், முள்ளக்காடு, அத்திமரப்பட்டி, ஜெ.எஸ்.நகர், சுந்தர்நகர், மறவன்மடம், அந்தோணியார்புரம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்ப்பட்ட குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் புகுந்தது. இதனால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் தண்ணீர் சூழ்ந்துள்ளன.

மேலும் கோரம்பள்ளம், காலாங்கரை, அத்திமரப்பட்டி, முத்தையாபுரம், முள்ளக்காடு உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்களில் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் இங்கு பயிரிடப்பட்டுள்ள வாழை, நெல் உள்ளிட்ட

பயிர்கள் தண்ணீரில் மிதக்கின்றன. இந்த பகுதிகளில் மட்டும் 9 லட்சம் வாழை மரங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

மழைக்கு முன்பாக இந்த கால்வாய்களை முறையாக தூர்வாரவில்லை. இதன் காரணமாக தான் வெள்ளம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

மேலும் அத்திரமரப்பட்டி, முள்ளகாடு, முத்தையாபுரம், கோரம்பள்ளம் உள்ளிட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனார்.

மேலும் அத்திமரப்பட்டிக்கு செல்லும் சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த கிராமத்திற்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சாலையை சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சென்னை நகரில் 40 ஆண்டுகளில் இல்லாத மழை - ஒரே நாளில் 33 செ.மீ. கொட்டித்தீர்த்தது**



சென்னை, நவ.17-

சென்னை நகரில் கடந்த 1976-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் தேதி 45 செ.மீ. மழை பெய்தது. இதுதான் அதிகபட்ச மழை அளவாக இருந்து வருகிறது. 40 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை நகரில் இப்போது அதிக மழை பெய்து இருக்கிறது. அதாவது நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சென்னை புறநகர் பகுதியான தாம்பரத்தில் 33 செ.மீ. மழை பெய்து

உள்ளது. இதேபோல் காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்திலும் 33 செ.மீ. மழை பெய்து உள்ளது.என்றாலும் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் 37 செ.மீ. மழை பெய்து இருக்கிறது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் பதிவாகியுள்ள அதிகபட்ச மழை அளவு இதுதான்.

மற்ற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:-

செங்கல்பட்டு 32 செ.மீ., தாமரைப்பாக்கம் 31 செ.மீ., புழல் 30 செ.மீ., செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் தலா 28 செ.மீ., காஞ்சீபுரம், மரக்காணம், கேளம்பாக்கம், சென்னை விமானநிலையம் தலா 27 செ.மீ., ஆவடி, தரமணி தலா 26 செ.மீ., சென்னை 25 செ.மீ., மாதவரம் 24 செ.மீ., பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், செம்பரம்பாக்கம் தலா 23 செ.மீ., பூந்தமல்லி 22 செ.மீ., மதுராந்தகம், கொளப்பாக்கம், உத்திரமேரூர் தலா 21 செ.மீ. மழை பெய்து உள்ளது.அரக்கோணம், காட்டுக்குப்பம், எண்ணூர் தலா 20 செ.மீ., திருவேற்காடு, பூண்டி, திருவள்ளூர் தலா 19 செ.மீ., திருத்தணி 18 செ.மீ., பள்ளிப்பட்டு 17 செ.மீ., சோளிங்கர் 16 செ.மீ., கலவை 15 செ.மீ., காவேரிப்பாக்கம், செய்யார், வேலூர் தலா 14 செ.மீ., வானூர், திருக்கோவிலூர் தலா 13 செ.மீ., ஆர்.கே.பேட்டை 12 செ.மீ., செய்யூர், விழுப்புரம், திண்டிவனம், ஆலங்காயம், புதுச்சேரி தலா 11 செ.மீ., பரங்கிப்பேட்டை, செஞ்சி, வந்தவாசி தலா 9 செ.மீ., குடியாத்தம் 8 செ.மீ., ஆம்பூர், கடலூர், ஆரணி, முசிறி, மைலம், திருவிடைமருதூர் தலா 7 செ.மீ., குடவாசல், வாலாஜா, ஸ்ரீமுஷ்ணம், சிதம்பரம், வாணியம்பாடி தலா 6 செ.மீ., நெய்வேலி, சாத்தனூர், தரங்கம்பாடி, விருத்தாசலம், திருவாரூர், ஜெயங்கொண்டம், ஆணைக்காரன்சத்திரம் தலா 5 செ.மீ. மழை பதிவாகி இருக்கிறது.

வேதாரண்யம், நாகப்பட்டினம், நன்னிலம், வலங்கைமான், சீர்காழி, ராமேசுவரம், சங்கராபுரம், சிதம்பரம், உளுந்தூர்பேட்டை, போளூர், ஊட்டி, திருத்துறைப்பூண்டி தலா 4 செ.மீ., கும்பகோணம், பெரம்பலூர், நீடாமங்கலம்,

திருவையாறு, பாபநாசம், மயிலாடுதுறை, திருவண்ணாமலை, ஆலங்குடி, காரைக்கால், தஞ்சாவூர், மன்னார்குடி தலா 3 செ.மீ., கீரனூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், பாம்பன், செங்கம், கல்லணை, பேராவூரணி, பாடாலூர், திருக்காட்டுப்பள்ளி, ஆடுதுறை, மாரண்டஹள்ளி, குளித்துறை, ஏற்காடு, சமயபுரம், திருமயம், தர்மபுரி, அறந்தாங்கி, பேச்சிப்பாறை தலா 2 செ.மீ., திருவாடானை, கரூர், திருச்சி, கொடைக்கானல், பழனி, கந்தர்வகோட்டை, திருச்செந்தூர், தேவகோட்டை, அருப்புக்கோட்டை, சிவகிரி, சேலம், பண்ருட்டி, தர்மபுரி, ஓசூர், குளித்தலை தலா 1 செ.மீ. மழை பெய்து உள்ளது.

## தமிழகத்தில் படிப்படியாக மழையின் அளவு குறையும்: தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி ஆந்திரா நோக்கி செல்கிறது

சென்னை, நவ.17-

வடதமிழகம் அருகே உள்ள தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆந்திரா நோக்கி செல்வதால், தமிழகத்தில் மழையின் அளவு படிப்படியாக குறையும் என்றும் வடமாவட்டங்களில் இன்று(செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக வடமாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. தென் மாவட்டங்களில் மழை அந்த அளவுக்கு பெய்யவில்லை.

சென்னை மற்றும் புற நகர் பகுதிகள் மழை வெள்ளத்தில் சிக்கி தவிக்கின்றன. ஆங்காங்கே மழை நீர் வெள்ளம்போல ரோடுகளில் 2 அடி உயரத்திற்கு மேல் ஓடுகிறது.

இந்த நிலையில் வடதமிழகம் அருகே நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி திசை மாறி ஆந்திரா மாநிலம் நோக்கி செல்கிறது. இதன்

காரணமாக தமிழகத்தில் படிப்படியாக மழை அளவு குறையும்.

இது குறித்து சென்னை வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

நேற்று முன்தினம் தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டி உள்ள இலங்கை பகுதியில் நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி வட மேற்கு நோக்கி நகர்ந்து தமிழகத்தின் வடக்கு பகுதியில் நிலைகொண்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் ஒரே நாளில் 37 செ.மீ.மழை பெய்துள்ளது. சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் சில இடங்களில் மிக கனமழை பெய்துள்ளது.இந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேலும் நகர்ந்து தென் கடலோர ஆந்திரா பகுதிக்கு செல்கிறது.எனவே தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு (இன்று) வடமாவட்டங்களில் அநேக இடங்களிலும் மற்ற மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். ஆனால் தமிழ்நாட்டில் படிப்படியாக மழையின் அளவு குறையும்.

ஆந்திராவில் மழையின் அளவு அதிகரிக்கும். தீவிர குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஆந்திரா நோக்கிச் செல்ல உள்ளதால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்திற்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருமழை காலம் அக்டோபர் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரையாகும். இந்த காலத்தில் தமிழ்நாட்டில் பெய்ய வேண்டிய சராசரி மழை 44 செ.மீ. ஆனால் இதுவரை 38.3 செ.மீ.மழை பெய்துள்ளது. இன்னும் பெய்யவேண்டியது 6 செ.மீ. மழை தான்.

சென்னை மாவட்டத்தில் இந்த பருவமழை காலத்தில் பெய்ய வேண்டிய

சாராசரி மழை 85 செ.மீ. ஆனால் 91 செ.மீ.மழை பெய்துள்ளது. அதாவது இயல்பான அளவுக்கு பெய்துள்ளது.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் ஜெயலலிதா**

சென்னை, நவ. 16-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், நிவாரணப் பணிகளுக்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-இன்று (16.11.2015) நான் சென்னை மாநகரில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு, மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தெரிவித்ததோடு, அரசு செய்து வரும் நிவாரணப் பணிகளை பற்றி எடுத்துக் கூறியும் அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் எனது தலைமையிலான அரசு செய்து கொடுக்கும் என்ற உறுதியையும் அளித்துள்ளேன். வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான் ஏற்கெனவே அறிவித்தபடி நிவாரண உதவித் தொகை வழங்கவும் மற்றும் உடனடி சீரமைப்புப் பணிகளுக்கு என 500 கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்கி நான் ஆணையிட்டுள்ளேன். இதன் அடிப்படையில், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேலும் விரைந்து செயல்படுத்த அரசு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

விகடன்

**கனமழை எதிரொலி: சென்னையில் காய்கறிகளின் விலை கிடுகிடு உயர்வு!**

**சென்னை:** கனமழை எதிரொலி காரணமாக சென்னையில் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.



தமிழகத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வந்தது. இதன் காரணமாக சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்கள் மழை நீரால் சூழ்ந்து வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. இந்நிலையில், சென்னையில் கன மழை காரணமாக காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

சென்னையில் தக்காளி கிலோ ரூ.100க்கும், வெங்காயம் கிலோ ரூ.70க்கும் விற்பனை செய்யப்படுகிறது.பிற மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் சென்னைக்கு காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளதால் மற்ற காய்கறிகளின் விலையும் கனிசமாக உயர்ந்துள்ளன.




இதேபோல், சென்னையில் பெய்த பலத்த மழையால் பால் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. பால் பண்ணைகளில் வெள்ளம் சூழ்ந்ததால் இயந்திரங்கள் தண்ணீரில் மிதந்தது. இதனால் சோழிங்கநல்லூர், மாதவரம், கொரட்டூர் பால் பண்ணைகளில் பால் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது.

இதன் காரணமாக சென்னையில் ஆவின் பால் மற்றும் தனியால் பால் குறைந்த அளவிலேயே விநியோகம் செய்யப்படுவதாக கூறப்படுகிறது. இதனால், பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## ஆந்திராவில் கனமழை: சித்தூரில் 4,500 ஏரிகள் நிரம்பின_ - 12 ஏரிகள் உடைந்தன; பல மாவட்டங்களில் விடுமுறை



வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, ஆந்திராவில் பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. சித்தூர் மாவட்டத்தில் மட்டும் 4,500 ஏரிகள் நிரம்பியுள்ளன. 12 ஏரிகள் உடைப் பெடுத்ததில், பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதையடுத்து பல மாவட் டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, ஆந்திராவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு முதல் தொடர் கனமழை பெய்து வருகிறது. சித்தூர்,

நெல்லூர், கடப்பா, நெல்லூர், குண்டூர், கிருஷ்ணா ஆகிய மாவட் டங்களில் கனமழை காரணமாக அனைத்து ஏரிகளும், அணைகளும் நிரம்பின.

சித்தூர் மாவட்டத்தில் உள்ள 12,500 ஏரிகளில் 4,500 ஏரிகள் நிரம்பி கிராமங்களில் வெள்ள நீர் அடித்து சென்றது. 12 ஏரிகள் உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்ததால் நூற்றுக்கணக்கான குடிசைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.

ஸ்ரீகாளஹஸ்தியில் உள்ள சுவர்ணமுகி நதியில் சுமார் 10 ஆண்டுகளுக்கு பின்னர் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதன் காரணமாக நதியோரம் உள்ள ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோயிலுக்குள் மழை வெள்ளம் தேங்கியுள்ளது. கோயில் சுவர்களிலும், கல் தூண்களிலும் மழைநீர் கசிந்தது. யாகசாலை, கொடி கம்பம், நாயன்மார்கள் சன்னிதி, அம்மன் சன்னிதிகளில் மழைநீர் புகுந்தது.

திருப்பதி ஏழுமலையான் கோயிலை சுற்றிலும் மழை வெள்ளம் தேங்கியுள்ளது. திருமலையில் உள்ள அனைத்து தீர்த்தங் களிலும் நீர் வரத்து அதிகரித்தது. கோகர்பம், பாபவிநாசம் அணைகள் நிரம்பியதால், 2 மதகுகள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும் குமாரதாரா, பசுபுதாரா அணைகளும் நிரம்பின. தொடர் மழை காரணமாக திருப்பதியில் இருந்து திருமலை செல்லும் 2வது மலைப்பாதையில் 12வது மைலில் நேற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது. மேலும் பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மேலும், ஸ்ரீவாரி மெட்டு பகுதியில் நடைபாதையிலும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் பக்தர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயினர்.

நெல்லூர், கடப்பா, குண்டூர், கிருஷ்ணா ஆகிய மாவட்டங்களிலும் கனமழை பெய்தது. பல இடங்களில் ஏரிகள் உடைந்தன. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் பல குடிசை வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

வெள்ளத்தால் வீடு இழந்தவர்கள் அரசு பள்ளிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை வெள்ள நிலவரம் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அதிகாரிகளுடன் முதல்வர் சந்திரபாபு நாயுடு காணொலி மூலம் நிலவரங்களை கேட்டறிந்தார்.

மழை வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 23 ஐஏஎஸ் அதிகாரிகள்: முதல்வர் ஜெயலலிதா உத்தரவு

சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் வெள்ள நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த ஐஏஎஸ் அதிகாரிகளை நியமித்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த சில தினங்களில் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மழை அதிகளவில் பெய்துள்ளது. சென்னை மாநகராட்சி ஆணைய ருக்கு உதவவும், நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தவும் ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னையில் நிவாரணப் பணிகளுக்கு, சா.விஜயராஜ்குமார், க.மணிவாசன், தா.கார்த்திகேயன், வெ.சந்திரசேகரன், இரா.பழனிச்சாமி, தி.ந.வெங்கடேஷ், பு.உமாநாத், சி.காமராஜ், சீ.ஸ்வர்ணா, காகர்லா உஷா, ராஜேந்திர ரத்னூ, இல.நிர்மல்ராஜ், ஆர்.கிர்லோஷ்குமார், ஆ.கார்த்திக், க.லதா ஆகிய 15 ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ராஜேஷ்லக்கானி, ச.விஜயகுமார், பெ.அமுதா, மு.பாலாஜி, சி.அ.ராமன், த.ஆனந்த், ஆர்.அனந்தகுமார், ப.மகேஸ்வரி, ஆகிய ஐஏஎஸ் அதிகாரிகள் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி ப.கணேசன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அறிக்கையில் முதல்வர் கூறியுள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**15 நாளில் 6,700 மில்லியன் கன அடி அதிகரிப்பு: சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகள் நீர்மட்டம் 'கிடுகிடு' உயர்வு ஒரே நாளில் 1,935 மில்லியன் கன அடி உயர்ந்தது**



சென்னை,

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. 15 நாளில் 6,700 மில்லியன் கன அடி அதிகரித்தது. நேற்று ஒரே நாளில் 1,935 மில்லியன் கன அடி உயர்ந்தது.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழையால் தமிழகம் முழுவதும் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் உள்பட நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

சென்னையில் பெய்து வரும் தொடர் மழையால் நகரின் முக்கிய குடிநீர் ஆதாரங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளின் நீர்மட்டம் கிடுகிடுவென அதிகரித்து வருகிறது.

நாளுக்கு நாள் நீர்மட்டம் அதிரடியாக உயர்ந்து வருவதால், ஏரிகள் விரைவில் முழு கொள்ளளவை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏரிகள் நீர்மட்டம்

இதுகுறித்து சென்னை குடிநீர் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

பூண்டி ஏரியில்(மொத்த கொள்ளளவு–3,231 மில்லியன் கன அடி) கடந்த 1–ந்தேதி 70 மில்லியன் கன அடியும், புழல் ஏரியில்(3,300 மில்லியன் கன அடி) 25 மில்லியன் கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில்(3,645 மில்லியன் கன அடி)

228 மில்லியன் கன அடியும் தண்ணீர் இருப்பு இருந்தது. மொத்த ஏரிகளின் கொள்ளளவு 323 மில்லியன் கன அடியாக இருந்தது.

சோழவரம் ஏரி(மொத்த கொள்ளளவு–881) தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டது.

'கிடுகிடு' உயர்வு

தொடர் மழையால், ஏரிகளின் நீர்மட்டம் கிடுகிடுவென அதிகரித்த வண்ணம் உள்ளது. நேற்று முன்தினம் நிலவரப்படி பூண்டி ஏரியில் 1,626 மில்லியன் கன அடியும், சோழவரம் ஏரியில் 443 மில்லியன் கன அடியும், புழல் ஏரியில் 1,150 மில்லியன் கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் 1,869 மில்லியன் கன அடியும் என மொத்த ஏரிகளின் நீர்மட்டம் 5,088 மில்லியன் கன அடியாக இருந்தது.

<u>7,023 மில்லியன் கன அடி</u>

நேற்று முன்தினம் இரவு, பகலாக கொட்டி தீர்த்த கனமழையால், ஒரே நாளில் ஏரிகளின் மொத்த நீர்மட்டம் 1,935 மில்லியன் கன அடி அதிகரித்துள்ளது.

அதன்படி, பூண்டி ஏரியில் 2,044 மில்லியன் கன அடியும், சோழவரம் ஏரியில் 619 மில்லியன் கன அடியும், புழல் ஏரியில் 1,657 மில்லியன் கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் 2,703 மில்லியன் கன அடியும் என மொத்த ஏரிகள் நீர்மட்டம் 7,023 மில்லியன் கன அடியாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>21 மடங்கு அதிகரிப்பு</u>

கடந்த 15 நாட்களோடு ஒப்பிடுகையில் ஏரிகளின் நீர்மட்டம் 21 மடங்கு உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் 16–ந்தேதி நிலவரப்படி, மொத்த ஏரிகள் நீர்மட்டம் 2,973 மில்லியன் கன அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**தொடர் மழை-வெள்ளத்தால் காய்கறி விலை கடும் உயர்வு கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை மந்தம்**



சென்னை,

சென்னை மற்றும் புறநகரில் பெய்து வரும் தொடர் மழை மற்றும் வெள்ளத்தால் போக்குவரத்து பாதிப்பு போன்ற காரணங்களால் கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்தது.

காய்கறி விலை அதிகரிப்பு

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் தேங்கி பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் கோயம்பேடு மார்க்கெட் மழையினால் சேறும் சகதியுமாக மாறிவிட்டது.

தமிழகத்தின் சில பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக கோயம்பேடு மார்க்கெட்டிற்கு வரும் காய்கறிகளின் வரத்தும் குறைந்தது. இதுபோன்ற காரணங்களால் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்தது.

விற்பனை மந்தம்

மழை காரணமாக பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தங்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல தயக்கம் காட்டுவதால், கோயம்பேடு மார்க்கெட்டிற்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைந்தது. இதனால் கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் மந்தமாகவே இருந்தது.

ஆனாலும் காய்கறிகளின் விலை குறையவில்லை, கடுமையாக உயர்ந்தே இருந்தது. தக்காளி கிலோ 80 ரூபாய்க்கும், சிறிய வெங்காயம் கிலோ 70 ரூபாய்க்கும், நாட்டு கத்தரிக்காய் கிலோ 60 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இலவசமாக வழங்கப்படும் கறிவேப்பிலை 4 கிலோ அடங்கிய கட்டு 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நகரின் சில பகுதிகளில் தக்காளி சில்லறை விலையில் 100 ரூபாய்க்கும் அதிகமாகவும் விற்பனை செய்யப்பட்டது.

## தமிழகத்தில் படிப்படியாக மழையின் அளவு குறையும் தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி ஆந்திரா நோக்கி செல்கிறது



சென்னை,

வடதமிழகம் அருகே உள்ள தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆந்திரா நோக்கி செல்வதால், தமிழகத்தில் மழையின் அளவு படிப்படியாக குறையும் என்றும் வடமாவட்டங்களில் இன்று(செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தீவிரம்

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக வடமாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. தென் மாவட்டங்களில் மழை அந்த அளவுக்கு பெய்யவில்லை.

சென்னை மற்றும் புற நகர் பகுதிகள் மழை வெள்ளத்தில் சிக்கி தவிக்கின்றன. ஆங்காங்கே மழை நீர் வெள்ளம்போல ரோடுகளில் 2 அடி உயரத்திற்கு மேல் ஓடுகிறது.

படிப்படியாக மழை குறையும்

இந்த நிலையில் வடதமிழகம் அருகே நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி திசை மாறி ஆந்திரா மாநிலம் நோக்கி செல்கிறது. இதன் காரணமாக தமிழகத்தில் படிப்படியாக மழை அளவு குறையும்.

இது குறித்து சென்னை வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

நேற்று முன்தினம் தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டி உள்ள இலங்கை பகுதியில் நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி வட மேற்கு நோக்கி நகர்ந்து தமிழகத்தின் வடக்கு பகுதியில் நிலைகொண்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் ஒரே நாளில் 37 செ.மீ.மழை பெய்துள்ளது. சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் சில இடங்களில் மிக கனமழை பெய்துள்ளது.

இந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேலும் நகர்ந்து தென் கடலோர ஆந்திரா பகுதிக்கு செல்கிறது.

அநேக இடங்களில் மழை

எனவே தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு (இன்று) வடமாவட்டங்களில் அநேக இடங்களிலும் மற்ற மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். ஆனால் தமிழ்நாட்டில் படிப்படியாக மழையின் அளவு குறையும்.

ஆந்திராவில் மழையின் அளவு அதிகரிக்கும். தீவிர குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஆந்திரா நோக்கிச் செல்ல உள்ளதால் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்திற்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் இயல்பான மழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருமழை காலம் அக்டோபர் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரையாகும். இந்த காலத்தில் தமிழ்நாட்டில் பெய்ய வேண்டிய சராசரி மழை 44 செ.மீ. ஆனால் இதுவரை 38.3 செ.மீ.மழை பெய்துள்ளது. இன்னும் பெய்யவேண்டியது 6 செ.மீ. மழை தான்.

சென்னை மாவட்டத்தில் இந்த பருவமழை காலத்தில் பெய்ய வேண்டிய சாராசரி மழை 85 செ.மீ. ஆனால் 91 செ.மீ.மழை பெய்துள்ளது. அதாவது இயல்பான அளவுக்கு பெய்துள்ளது.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

## தொடர் மழை எதிரொலி பெங்களூருவில் காய்கறிகள் விலை கிடுகிடு உயர்வு இல்லத்தரசிகள் கவலை



பெங்களூரு,

தொடர் மழை எதிரொலியாக பெங்களூருவில் காய்கறிகள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால் இல்லத்தரசிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>தொடர் மழை</u>

பருவம் தவறிய மழை, வறட்சி மற்றும் பதுக்கல் ஆகியவை காரணமாக சமீபத்தில் நாடு முழுவதும் வெங்காயம், பருப்பு வகைகளின் விலை உயர்ந்தது. இந்த நிலை பெங்களூருவிலும் எதிரொலித்தது. இந்த விலை உயர்வை தடுக்க மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்தன. இதன் பயனாக தற்போது வெங்காயம் மற்றும் பருப்பு வகைகளின் விலை குறைந்தது. இதனால் இல்லத்தரசிகள் நிம்மதி அடைந்தனர். ஆனால் அதற்குள் தற்போது பெங்களூருவில் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

காய்கறிகளின் விலை உயர்வுக்கு தொடர் மழை தான் காரணம் என கூறப்படுகிறது. பெங்களூருவில் நேற்று முன்தினம் மட்டும் 5.8 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது. நவம்பர் மாதத்தில் நேற்று முன்தினம் நிலவரப்படி மொத்தம் 227 மில்லி மீட்டர் மழை பெங்களூருவில் பெய்துள்ளது. மழையின் காரணமாக பெங்களூருவுக்கு வரும் காய்கறிகளின் வரத்தும் குறைந்துள்ளது.

<u>காய்கறிகளின் விலை உயர்வு</u>

இதனால் கடந்த வாரத்தை ஒப்பிடும்போது தற்போது காய்கறிகளின் விலை மார்க்கெட்டுகளில் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ரூ.28 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளி தற்போது ரூ.60 முதல் ரூ.65 வரையும், ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ வெங்காயம் ரூ.45 முதல் ரூ.50 வரையும், ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ காரட் ரூ.62 முதல் ரூ.65 வரையும் தற்போது விற்பனை செய்யப்படுகிறது.

ரூ.40 முதல் ரூ.45 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பீன்ஸ் ரூ.45 முதல் ரூ.50 வரையும், ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ முள்ளங்கி ரூ.28 முதல் ரூ.30 வரையும், ரூ.17 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கு தற்போது ரூ.26 முதல் ரூ.30 வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

<u>இல்லத்தரசிகள் கவலை</u>

மேலும் தொடர்ந்து மழை பெய்யுமானால் பெங்களூருவில் தொடர்ந்து காய்கறிகளின் விலை உயரும் என வியாபாரிகள் கூறுகிறார்கள். இதனால் இல்லத்தரசிகள் கவலை அடைந்துள்ளனர்.

## பெங்களூருவில் மேலும் 2 நாட்கள் மழை நீடிக்க வாய்ப்பு குளிர்ந்த காலநிலையும் தொடரும்

பெங்களூரு,

பெங்களூருவில் மேலும் 2 நாட்கள் மழை நீடிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் குளிர்ந்த காலநிலையும் தொடரும்.

<u>பலத்த மழை</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் வங்க கடலில் நிலை கொண்டு உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி தீவிரம் அடைந்து வருவதால் தமிழகத்தில் மேலும் சில நாட்கள் கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. அதன்படி, கனமழை பெய்து வருகிறது.

<u>மேலும் 2 நாட்கள்</u>

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, பெங்களூரு உள்பட தென்கர்நாடகத்தின் உள்பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இந்த மழை மேலும் சில நாட்கள் நீடிக்க வாய்ப்பு உள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ராஜா ரமேஷ் கூறியதாவது:–

வங்க கடலில் நிலை கொண்டு உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழ்நாட்டை ஒட்டியுள்ள கோலார், பெங்களூரு, சாம்ராஜ்நகர் உள்பட தென்கர்நாடகத்தின் உள்பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்த மழை மேலும் 2 நாட்கள் அதாவது நாளை (புதன்கிழமை) வரை நீடிக்கும். கடலோர மாவட்டங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் லேசான மழை பெய்யும்.

நாளை மறுநாளில் இருந்தும் சில நாட்கள் தென்கர்நாடகத்தின் உள்பகுதியில் தற்போதைய காலநிலை நிலவும். மழை அளவு குறைந்தாலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வடகர்நாடகத்தை பொறுத்த வரை வெயில் தொடரும்.

இவ்வாறு ராஜா ரமேஷ் கூறினார்.

குளிர்ந்த காலநிலை

பெங்களூரு நகரில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இடைவிடாமல் மழை பெய்து கொண்டே இருக்கிறது. இதனால் நகரில் வெப்பம் தணிந்து குளிர்ந்த காலநிலை நிலவுகிறது. வீட்டில் இருந்து வெளியே வர முடியாத அளவுக்கு குளிர் வாட்டி வதைக்கிறது. வீடுகளில் ‘சுவட்டர்’ அணியாமல் இருக்க முடிவது இல்லை. நகரில் மேலும் சில நாட்களில் இந்த மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருப்பதால் குளிர்ந்த காலநிலையும் தொடரும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விடிய விடிய மழை கொட்டியது: புதுச்சேரியில் மழைநீரை வெளியேற்றும் பணி தீவிரம்

புதுவையில் விடிய விடிய கொட்டிய மழை நேற்று காலை முதல் நின்றது. இதனால் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணி தீவிரமாக நடந்தது.

விடியவிடிய மழை

வங்கக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுபகுதி காரணமாக கடந்த 11-ந் தேதி முதல் புதுச்சேரியில் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை கடந்த சில நாட்களாக அடைமழையாக கொட்டியது. நேற்று முன்தினமும் விடிய விடிய மழை கொட்டியது. இதன் காரணமாக புதுவையில் மழைவெள்ளம் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளான பூமியான்பேட்டை, பாவாணர் நகர், கிருஷ்ணாநகர், ரெயின்போ நகர், ராஜ ராஜேஸ்வரி நகர், செல்லான் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கியது.

வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது

அந்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும் மழைநீர் புகுந்தது. தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்ததால் மழை நீரை வெளியேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்தநிலையில் மேலும் மழைநீடித்தால் புதுச்சேரியில் பெரும் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவானது. ஆனால் கடவுளின் கருணையினால் நேற்று அதிகாலை முதல் மழை பெய்யவில்லை. காலையில் சூரியனின் முகம் தெரியாவிட்டாலும் மழை ஏதும் பெய்யவில்லை.

வெளியேற்றம்

இதைத்தொடர்ந்து புதுவை அரசு துறைகள் மீட்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தின. பொதுப்பணித்துறை, உள்ளாட்சித்துறை உள்ளிட்ட துறையினர் எங்கெங்கு தண்ணீர் தேங்கியதோ அங்கெல்லாம் மோட்டார்களை வைத்து தண்ணீரை உறிஞ்சி வெளியேற்றினார்கள். வாய்க்கால்களில் ஏற்பட்டிருந்த அடைப்புகளை அகற்றினர்.

மேலும் சாலைகளில் மழையினால் உண்டான பள்ளங் களில் சிமெண்டு கலவைகளை கொட்டி போக்குவரத்துக்கு ஏற்றதாக சரிப்படுத்தினார்கள். மேலும் ஆங்காங்கே சாய்ந்து கிடந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தப்படுத்தினார்கள்.

மின் இணைப்புகள்

மின்துறையினர் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட இடங்களில் மின் இணைப்புகளை கொடுக்கும் பணியில் ஈடுபட்டனர். நேற்று காலை முதலே இந்த பணிகள் தீவிரமாக நடந்தன.

இந்த தீவிர பணிகளினால் மழை பெய்து பல நாட்கள் ஆனது போன்ற தோற்றம் நகரப்பகுதியில் உருவானது. பல்வேறு வீதிகளில் குவிந்திருந்த குப்பைகள் அகற்றப்பட்டதாலும், மழை வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டதாலும் பளிச் சென்று காணப்பட்டன.

மீன்பிடிக்க செல்லவில்லை புதுவையில் நேற்று மழைவிட்டபோதிலும் கடல்சீற்றமாகவே காணப்பட்டது. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் அவர் களது படகுகள் கடற்கரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

புதுவையில் நேற்று முன் தினம் காலை 8-30மணிமுதல் நேற்று காலை 8-30மணிவரை 11செ.மீ. மழை பதிவாகியிருந்தது.

## புதுச்சேரிக்கு புயல் ஆபத்து இல்லை கலெக்டர் மணிகண்டன் தகவல்

புதுச்சேரிக்கு புயல் ஆபத்து ஏதும் இல்லை என்று கலெக்டர் மணிகண்டன் கூறினார்.

புதுச்சேரி மாவட்ட கலெக்டர் மணிகண்டன் நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

புயல் ஆபத்து இல்லை

புதுச்சேரியில் கடந்த 14-ந் தேதி 32 மி.மீட்டரும், 15-ந் தேதி 50 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது. இன்னும் 120 முதல் 150 மில்லி மீட்டர் மழையை எதிர்பார்க்கிறோம். பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண பணிகளை

மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்து வருகிறேன்.

வானிலை ஆய்வு மைய அதிகாரி ரமணனை தொடர்பு கொண்டு கேட்டபோது, புதுவையை புயல் தாக்கும் சாத்தியக்கூறு இல்லை எனவும், இன்னும் 2, 3 நாட்களுக்கு மழை இருக்கும் என்றும் தெரிவித்தார். மாவட்ட நிர்வாகமும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நிவாரண பணிகளை மேற்கொள்ள 24 மணிநேரமும் தயாராக உள்ளோம். மக்கள் தங்கள் பாதிப்புகளை 1070, 1077 என்ற எண்களை தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

மழைநீரை வெளியேற்ற...

பொதுமக்கள் தகவல் தெரிவித்த ஒரு சில மணித்துளிகளுக்குள் பேரிடர் மேலாண்மை குழு தலைவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நானே கிராமப்பகுதிகளுக்கு நேரில் சென்று பார்த்து மக் களின் தேவைகளை உணர்ந்து உள்ளேன். ஒருசில பகுதிகளில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. அதை வெளியேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். மழையால் பாதிக்கப்படுபவர்களுக்காக 173 சிறப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன. 3 மையங்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டு உணவும் வழங்கப்பட்டது.

ஏரிகள் நிரம்பவில்லை

மழை காரணமாக ஏரிகள் நிரம்பி வருகின்றன. ஏரிகளில் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க பொதுப்பணித்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதுவையின் மிகப்பெரிய ஏரிகளான ஊசுட்டேரி, பாகூர் ஏரி இன்னும் நிரம்பவில்லை. தொடர்ந்து மழை பெய்தால் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் ஊசுட்டேரி நிரம்பும்.

3.5 மீட்டர் உயரம் உள்ள ஊசுட்டேரியில் இப்போது 1.45 மீட்டர் உயரத்துக்குத்தான் தண்ணீர் உள்ளது. அதேபோல் வீடூர் அணை பற்றி தவறான தகவல் பரப்பப்படுகிறது. வீடூர் அணை இன்னும் நிரம்பவில்லை.

அங்கு 30 சதவீத அளவுக்குத்தான் தண்ணீர் உள்ளது. வீடூர் அணை நிரம்பி திறக்கும் சூழ்நிலை என்றால் அதற்கு முன்னதாகவே நமக்கு தகவல் தெரிவிக்க தமிழக அதிகாரிகளை கேட்டுள்ளோம்.

தவறான தகவலை பரப்பினால்…

32 அடி உயரம் உள்ள வீடூர் அணையில் 24.4 அடிக்குதான் தண்ணீர் உள்ளது. அதாவது அணையின் மேல்பகுதியில்தான் தண்ணீர் கொள்ளளவு அதிகமாக இருக்கும்.

எனவே தவறான தகவல்களை யாரும் பரப்ப வேண்டாம். தவறான தகவல்களை பரப்புபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும். பொதுமக்கள் மேலே கூறிய இலவச டெலிபோன் எண்களில் தொடர்பு கொண்டு தகவல்களை தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் மணிகண்டன் கூறினார்.

## வேளாண் பொருட்களின் விலை விவரம்



அரியலூர்

அரியலூர் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளைபொருட்களின் விலை விவரம் வருமாறு:–மக்காசோளம்(100 கிலோ)–ரூ.1,301, கடலை(50 கிலோ)– ரூ.2,237 இத்தகவலை வேளாண் விற்பனைக்கூட அதிகாரி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளை பொருட்களின் விலை விவரம் வருமாறு:–மணிலா(80 கிலோ) ரூ.4,980, எள்(80 கிலோ) ரூ.4,011.

## பழனி பகுதியில் தொடரும் மழை: வரதமாநதி, பாலாறுபொருந்தலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



பழனி,

பழனி பகுதியில் பெய்து வரும் தொடர்மழையால் வரதமாநதி, பாலாறுபொருந்தலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பழனியை சுற்றியுள்ள 28 குளங்கள் நிரம்பின.

பலத்த மழை

வங்கக்கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. சென்னை, கடலூர், காஞ்சீபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. திண்டுக்கல் மாவட்டத்திலும் சாரல் மழையும், இடையிடையே பலத்த மழையும் பெய்து வருகிறது. இதனால் அணைகள், ஏரிகள், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

பழனி பகுதியில் கடந்த சில நாட்களாக சாரல்மழையும், சில நேரங்களில் பலத்த

மழையும் பெய்து வருகிறது. இதனால் வரதமாநதி அணை, பாலாறுபொருந்தலாறு அணை, குதிரையாறு அணை ஆகியவற்றுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 66 அடி உயரமுடையை வரதமாநதி அணை நேற்றைய நிலவரப்படி 62 அடிக்கு தண்ணீர் காணப்பட்டது. வினாடிக்கு 450 கன அடி நீர்வரத்து உள்ளது. அந்த தண்ணீர் அப்படியே சுற்று பகுதிகளில் உள்ள குளங்கள் நிரம்புவதற்காக திறந்து விடப்படுகிறது.

28 குளங்கள் நிரம்பின

அதேபோல பாலாறுபொருந்தலாறு அணையின் நீர்மட்டமும் படிப்படியாக உயர்ந்து வருகிறது. 65 அடி உயரம் கொண்ட இந்த அணையில் தற்போது 46 அடி வரை தண்ணீர் இருப்பு உள்ளது. அணைக்கு வினாடிக்கு 891 கன அடி தண்ணீர் வரும் நிலையில், 12 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

குதிரையாறு அணையின் உயரம் 80 அடியாகும். தற்போது 58 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. அணைக்கு 500 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணைகள் நிரம்பி வரும் நிலையில் பழனி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள 58 குளங்களுக்கும் வரதமாநதி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.இதற்கிடையே பழனியில் உள்ள அய்யம்புள்ளி, இடும்பன்குளம் உள்ளிட்ட 28 குளங்கள் நிரம்பின. மேலும் 30 குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. அணைகள், குளங்கள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### கடலூர் மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை: வானமாதேவியில் 107 மி.மீ. பதிவானது



கடலூர்,

கடலூர் மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக வானமாதேவியில் 107 மில்லி மீட்டரும், குறைந்த பட்சமாக பண்ருட்டியில் 9.70 மில்லி மீட்டரும் மழை பதிவானது.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதையடுத்து வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் கடந்த 9-ந் தேதி புதுச்சேரி அருகே கரையை கடந்தபோது கடலூர் மாவட்டத்தில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குடியிருப்புகளையும், விளை நிலங்களையும் தண்ணீர் சூழ்ந்து கொண்டது.

கரைபுரண்டு ஓடிய காட்டாற்று வெள்ளத்தில் ஏராளமான குடிசை வீடுகள் அடித்து செல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன. தண்ணீரில் மூழ்கியும், சூறாவளி காற்றில் சாய்ந்தும் 21 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான பயிர்கள் சேதம் அடைந்தன. மழைக்கு இதுவரை 63 பேர் பலியாகி உள்ளனர். மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காற்றழுத்த தாழ்வு நிலை

இந்த நிலையில் மழை நின்று சில நாட்களுக்கு பிறகு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதையடுத்து கடலூர் மாவட்டத்தில் மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. இதனால் மழைநீர் வடிந்த பகுதியில் தண்ணீர்

தேங்க தொடங்கியது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதித்தது.
இதற்கிடையே காற்றழுத்த தாழ்வு நிலை தாழ்வு மண்டலமாக உருவாகி தமிழகத்தை நெருங்கி வருவதால் மேலும் 4 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும், குறிப்பாக கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்தது.

இதனால் கடலூர் மாவட்டம் மீண்டும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் அபாய நிலை உருவானது. 362 கிராமங்கள் வெள்ளம் சூழும் அபாயம் இருப்பதாக கண்டறியப்பட்டு அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டது.

மழை நின்றது

கடந்த 2 நாட்களாக விடிய விடிய பெய்து வந்த மழை நேற்று காலை 8 மணியளவில் நின்றது. மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் வானம் மப்பும், மந்தாரமுமாக காணப்பட்டாலும் மழைபெய்யவில்லை. காலையில் சூரிய உதயத்தை காண முடிந்தது. வெயில் சுள்ளென சுட்டெரித்தது.

இதனால் மழைநீர் வடிய தொடங்கியது. ஆனால் வடிகால் வசதி இல்லாத பகுதிகளில் மழை வெள்ளம் குளம்போல தேங்கி நிற்பதை காண முடிந்தது.

வெயிலில் காய வைத்தனர்ஒருவாரத்துக்கு பிறகு வெயில் அடித்ததால் பெண்கள் துணிகளை சலவை செய்து உலர்த்துவதற்காக வெயிலில் காயவைத்தனர். சிறு வியாபாரிகள் சாலையோரம் அமர்ந்து வியாபாரம் செய்தனர். இதனால் நகரின் முக்கிய வணிகஸ்தலமான லாரன்ஸ்சாலை, மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட், முதுநகர் பக்தவச்சலம் மார்க்கெட் ஆகியவை பரபரப்புடன் காணப்பட்டன. பின்னர் மாலையில் மீண்டும் மழை பெய்தது.
புதிய காற்றழுத்த தாழ்வு நிலை ஆந்திராநோக்கி இடம் பெயர்ந்ததால் கடலூர் மாவட்டத்துக்கு வர இருந்த வெள்ள ஆபத்து நீங்கியது. என்றாலும் மழை தொடர்ந்து நீடிக்கும் என வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர்

தெரிவித்தார்.

மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக வானமாதேவியில் 107 மில்லி மீட்டரும், குறைந்தபட்சமாக பண்ருட்டியில் 9.70 மில்லி மீட்டரும் மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 58.05 மில்லி மீட்டர் மழை பதிவானது.

மாவட்டத்தின் பிற இடங்களில் பெய்துள்ள மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:-

பரங்கிப்பேட்டை - 95

கடலூர் - 72.60

வேப்பூர் - 72

கொத்தவாச்சேரி - 69

மே.மாத்தூர் - 67

புவனகிரி - 63

ஸ்ரீமுஷ்ணம் - 62

சேத்தியாத்தோப்பு - 61.20

சிதம்பரம் - 60.50

லால்பேட்டை - 58.50

காட்டுமயிலூர் - 56

கீழ்செருவாய் - 56

விருத்தாசலம் - 53.40

குப்பநத்தம் - 50.20

பெலாந்துறை - 48

லக்கூர் - 44.20

அண்ணாமலைநகர் - 39.80

தொழுதூர் - 39

காட்டுமன்னார்கோவில்  - 35

## அறந்தாங்கி பகுதியில் தொடர் மழை: வயல்களில் களை அகற்றும் பணி தீவிரம் விவசாயிகள் மகிழ்ச்சி



அறந்தாங்கி பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் வயல்களில் களை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காவிரி பாசனம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி வட்டங்களின் ஒரு பகுதி கல்லணை கால்வாய் மூலம் காவிரி பாசனம் நடைபெறும் பகுதியாகவும், மற்றொரு பகுதி மழைநீரை மட்டுமே நம்பி சாகுபடி செய்யப்படும் மானாவாரி பகுதியாகவும் விளங்கி வருகிறது. காவிரிப்பாசன பகுதி மற்றும் மானாவாரி பகுதிகளில் சுமார் 40 முதல் 60 நாட்களுக்கு முன்பு பெய்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வயல்களில் நேரடி நெல்விதைப்பு செய்திருந்தனர். நெல் விதைப்பு செய்து சில வாரங்கள் கழித்து சிறிய அளவில் மழை பெய்தபோது, விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள நெற்பயிருக்கு களைகளை கட்டுப்படுத்தும் களைக்கொல்லி மருந்தை தெளித்து இருந்தனர்.

விவசாயிகள் களைக்கொல்லி தெளித்தபின் போதுமான மழை பெய்யாத காரணத்தால், களைக்கொல்லி மருந்துதெளித்தது பயனற்றுப் போனது. இதனால் அறந்தாங்கி பகுதியில் காவிரிப் பாசனம் நடைபெறும் பகுதி மற்றும் மானாவாரி பகுதியில் நெல்விதைப்பு செய்துள்ள வயல்களில் தற்போது முளைத்துள்ள நெற்பயிருடன் சுமார் 10 முதல் 30 சதவீத அளவிற்கு களைகள்

முளைத்துள்ளன.

தண்ணீர் தேக்கம்

வயல்களில் நெற்பயிரின் வளர்ச்சியை தடுக்கும் களைகளை அகற்ற போதுமான மழை பெய்யாத நிலையில் களைகள் நன்கு வளர்ந்துள்ளன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக அறந்தாங்கி பகுதியில் தொடர்மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியதால், வயல்களில் உள்ள களைகளை அகற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதை தொடர்ந்து விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள களைகளை கூலி ஆட்கள் மூலம் அகற்றிவிட்டு, நெற்பயிர்கள் செழிப்பாக வளர உரமிடும் பணியை தொடங்கி உள்ளனர்.

ஆட்கள் பற்றாக்குறை

அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி பகுதிகளில் ஒரே நேரத்தில் களைஎடுக்கும் பணி தொடங்கி உள்ளதால், வயல்களில் களைஎடுக்கும் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை களை எடுக்கும் பணிக்கு ஆள் ஒன்றுக்கு ரூ.150 கூலியாக கொடுக்கப் பட்டு வந்தது. ஆனால் தற்போது ஆள் ஒன்றுக்கு ரூ.250 வரை கூலி உயர்ந்துள்ளது. கூலி உயர்ந்துள்ள போதிலும் ஆட்கள் பற்றாக்குறையால், பல ஆயிரம் ஏக்கரில் களை அகற்றும் பணி நடைபெறாமல் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் மகிழ்ச்சி

களைகளை அகற்றினால் மட்டுமே வயலுக்கு உரமிடலாம் என்பதால், விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள களைகளை அகற்ற தஞ்சாவூர், திருவாரூர், ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களை சேர்ந்தவர்களை அழைத்து வந்து தங்கள் வீடுகளில் தங்கவைத்து தங்கள் வயல்களில் களைகளை அகற்றி வருகின்றனர். இதுதவிர களைகளை அகற்றுவதற்காக புதுக்கோட்டை மாவட்டத்தின் திருவரங்குளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆட்களையும் வேன்களில் அழைத்து வருகின்றனர்.

ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால், களை எடுக்கும் பணி தாமதமானாலும், தற்போது அறந்தாங்கி பகுதியில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தங்கள் சாகுபடி செய்துள்ள நெற்பயிரை பாதுகாக்கும் வகையில் தற்போது பெய்துள்ள மழை ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.